"தலைவர் காமராஜ்"

LEADER KAMARAJ

(வாழ்க்கை வரலாறுடன்)

வெளியீடு:

சதானந்தா புத்தக நிலையம்,

விருதுநகர்.

(1969)

முதற்பதிப்பு: பிப்ரவரி 1949.
பதிப்புரிமை

விலை ரூ. 2—8—0

SADHANANDHA PUTHAGA NILAYAM,
VIRUDHUNAGAR.

சதானந்தா அச்சகம், விருதுநகர்.

தலைவர் காமராஜ்



வணக்கம்!

முன்னுரை வழங்கிய

சுதந்திர இந்தியாவின் முன்னாள் நிதியமைச்சர்

திரு. ரா. க. சண்முகம் செட்டியார்

முன்னுரை

உலக மக்கள் எல்லோரும் ஒரே சமமான நிலையில் தான் பிறக்கின்றனர்; பிறப்பின் காரணமாக மக்களிடையில் உயர்வு தாழ்வு என்பது இல்லை—இது இக்காலத்து அரசியல்—சமூகக் கோள்கை. எல்லோரும் ஒரே இயல்புடனும், சக்தியுடனும் பிறக்கின்றார்கள் என்பதல்ல இக் கோள்கையின் கருத்து. பிறவியினால் மட்டும் தனக்குத் தனிப்பட்ட உரிமையுண்டு என்று எவனும் எண்ணக் கூடாது என்பதுதான் இதன் பொருள்.

ஆரம்பத்தில் மனிதன் மிருகங்களைப் போல் காட்டில் உணவு தேடிக்கொண்டு அலைந்துகொண்டிருந்தான். கூட்டத்தில் "தலைவன்" என்று ஒருவன் தோன்றியபின் தான் "சமூகம்" என்பது ஆரம்பித்தது. அரசியல், நாகரீகம் எல்லாம் அதற்குப் பின்தான். தலைவனின்றி எந்தச் சமூகமும் ஸ்தாபனமும் நிலைபெறாது.

எப்படி ஒருவன் ஒரு சமூகத்தில் 'தலைவன்' பதவி அடைகின்றான்? அனுபவம், கல்வி, முயற்சி, ஊக்கம், நல்ல குணம்—இவைகளாலா? இவை எல்லாம் அவசியம் தான். ஆனால், பிறவியிலேயே பெற்ற தனிப்பட்ட சக்தி ஒன்று இருக்க வேண்டும்.

காமராஜ் அவர்களைப்பற்றி நினைக்கும்போது இந்த எண்ணங்களேல்லாம் உதிக்கின்றன. காமராஜின் பிறப்பு

வளர்ப்பில் குறிப்பிடத்தக்கதாய் ஒன்றுமில்லை. இருந்த போதிலும் நாட்டின் விடுதலை இயக்கம் மும்மரமானதும், காமராஜ் தன்னை அறியாமலே தலைவர் ஆனார். பிறவியிலே ஒரு தனிப்பட்ட சக்தி அவருக்கு இல்லாமலிருந்தால், அவர் இந்தப் பதவியை அடைந்திருக்க முடியாது.

தமிழ் நாட்டின் தலைவராய் காமராஜ் செய்துவரும் பணியை நான் பாராட்டுகின்றேன். தன் மனதில் உண்மை என்று தோன்றியதை மனதிடத்துடன் கையாண்டு வந்திருக்கிறார்.

இன்று காமராஜ் அவர்களுக்கு தமிழ்நாட்டில் உள்ள செல்வாக்கானது அவருடைய தலையில் பெரிய பொறுப்பை சுமத்தியிருக்கின்றது. விடுதலைப் போரின் வெற்றி தலைவர்களின் பொறுப்பை அதிகப்படுத்திவிட்டது. போர்க்களத்தில் தலைமை தாங்குவதைவிட, வெற்றிக்குடையின் கீழ் தலைமை வகிப்பது கடினம்.

இந்தச் சிறிய புத்தகம், தமிழ் நாட்டு இளைஞர்களுக்கு ஊக்கத்தைத் தரும்; காமராஜ் அவர்களிடமிருந்து தமிழ்நாடு என்ன எதிர்பார்க்கின்றதென்று அவருக்கு நினைவையும் ஊட்டும்.

கோயமுத்தூர்,
7—2—'49.

நன்றியுரை

படித்தவர்கள், பணக்காரர்கள், தங்கள் செல்வாக்கை உபயோகித்து பட்டம், பதவி பெறுகிறார்கள்; கிடைக்கா விட்டால் அதற்குத்தக்க சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள் கிறார்கள். அரசியலிலும், இம்முறைதான் நெடுநாளாகத் தொத்துவியாதிபோல் பரவியிருக்கிறது. இப் பரம்பரைப் பாத்தியதைக்குச் சீட்டுக் கொடுத்து, உண்மை ஊழியத் திற்கும், உழைப்பிற்கும் உரிய இடம் பெற்ற **தலைவர் காமராஜ்** அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், முக்கிய பிரமுகர்களின் அபிப்பிராயங்களையும் தொகுத்து வெளி யிட்டால், வருங்கால வாலிபர்களுக்கு விடிவெள்ளி போன்றும், வீண் சந்தேகம் கொண்டார்க்கு விஷயம் சரியாகப் புரிந்துகொள்வதற்கும் ஏதுவாகும் என்ற கருத் துடன் இந் நூலை வெளியிட முன்வந்தேன்.

"தலைவர் காமராஜபற்றித் தங்கள் கருத்துக்களை, தயவு செய்து அனுப்பி வைக்க வேண்டுகிறேன்" என்று கடிதங்கள் எழுதி, தமிழ் நாட்டின் எல்லா பிரமுகர்களுக் கும், கட்சி பேதமின்றி, அனுப்பி வைத்தேன். ஆயினும், "ஒன்றரையணா தபாலுக்காக யாராவது எழுதுவார்களா? நேரில்கண்டு கேட்டாலாவது ஏதாவது கிடைக்கும்" என்று எனக்கே நம்பிக்கை இல்லாதிருந்தது. ஆனால், நான் அனுப்பிய மூன்றாம் நாளே ஒரு தபால், கனம் டாக்டர் T. S. S. ராஜன் அவர்களிடமிருந்து வந்தது. நம் கடிதத் திற்குப் பதில்கூட எழுத அமைச்சர்களுக்கு நேரம் இருக் கிறதா? "ஓய்வு இல்லை என்றுதான் எழுதியிருப்பார்" என்று நினைத்தபடியே உறையைப் பிரித்தேன். உள்ளே, நான் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறாக, கட்டுரையே அனுப்பி இருந்தார். என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஆதன்பின் அடுத்தடுத்து, அமைச்சர்களும், அறிஞர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களை வழங்கினர்கள். ஆனல், அவர்களில் அநேகரை நான் இதுவரை நேரில் சந்தித்ததுமில்லை; இதற்குமுன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டதுமல்ல. இருப்பினும், என் எண்ணத்திற்கு இசைந்த பிரமுகர்களுக்கும், திரு. காமராஜ் மீது கொண்ட வாஞ்சையை கருத்துரையாகக் கொடுத்து அலங்கரித்த, 'ராஷ்டிரபதி' டாக்டர் B. பட்டாபி சீதாராமையா அவர்களுக்கும், நான் என்ன கைம்மாறு செய்வது! எல்லோருக்கும் என் அன்பு கலந்த நன்றி!

இனிய வாசனை இருந்தால்தானே பூவிற்குச் சிறப்பு! பூப்போன்ற புத்தகம் தயாராகிவிட்டது. அதற்கு முன்னுரை என்ற வாசனைக்கு என் செய்வது? அதற்குரியவர் தலைசிறந்த அரசியல் சிற்பியாகவும், தமிழ்மகனாகவும் இருக்கவேண்டுமே என்று எண்ணியபொழுது, அகக் கண்முன் தோன்றினர், சுதந்திர இந்தியாவின் முன்னாள் நிதியமைச்சர் திரு. R.K. சண்முகம் செட்டியார் அவர்கள். நேரில் சென்று தெரிவித்தபொழுது, அன்புடன் உபசரித்து, இன்சொல் மொழிந்து என் வேண்டுகோளைப் பூர்த்திசெய்த அன்னாருக்கும், இந்நூல் வெளிவரப் பல வழிகளிலும் உதவிய திரு. A.M. திருவண்ணாமலை B. A., திரு P. P. M. தனுஷ்கோடி நாடார், ஆசிரியர் திரு M. சங்கரலிங்கம் B.A., L.T., ஆகியோர்களுக்கும், மற்றுமுள்ள அன்பர்களுக்கும் என் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சர்வதாரி, மாசி 1
12—2—1949

நா. சதானந்தம்,
விருதுநகர்.

கருத்துரை வழங்கியவர்கள்

1. திரு டாக்டர் B. பட்டாபி சீதாராமையா
தலைவர், அ. இ. கா. கமிட்டி 9
2. ,, எஸ். வெங்கட்ராமன்
காரியதரிசி, த. நா. கா. கமிட்டி 15
3. ,, நாரண - துரைக்கண்ணன் 17
4. ,, ரா. பாலசுப்ரமணியன் 28
5. ,, C. N. முத்துரங்க முதலியார் B.A , M.L.C.
(14—10—1948 ல் வழங்கியது) 30
6. திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் 31
7. கனம் T. S. S. ராஜன் அமைச்சர், சென்னை. 33
8. திரு கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை 36
9. திரு யோகி சுத்தானந்த பாரதியார் 38
10. கனம் B. கோபால் ரெட்டி அமைச்சர், சென்னை. 45
11. திரு கி. ஆ. பெ. விசுவநாதம் 48
12. திரு டாக்டர் P. சுப்பராயன் 53
13. கனம் J. சிவசண்முகம் பிள்ளை
சென்னை சட்டசபைத் தலைவர் 57
14. திரு நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் M.A.,B.L., 58
15. கனம் A. B. ஷெட்டி அமைச்சர், சென்னை. 60
16. திரு க. நாராயணன் ஆசிரியர், 'தாய்நாடு' 62
17. திரு P. V. A. அப்துல்சலாம் அஸாத் 68
18. கனம் H. சீதாராம ரெட்டி அமைச்சர், சென்னை. 72
19. கனம் M. பக்தவத்சலம் அமைச்சர், சென்னை. 74
20. கனம் V. கூர்மையா அமைச்சர், சென்னை. 76
21. திரு கி. வா. ஜகந்நாதன் ஆசிரியர், 'கலைமகள்' 78
22. கனம் K. மாதவமேனன் அமைச்சர், சென்னை. 79

23. திரு எஸ். எஸ். மாரிசாமி ஆசிரியர் 'காண்டீபம்' 82
24 புரட்சிக் கவிஞர் திரு பாரதிதாசன்
ஆசிரியர் 'பாரதிதாசன் குயில்' 92
25. கனம் K. சந்திரமௌலி அமைச்சர், சென்னை. 95
26. சென்னை ஷெரீப் S. A. ஷாபி முகம்மத்
(18—10—1948ல் எழுதியது) 99
27. திரு V. M. உபயதுல்லா
உபதலைவர், த. நா. க. கமிட்டி. 103
28. திரு காளா வெங்கட்டராவ் (2—8—48ல் எழுதியது)
காரியதரிசி, அ. இ. கா. கமிட்டி. 111
29. திரு புலவர் இ. பச்சையப்பா இளையபெருமாள்
ஆசிரியர் 'சன்மார்க்க சபதம்' 114
30. திரு S. நதானியல்
தலைவர், தி. த. நா. கா. கமிட்டி. 116
31. திருமதி லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி
(திரு சத்தியமூர்த்தியின் புதல்வி) 127
32. திரு சி. இலக்குவனார் M. O. L.
ஆசிரியர் 'இலக்கியம்' 129
33. திரு S. A. தேவநாயக அய்யா M. L. A. 135
34. நாடகக்கலை மணி திரு T. K. சண்முகம் 141
35. தலைவர் காமராஜ் அவர்களின் வாழ்க்கை வரலாறு 143



சுதந்திர பிதா

2—10—1869 — 30—1—1948

All India Congress Committee

7, JANTAR MANTAR ROAD

NEW DELHI

Phone: 40320
Grams: "CONGRESS"

Camp: Madras
Date: 19th January '49

Mr. Kamaraja Nadar has a personality and he stands unique in the history of South India. The leaders of the Province have all emerged from the English-educated aristocracy and the unsophisticated people of the villages have little chance against men who studied and spoke the language of the Rulers and became a class by themselves. But new times bring new leaders and the popular movement, rooted in village life and aiming at a pyramidal structure of Indian nationalism broadbased upon the six and a half lakhs of villages, has thrown up village leaders of untutored capacities who have ranked equally with the city leaders who are the products of western education.

Mr. Kamaraja Nadar is well read in English and is quite able to understand a draft and amend it by suggesting suitable changes. He is always silent by temperament but stern in conduct. He has conserved his strength and is not one who wastes his words over any controversial matter. He has built up a type of leadership which is his own. His influence upon the masses and upon the classes is unique and his command of the popular forces in the domain of the Congress and in the public life of South India is unchallenged. He is not merely respected but loved and even feared, for he has a moral fervour which strikes genuine fear into the minds of his following. He has no conflicting interestes in life, for he is a bachelor, and he devotes his whole time and energy to the cause of the Nation. In the last analysis, it must be admitted, that however mundane people may be, they have respect for sacrifice and a man of sacrifice is always assigned a first place in the ranks of politicians or Satya-

grahis, and equally in the affections of the Nation. Kamaraj has a bright future and of unknown potentialities and we shall ardently await his rise to higher and still higher honours. .



ராஷ்டிரபதி

டாக்டர் பட்டாபி சீதாராமையா

உயர்திரு:
டாக்டர் B. பட்டாபி சீதாராமையா
"ராஷ்டிரபதி"
அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி

—****—

ஸ்ரீ காமராஜ் நாடார் தனிச் சிறப்பு வாய்ந்தவர். தென்னிந்திய சரித்திரத்தில் அவர் அடைந்த சிறப்புக்கு ஈடு இணை கிடையாது. மாகாணத் தலைவர்களெல்லாம் படித்த பணக்கார வகுப்பினரிடையிலிருந்தே தோன்றினர். அரசினரின் பாஷையைக் கற்றறிந்து அதிலேயே லாவகமாகப் பேசுபவர்களே மீறி, சூதுவாதற்ற கிராமவாசிகளின் பிரதிநிதிகள் முன்னணிக்கு வருவது துர்லபம். ஆனால், காலம் மாற மாற புதுப்புதுத் தலைவர்கள் தோன்றினார்கள். பொதுஜனப் போராட்டத்தின் மூலம் கோபுரம் போல் எழுந்த தேசிய வாழ்க்கை 6½ லட்சம் கிராமங்களின் பிரதிபலிப்பாயிருந்தது. இந்த இயக்கத்தின் பயனாகத் தோன்றிய கிராமியத் தலைவர்கள், மேல்நாட்டுப் படிப்பிலிருந்து கிளம்பிய நகரத் தலைவர்களுக்குச் சமதையாக செல்வாக்குடையவர்களாகத் திகழ்ந்தார்கள்.

ஸ்ரீ காமராஜ் நாடார் ஆங்கிலம் நன்றாகப் படித்தவர். ஆங்கிலத்தில் தயார் செய்த நகல்களைப் புரிந்து கொண்டு அதில் தகுந்த மாறுதல்களும் செய்யக்கூடியவர். அவர் இயல்பாகவே அதிகம் பேசமாட்டார். ஆனால், உறுதியான நடத்தையுள்ளவர். அவர் தன் சக்தியைச் சிதறடிக்காமல் சேமித்து வைப்பவர். விவாதத்திற்குரிய காரியங்களில்கூட வீண் வாதத்தில் காலங் கடத்த

மாட்டார். அவர் தலைமைப் பதவியில் ஒரு தனித் தன்மைக்கு உதாரணமாக விளங்குகிறார். பாமர மக்களிடமும் பிறரிடமும் அவருக்குள்ள செல்வாக்குக்கு நிகரில்லை. பொதுஜன சக்திகளைத் திரட்டி கையாள்வதில் காங்கிரஸிலும் தென்னிந்தியப் பொது வாழ்விலும் அவருக்குச் சமமாக யாரையும் காண முடியாது.

அவரைப் பிறர் மதிப்பதுடனில்லாமல், அவரிடம் அன்பு செலுத்துகின்றனர். சிலர் அவரைக் கண்டு அஞ்சவும் செய்கின்றனர் என்றால் மிகையாகாது. இதற்குக் காரணம் அவருடைய தன்னலமற்ற தன்மை அவரைப் பின்பற்றுபவர்களிடையே ஒருவித அச்சத்தை உண்டாக்குகிறது என்பதுதான். அவருக்கு வாழ்க்கையில் மாறுபட்ட அக்கறைகள் கிடையாது. ஏனெனில், அவர் பிரம்மச்சாரி; தனது பூரா காலத்தையும் சக்தியையும் தேச கைங்கர்யத்திற்காகவே செலவிடுகிறார். கூர்ந்து பார்த்தால் மக்கள் எவ்வளவுதான் இகலோகப் பற்றுள்ளவர்களாயிருந்தாலும், அவர்கள் தியாகத்திற்கு மதிப்பளிக்கிறார்கள். அரசியல் வாதிகளில்—சத்தியாக்கிரகிகளில் தியாகபுருஷர்களுக்கு முதல் ஸ்தானம் அளிக்கப்படுகிறது. அவர்களைத் தேச மக்கள் அன்புடன் பூஜிக்கிறார்கள். அவருடைய எதிர்காலம் ஒளியுள்ளதாயிருக்கும். அவர் என்ன சாதிப்பார் என்பதைத் திட்டமிட்டுக் கூற முடியாது. அவர் இன்னும் உயர் பதவி வகிப்பதை ஆர்வத்துடன் எதிர்பார்ப்போம்.

திரு. எஸ். வெங்கட்ராமன்

காரியதரிசி—தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி—சென்னை

நண்பர் காமராஜ்!

இருபத்தைந்து வருஷங்களாக நெருங்கிப் பழகிய நண்பனின் குணங்களைப்பற்றி எழுதுவது கடினம். மற்றவர்களைக்காட்டிலும் எதில் காமராஜ் தனிச் சிறப்புடன் விளங்குகிறார் என்பதை ஓரளவு சொல்லலாம்.

ஆடம்பரமற்ற எளிய தோற்றம்; சகலருடனும் சகஜமாக சிரித்துப் பழகும் சுபாவம்; எடுத்த காரியத்தை சாதிப்பதில் விடாப்பிடி; ஜாதி வித்தியாசமும் துவேஷமும் இல்லாத மனப்பான்மை—இவைகள் நண்பர் காமராஜின் குண விசேஷங்கள்.

ஆராய்ந்து செய்ய வேண்டுமென்று முடிவு கட்டிய எந்த விஷயத்திலும் என் நண்பர் அசிரத்தையாகவோ அல்லது முயற்சிக் குறைவாகவோ இருந்ததில்லை. தன்னைச் சுற்றியுள்ள நண்பர்கள் சோர்வு காட்டினாலும் ஊக்கம் தளராது வேலை செய்வார். அப்போதிருந்த தமிழ் நாட்டின் ராஜீய சூழ்நிலையில் அவரைத்தேடி வந்தது தமிழ் நாட்டின் தலைவர் பதவி.

காலஞ்சென்ற ஸ்ரீ சத்தியமூர்த்தியிடம் நண்பர் காமராஜுக்கு அளவற்ற மதிப்பும், பிரேமையும் உண்டு என்பது தமிழ் நாடறிந்த விஷயம். தலைவர் பதவி ஏற்றது முதல் இன்று வரை எவ்வளவு திறமையுடன் தொண்டாற்றி வந்திருக்கிறார் என்பதை இங்கு குறிப்பிட வேண்டியதில்லை.

இவருடைய திறமையும், பொது மக்களிடமும், காங்கிரஸ் ஊழியர்களிடமும் இவருக்கு இருக்கும் அபார செல்வாக்கையும் உணர்ந்தே காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அங்கத்தினர் பதவி அவருக்கு அளிக்கப்பட்டது.

அரசியல் விவகாரங்களில் அனுபவம் பெற்றவர்கள் என்று கருதப் பட்டவர்களையெல்லாம் அதிசயிக்கச்செய்யும் வகையில் திறம்பட தமிழ் நாட்டில் ராஜிய விவ்காரங்களை கவனித்து வருகிற பெருமை நண்பர் காமராஜைச் சேர்ந்ததாகும்.

ஒரு காரியத்தை அரசாங்கத்தார் செய்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். அது தவறு என்று நமக்குத் தோன்றுகிறது. அந்தத் தவறை அரசாங்கத்தாருக்கு எடுத்துக் காட்ட வேண்டுவது நமது கடமை என்று நினைத்தால், அதைக் கட்டாயம் எடுத்துக் காட்ட வேண்டுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அவ்விதம் எடுத்துக் காட்டுவதை ராஜத்துவேஷம் என்று அரசாங்கத்தார் சொன்னாலும், அதற்காகப் பின் வாங்கக்கூடாது; அந்த ராஜத்துவேஷத்தைச் செய்தே தீரவேண்டும். ஆனால், அதைச் செய்வது உங்களுடைய பொறுப்பு. அதனால், ஏற்படும் விளைவுகளை நீங்கள் அனுபவிக்கத் தயாராயிருக்கவேண்டும்.

—காந்திஜீ

நாரண-துரைக்கண்ணன்
சென்னை

"தொண்டர் - தலைவர்"

தமிழ் நாட்டிலுள்ள மக்கட் பிரிவினரில் நாடார் சமூகம் குறிப்பிடத் தக்கதொன்று. கல்விச்செல்வம், பொருட் செல்வம் மிகுந்தவர்கள் இச்சமூகத்தில் ஏராளமாக உள்ளனர். வியாபாரத் துறையில் குஜராத்திகளைப் போல் முன்னணியில் இருக்கின்றனர் இச் சமூகத்தினர். மற்றும் பல துறைகளிலும் இவர்கள் முற்போக்கான நிலையிலேயே இருக்கின்றனர்.

இத்தகைய சமூகம், தேசிய இயக்கங்களிலும், சுதந்திரப் போராட்டங்களிலும் மட்டும் ஈடுபட முன்வருவதில்லை என்ற அவப் பெயர் நீண்ட காலமாக இருந்து

வந்திருக்கிறது. என் நண்பர் ஒருவர் அடிக்கடி சொல்லுவார்: "ஐயோ! நாடார்களா? அவர்களைப்போல் தேசிய இயக்கங்களுக்கு விரோதிகள் யாரும் இருக்க முடியாது, சார்!" என்று.

இக் கூற்று உண்மையா? நாடார் சமூகத்தினர்க்குத் தேச பக்தி கிடையாதா?, சுதந்திர உணர்ச்சியில்லையா? அல்லது போராட்டங்களில் ஈடுபடத் தைரியமில்லாதவர்களா? வீரமில்லாதவர்களா? அதெல்லாம் ஒன்றுமில்லை. தேசிய இயக்கங்களுக்குப் பொதுவாக நாடார்கள் விரோதமாயிருந்தார்கள் என்பது ஓரளவு உண்மையே. ஆனால், அச் சமூகத்தினர் தேச பக்தியில் மற்றெந்தச் சமூகத்தினருக்கும் குறைந்தவர்களல்லர். அவர்களுக்குள்ள சுதந்திர உணர்ச்சி மலையளவு உயர்ந்தது. நாடார்களின் அஞ்சா நெஞ்சத்துக்கும் வீர பராக்கிரமத்துக்கும் தமிழ் நாட்டு வரலாற்றில் எத்தனையோ சான்றுகள் உண்டு. வீரமரபின் வழி வழி வந்தவர்கள் நாடார் சமூகத்தினர். அவர்கள் இன்று தமிழர் சமுதாயத்தில் மறவர் போன்ற ஒருசில ஜாதியினரின் நீங்காப் பகைமைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்றால், சமுதாய நிலையில் சரிசமத்துவம் அளிக்கப் படாமல் தாழ்த்தப்பட்டு வருகிறார்கள், கேவலப்படுத்தப் பட்டு வருகிறார்களென்றால், அதற்கு அவர்கள் பிற சமூகத்தினரின் ஆதிக்கத்துக்கோ அதிகாரத்துக்கோ சாதாரணமாக அடங்கியொடுங்காத—தலை வணங்காத—வீர உணர்ச்சி—பெருமித உணர்ச்சிதான் முக்கிய காரணமாகும்.

இப்படிப்பட்ட வீரமிக்க மக்கள், சுதந்திர ஆர்வமுள்ள மக்கள் ஏன், தேசிய இயக்கங்களுக்கு விரோதமா

யிருக்க வேண்டும்? இதைச் சிந்தித்துப் பார்க்க யாரும் முற்படுவதில்லை. நாடார்கள் தேசீய இயக்கங்களுக்கு விரோதிகள், சுதந்திரத்துக்கு விரோதிகள் என்று சுலபமாகக் குறை சொல்வோர்தாம் அதிகமாயிருக்கின்றனர். இவ்விதம் நாடார்களைக் குறை சொல்வோர் நோக்கில் வைத்துப் பார்த்தால், கள்ளர், குடும்பர், படையாச்சிகள் முதலிய பிற்போக்கு வகுப்பினரும், பள்ளர், பறையர், தோட்டிகள் போன்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினரும்கூடத் தேசீய இயக்கங்களுக்கு விரோதமாகத்தான் இருந்து வந்திருக்கின்றனர். தேசீய ஸ்தாபனமான காங்கிரஸ் மகாசபைக்கு எதிராக இருந்துவரும் ஜஸ்டிஸ் கட்சி, சுயமரியாதை இயக்கம் போன்ற பல கட்சிகளில்தான் மேற்குறித்த வகுப்பினர் பெருவாரியாகச் சேர்ந்திருந்தனர்; சேர்ந்தில்லாவிட்டாலும், மேற்படி கட்சிகளில் அபிமானமுடையவர்களாயிருந்தனர்; காங்கிரஸ் மகாசபையின் சுதந்திரக் கோரிக்கையை வெற்றி பெறுமல் செய்ய, முஸ்லிம்லீக் போன்ற வகுப்புவாத ஸ்தாபனங்கள் போட்டு வந்த முட்டுக்கட்டைகளுக்கும் 'நேரடி நடவடிக்கை'களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பாலார் ஆதரவுகாட்டி வந்தனர் என்பன போன்ற உண்மைகளை நாட்டுநடப்பைக் கவனித்து வருவோர் அறிந்தே இருக்கின்றனர். ஆனல், இவ்வித நிலைமைக்கு என்ன காரணம் என்பதைத்தான் அறிய எவரும் முயற்சி செய்யவில்லை. ஏன்? சிரத்தையே கொள்ளவில்லை என்றுகூடச் சொல்லலாம்.

காங்கிரஸ் மகாசபை தேச விடுதலைக்காகப் போராடியது என்பதை மேற்குறித்த வகுப்பினர் மறுக்கவில்லை. காந்தியடிகள் மக்களைப் பிணித்துள்ள அடிமைத் தளையை அறுத்தெறிய அல்லும் பகலும் பாடுபட்டார் என்ற

விஷயத்திலும் அவர்கள் சந்தேகங்கொள்ளவில்லை. ஆனால், 'காங்கிரஸ் மகாசபையும் காந்தியடிகளும் நடத்திவரும் சத்தியாக்கிரகப் போராட்டங்களினால் ஏற்படக்கூடிய சுதந்திரம் எத்தகையதாக இருக்கும்? அதுவும் சாதிச் சழக்கு மிகுந்துள்ள தமிழ்நாட்டில் வாழும் தங்களுக்கு (கிடைக்கப்போகும்) அரசியல் சுதந்திரத்தினால் சமூக நீதி வழங்கப்படுமா? சமத்துவமும் சம உரிமையும் 'சமசந்தர்ப்பமும் அளிக்கப்படுமா?' என்றே அவர்கள் சந்தேகப்பட்டனர். ஏனென்றால், தமிழ் நாட்டில் உயர் சாதியினர் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் ஒருசிலர் வெகுகாலமாக மற்றச் சமூகத்தினரைத் தாழ்ந்தவர்களென்று கூறிக் கீழ்மைப்படுத்திப் பலவிதங்களிலும், அடக்கியொடுக்கி வருவது யாவரும் அறிந்ததே. 'அன்னிய ஆட்சியானாலும் பிரிட்டிஷ் அரசாங்கம் வந்த பின்னர், கூடுமானவரை, எல்லா மக்களுக்கும் கல்வி முதலியவைகளைப் பயில்வதற்கும் பல துறைகளிலும் முன்னேற்றமடைவதற்கும் சந்தர்ப்பங் கொடுக்கப்பட்டு வந்தது. சாதி பேதக் கொடுமைகளும் வெகுவாகக் குறைந்து வந்தன. இவ்வித நிலைமை, நமக்குச் சுயராஜ்யம் வந்தபின்னர் ஏற்படுமா? நீண்ட காலமாக நம்மை அடக்கியாண்டு ஏவல் புரிய வைத்து வந்த உயர் சாதியினர் என்போர் ஒருவேளை மீண்டும் அரசியல் ஆதிக்கம் பெற்றால், தங்களைப் பழைமை போலவே நடத்தத் தொடங்கினால் என்ன செய்வது?' என்பனபோன்ற ஐயங்களே, மேற்குறித்தசமூகத்தினரைச் சுதந்திரப் போராட்ட இயக்கங்களில் அதிகமாகச் சிரத்தை கொள்ளவொட்டாமல் தடுத்து வந்தன. அதற்கேற்பவே, தேசீய இயக்கங்களில் ஈடுபட்டிருந்த உயர் சாதியினர் என்போர் பலருடைய நடத்தைகளும் இருந்துவந்தன. 'நாம் அனைவரும் சகோதரர்கள்; நம்மில் உயர்வு தாழ்வு

கூடாது. தீண்டாதார்களையும் நாம் சகோதரர்களாகப் பாவிக்க வேண்டும்' என்று அவர்களில் பலர் மேடைகளில் அழகாகப் பிரசங்கம் செய்வர். ஆனால், அவர்களே தனிப் பட்ட முறையில் பழகும்போது மிகுந்த வேற்றுமையைக் காட்டுவர். மிஞ்சி இம் மாறுபட்ட நிலையைச் சுட்டிக் காட்டி யாரேனும் கேள்வி கேட்டால், 'நாட்டுக்குச் சுதந் திரம் வந்துவிட்டால், அப்புறம் எல்லாம் சரியாய்ப்போகும்' என்று கூறி மழுப்புவர். இவர்களைப்போன்ற போலி களின் சொல்லும் செயலும் மேற்குறித்த சமுகத்தினர் களுக்கு மேலும் சந்தேகத்தையும் அவநம்பிக்கையையும் உண்டுபண்ணினதில் ஆச்சரியமில்லை. 'முதலில் தங்க ளுடன் வாழும் மக்களுக்குச் சமூக சுதந்திரம் வழங்காத வர்களா நாட்டுச் சுதந்திரத்துக்குப் பாடுபடுகிறார்கள்? இதெல்லாம் வெறும் பாசாங்கு' என அவர்கள் பொது வாகவே, காங்கிரஸ்காரர்களைப்பற்றிக் கருதலாயினர்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, காங்கிரஸ் மகாசபை, உயர் சாதியினர் என்போரின் நலனுக்கான ஸ்தாபனம் என்றே கருதப்படக்கூடிய நிலையில் இருந்து வந்தது. ஏனென்றால், அரசாங்க ஸ்தாபனங்களில் ஆதிக்கம் வகித்துவந்தது போலவே, காங்கிரஸ் ஸ்தாபனத் திலும் உயர் சாதியினர் என்போரே பெரும்பாலும் ஆதிக்கம் வகித்து வந்தனர். அவர்களில் பலர் தொண் டர்களின் உழைப்பினால் தலைவர்களாய் வந்து பெரும் பதவிகளை வகித்துப் பயன்பெற்று வந்தார்கள். இவ்வித விபரீத நிலைமைதான், நாடார் சமூகம் போன்ற பிற் போக்கு வகுப்பினரையும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை யும் காங்கிரஸ் மகாசபையைப்பற்றித் தப்பபிப்பிராயங் கொள்ளச் செய்தது. காங்கிரஸ்காரர்கள் நடத்திய

சுதந்திரப் போராட்ட இயக்கங்களில் அவர்களை ஆரம்ப காலத்தில் அதிகமாக ஈடுபடவொட்டாமல் தடுத்துவந்தது.

இவ்வித நிலைமையிலும், 'தேச விடுதலைதான் முக்கியம்; அடுத்தபடிதான் எல்லாம்; நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டால், சமூக சுதந்திரமும் சரி சமத்துவ நிலையும் ஏற்பட்டுவிடும்' என்று மனப்பூர்வமாக நம்பி, காந்தியடிகளின் சுதந்திர சங்க நாதத்தைக் கேட்டு உணர்ச்சி பெற்று உரிமை வேட்கையுடன் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர், இன்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் திகழ்ந்து வரும் திரு. **காமராஜ்.** அன்று காங்கிரஸில் சேர்ந்து சுதந்திரப்போரில் தொண்டராய்ச் சேர்ந்தபோது காமராஜ் ஊர் பேர் தெரியாத மனிதராயிருந்தார். இன்றோ அவர் அகிலம் அறிந்து போற்றும் தலைவராயிருக்கிறார்.

திரு. காமராஜ் தமிழ்நாடு காங்கிரஸ் தலைமையைப் பெறத் தவம் கிடக்கவில்லை. சிலர்போல் அவர் தலைமைப் பதவிக்கு ஆசைப்பட்டு அதைத் தேடியலையவில்லை. தலைமைப் பதவிதான் அவரைத் தேடி வலிய வந்து அடைந்தது. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற கொள்கையுடையவர் திரு. காமராஜ். ஆதலால், அவர் என்றும் தொண்டராகவே இருந்து தேசத்தொண்டு புரிய விரும்பினார்; ஆனால், அவருடைய தன்னலமற்ற தொண்டு அவரைத் தலைமைப் பீடத்தில் ஏற்றி வைத்தது.

காந்தீயத்தால் கவரப்பட்ட தமிழ் இளைஞர்களில் காமராஜ் குறிப்பிடத்தக்கவர். **ஒத்துழையாப் போராட்டக்** காலத்திலிருந்து அவர் காந்தியடிகளின் சொற்படி சேவை செய்து வந்திருக்கிறார். போராட்டம் என்றாலும் அவர்

முன்னணியில் இருப்பார். நிர்மாண வேலைத் திட்டமென்றாலும் அவர் ஆர்வத்தோடு செய்வார். **கள்ளுக்கடை மறியல், அன்னியத் துணி பகிஷ்காரம்** முதலியவைகளில் ஈடுபட்டுத் தடியடிபட்டிருக்கிறார். **உப்புச் சத்தியாக்கிரகம், தனிப்பட்ட சத்தியாக்கிரகம்** முதலிய சுதந்திரப் போராட்டங்களில் கலந்துகொண்டு பலமுறை சிறை சென்றிருக்கிறார். 1942ம் ஆண்டில் காட்டுத் தீப்போல் நாடெங்கணும் பரவிப் பிரிட்டிஷ் அரசாங்கத்தையே கிடுகிடுக்க வைத்த **ஆகஸ்டுப் புரட்சி**யிலும் அவர் முன்னணியில் நின்று சிறைப்பட்டார். இதுபோன்ற தேச சேவையும் தியாகச் செயல்களும்தாம் திரு. காமராஜை இன்றுள்ள உன்னத நிலைக்கு உயர்த்தியிருக்கிறது என்றால் மிகையாகாது. உண்மை உழைப்புக்கு எப்போதும் மதிப்பு உண்டு என்பதற்கு, திரு. காமராஜ் காங்கிரஸ் தலைமையை அலங்கரிப்பதொன்றே சிறந்த உதாரணமாகும்.

திரு. காமராஜ் செல்வந்தராய் இருந்திருந்தால் அவர் தலைவராய் வந்திருப்பது வியப்புக்குரிய விஷயமல்ல. பணக்காரராயிருப்போர் யாராயிருந்தாலும், எந்தக் கட்சியிலிருந்தாலும் அவர்கள் தலைவர்களாகச் சுலபமாக வந்துவிட முடியும். சிறிது சிரமமாயிருந்தாலும் சூழ்ச்சி, சதி செய்து, ஆட்களை விலைக்கு வாங்கி எப்படியும் வந்துவிடுவார்கள். அப்படி அவர்கள் விரும்பாவிட்டாலும்கூட, சூழ்ந்திருப்போர் 'நீங்கள்தான் தலைவர் பதவிக்கு லாயக்கு; தலைவராயிருப்பதற்கே பிறந்திருக்கிறீர்கள்' என்றெல்லாம் துதி பாடி எப்பாடு பட்டாயினும் அவர்களைத் தலைவர்களாகக் கொண்டு வந்து விடுவார்கள். திரு காமராஜோ பரம ஏழை. அத்தகைய ஒருவர் தன் முயற்சியின்றியே தலைவராக வந்திருக்கிறார் என்பதுதான் அதிசயிக்கத்தக்க

தாகும். “நம் நாட்டில் ஜனநாயகம் ஒழுங்கான முறையில் உருவாகி வருகிறது; வெற்றிகூடப் பெற்று வருகிறது என்பதற்குத் திரு. காமராஜ் காங்கிரஸ் தலைமை பெற்றிருப்பது சரியான சான்றாகும்.

ராஜாஜி, சத்தியமூர்த்தி போன்ற தலைவர்கள், திரு. காமராஜ் அவர்களிடம் தமிழ் நாடு காங்கிரஸ் தலைமையை ஒப்படைத்தபோது, ஒருசிலர், ‘இவர் இதைச் சரிவர நிர்வகிக்க முடியுமா? இவருக்கு ஆங்கிலந் தெரியாதே? தமிழ்கூடச் சரியாகத் தெரியாதே?’ என்றெல்லாம் கூறினர். ‘எழுத்தறிவு போதியபடி இல்லாத ஒருவரை, சாதாரணத் தொண்டராயிருந்த ஒருவரைத் தலைவராக்கி விட்டார்களே? இவர் என்ன செய்யப் போகிறார்?’ என்று அலட்சியமாகக் கூறினர்; ஏளனஞ் செய்யலாயினர். பிரிட்டனில் முதன் முதலாகத் தொழிற் கட்சி மந்திரி சபையைக் கைப்பற்றியபோது, இஞ்சின் டிரைவர், சுரங்கத் தொழிலாளி போன்றவர்களே மந்திரிகளாக வந்தனர். அதைப் பார்த்து, படித்த கூட்டமும், பிரபுக் கூட்டமும் ஏளனஞ் செய்தன. ஆனால், ராம்ஸே மாக்டோனல்டைப் பிரதமராகக் கொண்ட தொழிற் கட்சி மந்திரி சபை எவ்வளவு திறமையாக அரசாங்கத்தை நிர்வாகம் செய்தது? இன்று அட்லீயைப் பிரதம மந்திரியாகவுடைய தொழிற் கட்சி மந்திரி சபை எப்பேர்ப்பட்ட நெருக்கடிகளையெல்லாம் சமாளித்து, அமெரிக்கா, ரஷ்யா போன்ற பெரிய பெரிய வல்லரசுகள்கூடப் பிரமிக்கும்படியாக அரசாட்சி செய்துவருகிறது? என்பதை நாம் பார்த்து வருகிறோம். முன்பு தொழிற் கட்சி மந்திரி சபையை ஏளனஞ் செய்த அதே கூட்டம் இப்பொழுது

அச் சபையின் நிர்வாகத் திறமையை வியந்து பாராட்டு கிறது. அதுபோலவே, திரு. காமராஜ் தலைமை பெற்றதைக் கண்டு முன் ஏளனஞ் செய்த ஒருசிலர் இப்போது அவருடைய நிர்வாகத் திறமையையும் ராஜதந்திரத்தையும் கண்டு வியப்புறுகின்றனர். திரு. காமராஜ் 'வாய்ப்பேச்சில் வீரரல்லா'விட்டாலும் திறம்படச் செயலாற்றுவதில் பெரிய வீரர் என்பதை, அவர் கடந்த எட்டு ஆண்டுகளில் பலவகையாகவும் நிரூபித்துக் காட்டி வருகிறார்.

திரு. காமராஜ் சாதாரண காலத்தில்—சமாதான காலத்தில் — அமைதியான காலத்தில் — தலைவராயில்லை. நெருக்கடியான காலத்தில்—குழப்பம் பல மிகுந்துள்ள காலத்தில்தான் தலைமையேற்றுக் காரியஞ் செய்துவருகிறார். அதுவும் ஓராண்டு அல்ல; ஈராண்டு அல்ல; எட்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பல கஷ்ட நஷ்டங்களையும் சோதனைகளையும் நெருக்கடிகளையும் சமாளித்து அரும் பெருங் காரியங்களைச் சாமர்த்தியமாகச் செய்து காங்கிரஸ் ஸ்தாபனத்தின் கௌரவத்தைக் காப்பாற்றியிருப்பதுமட்டு மல்ல; பெருமையேற்படவும் செய்திருக்கிறார். சாதாரண சமயத்தில் அமைதியான நிலையில் யாரும் தலைவராக இருந்துவிட முடியும். நெருக்கடி, கிளர்ச்சி, சச்சரவு முதலியன மலிந்து கிடக்கும் சமயத்தில் பெரும் பொறுப்பு ஏற்றுத் தலைமை வகிப்பதுதான் எப்பேர்ப்பட்டவருக்கும் சிரமமான காரியம். அத்தகைய சிரமமான வேலையை அலுப்புச் சலிப்பின்றிச் செய்து மகத்தான வெற்றி பல கண்டு வருகிறார் திரு. காமராஜ். நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை தரும்படியான செயல்களைச் செய்து வருவதே தமது தலையாய கடமை என்று கருதித் தம் முன்னிற்கும் காரியங்களைக் கண்ணுங் கருத்துமாய்ச்

செய்துவருவதால்தான் திரு. காமராஜ், எதிர்ப்படும் இடையூறுகளையும் சோதனைகளையும் கடந்து வெற்றிப்பாதையில் அடியெடுத்துக் கம்பீரமாக நிமிர்ந்து நடக்கிறார்.

அரசியல் எதிரிகளின் கடுமையான எதிர்ப்புக்களினின்றும், அவர் உயர்வு கண்டு பொறாமை கொண்டு தலைமைப் பீடத்தினின்றும் வீழ்த்த முயலும் காங்கிரஸ் போலிகளின் நயவஞ்சகங்களினின்றும் திரு. காமராஜைக் காப்பாற்றி வருபவை, அவருடைய ஒழுக்க சீலமும், பரிசுத்த வாழ்க்கையும், நடுநிலை திறம்பா நெஞ்சமும், சத்தியத்தின்பால் கொண்டுள்ள அசையா நம்பிக்கையுமே யாகும்.

திரு. காமராஜ் தேச சேவைக்காகவே தம் வாழ்க்கையை அர்ப்பணித்து விட்டிருக்கிறார். அவருக்கு வாழ்க்கைத் துணையாக இருப்பது பொதுநலத் தொண்டு தான். தேச நலன், மக்கள் நலன்தான் அவர் நலன். நாட்டு நலமும் மக்கள் நல்வாழ்வும்தான் அவர் வாழ்வு. நாட்டுச் சுதந்திரமும் மக்கள் சுதந்திரமும்தான் அவர் சுதந்திரம், மூச்சு, பேச்சு எல்லாம். உண்மையில் நாட்டு நலத்துக்காக—மக்கள் நலனுக்காகச் சர்வ சங்கப் பரித்தியாகஞ் செய்த ஒரு சிலரில் இவர் குறிப்பிடத்தக்கவர்.

திரு. காமராஜைப் பின்பற்றி நாடார் சமூகத்தினர் —முக்கியமாக இளைஞர்கள் பெரும்பாலார் காங்கிரஸில் சேர்ந்து சுதந்திரப் போராட்டங்களில் முன்னணியில் நின்று வீரர்களாய், தியாகிகளாய் விளங்கி வருகின்றனர். திரு. காமராஜின் அபார சேவை, நாடார் இளைஞர்களைத்

தேசிய இயக்கங்களிலெல்லாம், நாட்டில் ஏற்பட்டிருக்கும் எல்லாக் கட்சிகளிலும் முன்னணியில் இருக்கச் செய்திருக்கிறது.

திரு. காமராஜ் கள்ளுக்கடை மறியல் செய்த போது, உப்புச் சத்தியாக்கிரகஞ் செய்த காலத்து, 'நமக்கெல்லாம் இல்லாத தேச பக்தி இவனுக்கு எங்கிருந்தடா வந்தது? இந்த நாடாரிப் பயலை மரத்தில் கட்டி வைத்துத் தோலை யுரியுங்களடா!' என்று சொல்லித் துன்புறுத்திய பிரமுகர்கள்கூட, பின்னால், வரவேற்று உபசரித்து மரியாதை செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டதென்றால், திரு. காமராஜின் பெருமையைப்பற்றி அதிகமாக விவரிப்பானேன்!

கடைசியாக, ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால், திரு. காமராஜின் மகத்தான தேச சேவையால், இன்று நாடார் சமூகத்துக்கே என்றுமில்லாத பெருமை ஏற்பட்டிருக்கிறது. 'நாடார் சமூகத்தினர் சுதந்திரத்துக்கு விரோதிகள்' என்று தவறாகப் பரப்பப்பட்டிருந்த அவப்பெயரை, திரு. காமராஜ் தம்முடைய அரும் பெரும் தேச சேவையால் ஒரு நொடியில் போக்கிவிட்டார். ஆதலால், நாடார் சமூகத்தினர், அவருக்குப் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றனர். அவர்கள் மட்டுமென்ன; தமிழ் நாட்டு மக்களனைவருமே, தமிழ் நாட்டின் உயர்வுக்காகவும் தமிழ் மக்களின் நல் வாழ்வுக்காகவும் அல்லும் பகலும் பாடுபட்டு வரும் திரு. காமராஜுக்கு என்றென்றும் கடமைப்பட்டவர்களாவர். வாழ்க! காமராஜ். நீடூழி வாழ்க!

திரு ரா. பாலசுப்ரமணியன்

(நாமக்கல் கவிஞர் ராமலிங்கம்பிள்ளை புதல்வர்.)

நாமக்கல்

தமிழ் நாட்டின் தலைவன்

தமிழ்நாட்டுக் காங்கிரசின் தலைவ! நின்னைத்
தமிழ்மக்கள் உளமார வாழ்த்து கின்றார்.
அமிழ்தான தமிழ்போல உந்தன் கீர்த்தி
அகிலத்தில் நின்றேளிர அமலன் காப்பான்.

அரசியலாம் போர்க்களத்தில் அஞ்சா நெஞ்சன்
அருள்மிகுந்த காந்தியரின் ஆணை தாங்கி
பரிசைஎண்ணுத் தியாகமிகும் பணிகள் செய்தாய்
பாராளும் பலருமுனைப் பரவு கின்றார்.

சிக்கல்மிகும் சமயத்தில் சேவை பூண்டாய்
சினமறியா ஊக்கத்தால் சிறப்புப் பெற்றாய்
இக்கட்டு பலநேர்ந்தும் எதிர்த்து வென்றாய்
இன்னுரையே உன்னுடை ஏவல் கேட்க.

தலைமைதனைத் தாங்குதற்குக் கல்விப் பட்டம்
தான்இருக்க வேண்டுமென்ற தன்மை மாற்றி
நிலைகுலையா உறுதியுடன் நிமிர்ந்து நின்று
நீயடைந்த பெருமைகளை நினைப்போம் நித்தம்.

காமராஜ் எனும்பெயரைக் காதிற் கேட்டால்
காமத்தை வென்றதுபோல் களிப்புத் தோன்றும்
தாமாக வெறுமுழைப்பால் தலைவன் ஆகும்
தன்மைதனை உன்நினைவு தருமே ஐயா!

என்றுமுள தென்தமிழில் இசைகள் பாடி
எம்மான்அக் காந்திகதை இருக்கும் மட்டும்
நன்றியுடன் உன்சேவை நயத்தைப் போற்றி
நாடெங்கும் வாழ்த்தொலிக்க நலமே வாழ்க!

—()—

திரு சி. என். முத்துரங்கமுதலியார் பி.ஏ., எம்.எல்.சி. சென்னை

ஸ்ரீ காமராஜ் நாடார் அதிபால்யத்திலேயே காங்கிரஸ் தொண்டு ஆரம்பித்து எங்களுடன் கூட ஒத்துழைத்துத் தொண்டு ஆற்றினார். 'இளங் கன்று பயம் அறியாது' என்னும் முறையில் அவர் வெகு துணிச்சலாகவே காரியங்கள் செய்வது வழக்கம்.

வெகு காலம் காங்கிரஸ் தொண்டன் என்ற முறையில் தொண்டு ஆற்றி தலைமைப் பதவிக்கு லாயக்குப் பெற்றவர் அவர். சமீப காலத்தில் அவர் த. நா கா. கமிட்டியின் தலைவராக வந்ததும், காங்கிரஸ் ஸ்வதந்தர இயக்கத்தில் முயன்று சேர்ந்து காந்திஜீயின் கொள்கை எல்லாம் அவலம்பித்துத் தொண்டாற்றியது எல்லோரும் அறிந்ததே. 1940—42 இயக்கங்களில் அவர் முழுப் பங்கு எடுத்துக்கொண்டதும், அதனால் உண்டான கஷ்டங்களை ஏற்றுக்கொண்டதும் நான் சொல்லத் தேவையில்லை. அவர் ஏற்றுக்கொண்ட காரியங்களில் அவர்களுடைய எதிர்ப்பையும்கூட பொருட்படுத்தாமல் அவர் முன்னேறுவதை நாம் எல்லோரும் வியப்புடன் கண்டிருக்கிறோம். பிற்காலத்திலும் காங்கிரஸ் பக்தியும், தேசப் பணியும், தேச சேவையும், தேச ஒற்றுமையும் தன்னுடைய குறிக்கோளாகக் கொண்டு இன்னும் நெடுநாளைக்கு நம் நாட்டை நல்ல வழியில் நடத்துவார் என்பதில் எனக்கு ஐயமில்லை.

திருமதி. சரஸ்வதி பாண்டுரங்கம்

அங்கத்தினர், தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி &
சென்னை நகராண்மைக் கழகம், சென்னை.

தியாகிகளின் தலைவர் காமராஜ்!

காமராஜ் யார்? அன்று, ஒரு சாதாரணத் தொண்டன்; இன்று, தமிழ் நாட்டில் மாபெரும் தலைவர்! இன்று ராஜாஜி கவர்னர் ஜெனரலாக வீற்றிருக்கிறார் என்றால் அதில் காமராஜருக்கு ஒரு பெரிய பங்கு உண்டு.

சத்தியமூர்த்தி அவர்கள் தலைவராக விளங்கியதற்குக் காரணம், அவர் எதிரிகளை தவிடு பொடியாக்கும் பேச்சு வல்லமையாகும். ஆனால், காமராஜ் தலைசிறந்த தலைவராக விளங்குவதற்கு அவர் சொல்வன்மை அல்ல. மற்றது எது? அவர் செயல் வன்மை. இடைவிடாது பழகி, அவர்கள் ஆதரவால் ஸ்தாபனத்தைக் கட்டுப்பாடாக அமைக்கும் ஆற்றலும் அறிவும் கொண்ட அன்னாரை வெற்றியும் தலைமைப் பதவியும் தேடிச் செல்வது

இயற்கையே. இந்த உயர் நிலையில் நின்று எதிர்காலத்திலும் தேசப் பணி செய்யும் திறமையும் கொண்டுள்ளார். அஃதாவது ஒடுக்கப்பட்டவர்களுடைய விஷயத்தையும், தொழிலாளர்களுடைய விஷயத்தையும் நன்கு அறிந்து அவர்களுக்காகத் தொண்டாற்றி வருவதேயாகும். அவர் தேர்ந்தெடுத்த காரியக் கமிட்டியில் அரிஜன், தொழிலாளர் தலைவர், பெண் இனமும் கொண்டதாயுள்ளது:

அவருடைய வாழ்க்கைக்குச் சிகரம் வைத்தது போல் விளங்குவது, தமிழ்நாடு காங்கிரசின் ஆதரவில் அவர் ஏற்படுத்திய 'பொருளாதார நிபுணர்கள் குழாம்.' இதற்கு முழுநேரம் வேலை செய்யக்கூடிய ஒரு பொருளாதார நிபுணரை அமைத்திருக்கிறார். மாதம் மாதம் ஆங்கிலத்திலும் தமிழிலும், பொருளாதார, சமூக சிக்கலான விஷயங்களைப் பிரசுரிக்க ஏற்பாடு செய்திருக்கிறார். இதனால் விஷயங்களைப் பொதுமக்களும் மந்திரி சபையும் அறிந்து, ஆவன துரிதமாகச் செய்வதற்குப் பெரிதும் பயன்படும். வாழ்க இவர் தொண்டு! நீள்க அவர் ஆயுள்!

> தகப்பனார் சொத்தில் நல்ல பிள்ளை, சோம்பேறிப் பிள்ளை எல்லோருமே பங்கு கேட்பது போல், காங்கிரஸ் முயன்று பெற்ற அதிகாரத்தில் எல்லாக் கட்சியாரும் பங்கு கேட்கின்றனர். இதை மறுப்பது எப்படி?
>
> —ராஜாஜி

The Honourable Dr. T. S. S. RAJAN,

Minister for Food, MADRAS.

I am glad, you are publishing a book to explain Kamaraj's services to the public. As far as I know Kamaraj, I know him well ever since he was a little boy. He was a strong and unassuming worker and had to work in the intensely adverse atmosphere of Justice Party politics at Virudhunagar. His patriotism and service stood the test of power and prestige and he was able to survive the initial struggles till at last the late Mr. S. Satyamurthi found the grit in him and tried to pull him out of his nest and present him to the Tamil world. He has been holding the position as the President of the Tamil Nad Congress Committee with great distinction. He is a man of character and of strong principles. He is unassuming and yet strong as a granite and has survived the onslaught made against him and after trials and struggles has secured for himself a place amongst the leaders of Tamilnad. I wish him long period of service.

கனம் டாக்டர் T. S. S. ராஜன்

சென்னையரசாங்க உணவு இலாகா அமைச்சர்



திரு. காமராஜ் அவர்களின் தொண்டுகளைப் பொது மக்கட்கு அறிவிப்பான் வேண்டி புத்தகம் ஒன்று வெளியிடுவதை அறிய மகிழ்கின்றேன். அவருடைய சிறுவயதிலிருந்தே அவரைப் பற்றி நான் நன்கு அறிவேன். அவர் கொள்கையில் தடுமாற்றமும் ஆடம்பரமும் அற்ற சிறந்த தொண்டர். விருதுநகரில் தமது கட்சிக்கு மாறான ஜஸ்டிஸ்கட்சி மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த காலத்துத் தொண்டாற்ற வேண்டிய நிலையிலிருந்தார். செல்வாக்கும் சீர்மையும் அவருடைய நாட்டுப் பற்றையும், தொண்டையும் சிதைக்க முடியவில்லை. தொடக்க நிலையில் ஏற்பட்ட போராட்டங்களினின்றும் தப்ப முடிந்தது. காலஞ் சென்ற திரு. S. சத்தியமூர்த்தி அவர்கள், அவருடைய உறுதியைக் கண்டார். மூலையில் ஒதுங்கியிருந்தவரை வெளிக்குக்

கொண்டுவந்து தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தினர். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக மிகச்சிறப்பாகத் தொண்டாற்றி வருகின்றார். அவர் ஒழுக்கமும் உறுதியான கொள்கைகளையும் உடையவர். வெளிப்பகட்டு இல்லாது போயினும் மலைபோல் நிலை கலங்காதவர். அவர் மேல் தொடுக்கப்பட்ட தாக்குதல்களினின்றும் தப்பினர். சோதனைகட்கும் போராட்டங்கட்கும் பிறகு தமிழ் நாட்டுத் தலைவர்கள் வரிசையில் தனக்கு ஒரு இடத்தை அடைந்துவிட்டார். அவர் பல்லாண்டு தொண்டாற்றுவாராக.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை
புத்தேரி



திரு. காமராஜ் அவர்களை நேரில் கண்டு பழகும் சந்தர்ப்பம் எனக்கு இதுவரை வாய்க்கவில்லை. அதனாலென்ன? அவரைப் பற்றிப் பத்திரிகைகள் வாயிலாகவும் நண்பர்கள் வாயிலாகவும் நன்றாக அறிந்திருக்கிறேன் அவரிடத்தில் எனக்கு மிக்க நன்மதிப்பு உண்டு. அவர் காந்தியிடத்தில் அளவிறந்த பக்தியுடையவர். அடிகளின் மொழிகளை வேத வாக்காகவே மதித்து ஒழுகுபவர்.

தலைவர் காமராஜர் தம் வாழ்க்கையைப் பொது நலத்துக்கென்றே அர்ப்பணம் செய்து விட்டார். இல் வாழ்க்கையானது தேச சேவைக்கு இடையூறாயிருக்குமென்று கருதித்தானோ என்னவோ அவர் பிரம்மச்சாரியாக இருந்து வருகிறார். இது ஒரு பெரிய தியாகமல்லவா?

சிலரைப்போல அணுவை அண்டமாகவும், அண்டத்தை அணுவாகவும் காட்டும் செப்பிடுவித்தை அவருக்குத் தெரியாது. உள்ளதை உள்ளபடியே சொல்லிவிடுவார். ஆடம்பரமற்ற அமைதியான சேவையே அவர் கைக்கொள்வது. யார் யாருக்கு எப்பொழுதெல்லாம் உதவி செய்ய வேண்டுமோ அப்பொழுதெல்லாம் தம்மாலியன்ற உதவியைச் செய்யப் பின் வாங்கமாட்டார். திருவிதாங்கூர்த் தமிழர்கள், தம் நிலைமையை நேரில்வந்து பார்த்து வேண்டுவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்ட போது எவ்வித தடையும் கூறாமல் உடன் தானே வந்தது மட்டுமல்ல; இரு கட்சியாரையும் சமாதானப்படுத்த வேண்டிய முயற்சியையும் எடுத்துக்கொண்டார்.

பொறுமையும் அஹிம்சைப்பற்றும் உடையவர்கள் எதிலும் தாவிக்குதிப்பதில்லை. ஆத்திரமும் ஆவேசமும் கொள்வதில்லை. அமைதியான முறையில் அணுகிக் கருமத்தை வெற்றிகரமாக முடிப்பது அவர்கள் வழக்கம். இதனைக் காந்தி அடிகளிடம் கண் கூடாகக் கண்டோம். அடிகளின் கொள்கையில் ஊறித்திளைத்த காமராஜரிடமும் இதனைப் பார்க்கிறோம். பலப்பல சந்தர்ப்பங்களிலும் அவர் காட்டிய அமைதி அவருக்கு வெற்றியையே அளித்திருக்கிறது. அவர் வெற்றி என்பதன் பொருளென்ன? அகிம்சையின் வெற்றி, சத்தியத்தின் வெற்றி, அறத்தின் வெற்றி, தமிழ் நாட்டின் வெற்றி என்பது தானே!

நம் தலைவர் காமராஜர் நீடூழி காலம் வாழும்படி எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

★

யோகி சுத்தானந்த பாரதியார்
புதுச்சேரி

நான் பார்த்த காமராஜ்!

1927-ல் நான் தமிழ் தினசரி சுராஜ்யா ஆசிரியராயிருந்தேன். அப்போது காங்கிரஸ் மேடையில் எனக்கும் இடம் கிடைத்தது. சத்தியமூர்த்தி, "பாரதியார், எழுதிக்கொண்டே எத்தனை ஜன்மம் கழிப்பீர். மேடையில் கர்ஜியுமே; வாரும் எங்களுடன்" என்று எஸ். ஸ்ரீனிவாச ஐயங்காரிடம் அழைத்துச் சென்றார். அங்கே ஏ. ரங்கசாமி ஐயங்காரும் இருந்தார். இருவரிடமும் சத்தியமூர்த்தி, "பாரதியை என்னுடன் திருநெல்வேலி பிரசாரத்திற்கு அனுப்புங்கோ; விறு விறுப்பாகப் பேசுகிறார்" என்றார். ஸ்ரீனிவாச ஐயங்கார் நெடுநாளாகவே என்னைத் தீவிரமான மேடைப்பணிக்கு இழுத்துக்கொண்டிருந்தார். நானும் ஒப்புக்கொண்டு தமிழ்நாடு முழுதும் சுற்றக் கிளம்பினேன். காங்கிரஸ் சபையிலிருந்தும் பத்திரிகை மூலமாகவும், நான் வரும் செய்தியை எல்லாரும் அறிந்தனர்.

பலவூர்களுக்கு என்னை அழைத்தனர். சத்தியமூர்த்தியுடன் திருநெல்வேலியில் தொண்டு தொடங்க இன்னும் ஒரு மாதம் இருந்தது. அதற்குள் நான் வடஆற்காடு, சேலம், கோயமுத்தூர், திருச்சி, மதுரை ஜில்லாக்களைச் சுற்றி என் சுதந்திர உணர்ச்சியை விறிட்டுக்கொண்டிருந்தேன். நான் திண்டுக்கல்லில் ஒரு கூட்டத்தில் சைமன் கமிஷன் பகிஷ்காரத்தைப் பற்றிப் பேசிவிட்டு, "கமிஷனை மட்டும் திருப்பியனுப்புவது போதாது; வெள்ளைக்காரரை எல்லாமே கப்பலேற்றி டோவருக்கு அனுப்பிவிட வேண்டும்" என்று பேசி ஒரு பாட்டுப்பாடிக் கொண்டிருந்தேன். அந்தச் சமயம் என்கையில் ஒரு தபால் கடிதம் தந்தார் நண்பர். அது விருதுபட்டியிலிருந்து வந்தது—காமராஜ நாடார் எழுதியது. "தாங்கள் எங்கள் ஊரில் தங்கி, அவசியம் பேச வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம்—எதிர்பாக்கிறோம்" என்பது கடிதத்தின் சுருக்கம். நான் வருவதாகத் தகவல் கொடுத்தேன். இன்ன தேதி என்று குறிப்பிடவில்லை. நான் மதுரையில் ஒரு வாரம் ஸ்ரீ சுப்பராமன் ஆதரவில் தங்கிவிட்டு, திருமங்கலம் சென்று திடீரென்று விருதுநகரில் வந்து இறங்கினேன். இதை எப்படியோ அறிந்துகொண்டு நண்பர் வண்டி நிலயத்திற்கு வந்து கதர்மாலை போட்டு வரவேற்றனர். என்னை வரவேற்றவருள் நெடிய கம்பீரமான ஒருவர் இருந்தார். அவரே காமராஜ நாடார் என்று ஊகித்தேன்--ஆம் அவரே. குதிரை வண்டியில் நான் சென்றேன். அவர் என்னைப் புன்னகையுடன் வரவேற்றதும் விரென்று முன்னே சென்றார். வண்டி ஒரு சைவசித்தாந்த மடத்தின்முன் நின்றது. அங்கே காமராஜ நாடார் என்னை அன்புடன் வரவேற்று உபசரித்தார். அப்போது அங்கே கைவல்ய நவநீதம் பாடம் நடந்தது. என் உணவு ஒழுக்

கங்களை எப்படி அறிந்தாரோ தெரியவில்லை! "தொட்டியில் நீர் தயார்" என்று அழைத்து சென்றார். நான் நீராடியதும் திருநீறு தந்தார். பிறகு தியானத்திற்கு ஒரு நல்ல இடத்தை ஏற்பாடு செய்தார். அங்கே கைவல்யத்தைக் காதால் கேட்டுக் கொண்டே தியானித்தேன். ஒரு மணி நேரம் தியானமானதும் "வாருங்கள் உள்ளே" என்றார்; சென்றேன். அங்கே பலகை போட்டு முன்னே பாலும், பழமும், நிலக்கடலையும் தயாராக வைத்திருந்தார். இவையே என் உணவென்று இவருக்கு எப்படித் தெரியும்! நான் உட்கார்ந்தேன். இன்னும் அவர் என்னுடன் கலகலப்பாகப் பேசவில்லை; நானும் மௌனம். அவர் காமராஜர் என்பதும் என் ஊகமே. நான் மெதுவாகச் சாப்பிடும்போதுதான் "நான் காமராஜன்—இவ்வூர் காங்கிரஸ் காரியதரிசி—இன்ன தொண்டு செய்கிறேன்; தாங்கள் நாளை தொழிலாளர் கூட்டத்திலும்—மறுநாள் ஒரு பெரிய பொதுக் கூட்டத்திலும் பேசவேண்டும். இந்த ஊர் நிலை இப்படி" என்பதைத் தெளிவாகச் சொன்னார். நான் எல்லாம் கேட்டுக்கொண்டு, உண்டு எழுந்து சிறிது காற்றுட அங்குமிங்கும் உலாவினேன். அதற்குள் நாடார் ஒரு சாய்வு நாற்காலி கொண்டுவந்து போட்டு, இப்படி இருந்து பேசலாமே என்றார். "நான் ஒரு மணிதான் பேசுவேன். பிறகு தியானத்திற்குச் செல்ல வேண்டும்" என்றேன். நான் நாற்காலியில் அமர்ந்ததும் நண்பருடன் நாடாரும் வந்து முன்னமர்ந்து தேசிய விஷயமாகப் பேசினார். அவர் கேள்விகள் ஆணித்தரமாய் இருந்தன. என் பதிலையும் அவர் நுட்பமாக ஆராய்ந்து நுட்பமான கேள்விகள் கேட்டார். அந்தக்காலம் ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தக் கூச்சல் எங்கும் நடந்தது. சிங்காரவேலு செட்டியாரும் முகுந்தலால் சர்க்காரும் வேலை நிறுத்தத்தை நடத்தி

ஞர்கள். தொழிலாளர், கூட்டம் கூட்டமாக ஊர்தோறும் சென்று தமது குறைகளை முறையிட்டனர். நாளை விருதுநகருக்கு வருவார்கள்.

காங்கிரஸ் அக்காலம் அடங்கிப்போயிருந்தது. காந்திமகான் சபர்மதியில் அமைதிகொண்டு கதர்த் தொண்டு செய்தார். சுயராஜ்யக் கட்சிதான் இயங்கிக் கொண்டிருந்தது. சட்டசபைக்குப் போகலாம்—ஆனால் பதவி ஏற்கக் கூடாது. இதற்கு மாறாக அக்காலம் காங்கிரஸ் சார்பில் சட்டசபையில் புகுந்த ஒரு முத்தும் ரத்தினமும் சுப்பராயனுடைய மந்திரி சபையில் சேர்ந்து மினுக்கின. இதைக் கண்டிக்கவேண்டும். சைமன் கமிஷனைப் பகிஷ்கரிக்க நாட்டைத் தூண்டவேண்டும். காங்கிரசில் எல்லாரும் சேரும்படி ஊக்கவேண்டும். இது தான் எனக்கு ஆணை. இத்துடன் நான் பர்டோலி சத்தியாக்கிரகத்தைப் பற்றிப்பேசி "வெளியேறு யேறு வெள்ளைத்துரையே" என்று ஒரு பாட்டும்பாடிவந்தேன்.

காமராஜ நாடாருக்குச் சட்டசபை, வட்டசபை எல்லாம் முழு முட்டையாகத் தோன்றியது; பர்டோலி வரிகொடா இயக்கத்திலேதான் அவர் உற்சாகம் காட்டினார். மறுநாள் என்னைத் தொழிலாளர் கூட்டத்தில் பேசச்செய்தார்—நான் பொதுவுடைமை ரஷ்யாவையும், மார்க்ஸிஸத்தையும் பற்றி அரைமணிநேரம்பேசி; உழைப்பின் பயன் உழைப்பாளிக்கே செல்லவேண்டும்-தொழிலே நாட்டின் உயிர்; தொழிலாளியே உயிர் நாடி என்று விளக்கினேன். கூலி என்பதையே ஒழித்து, வேலையின் விளைவை எல்லாருக்கும் சமமாகப் பங்கு வைப்பது என்றிருந்தால் வேலை நிறுத்தமே இராது. ஒருவன் பலர்

உழைப்பால் பணங்குவித்து முதலாளியாவதுதான் நிலைமை —உழைப்பானே பிழைப்பான்; உழைக்கும் கைக்கே உண்ண உரிமை உண்டு என்றிருந்தால் நாட்டில் தொழிலும் ஓங்கும்; தொழிலாளர் வறுமையும் நீங்கும். பணம் பெட்டியில் உறங்காமல் தொழிலுக்குத் தொழில் சுழலும் என்று விளக்கினேன். மறுநாள் ஊரில் பஜனை ஊர்வலம் நடத்தவேண்டும் என்றேன்—உடனே இனிமையான பஜனை கோஷ்டியை ஏற்பாடு செய்து ஐந்து மணிக்கு அழைத்து வந்துவிட்டார் காமராஜர். எனது தேசிய கீதங்களுடன் திருவாய்மொழிப் பாசுரங்களும் பாடிக் கொண்டே பிரசங்கமைதானத்திற்குச் சென்றோம். அங்கே ஏராளமான கூட்டம். காமராஜர் என்னை அறிமுகப் படுத்திப் பேசச்சொல்லி அமர்ந்தார். நான் மகாத்மாஜீயின் சத்தியாக்கிரகத் தத்துவத்தை அப்பர் தேவாரங்களைக் கொண்டு விளக்கினேன். பஜனை கோஷ்டியும் என்னுடன் பாடினது. பர்டோலி இயக்கத்தைப்பற்றி விரிவாகப் பேசிமுடித்தேன். காமராஜ் வந்தனவுரையில் "பர்டோலியில் படேல் செய்ததுபோல் தைரியமான, புரட்சிகரமான கிளர்ச்சியினாலேதான் நாடு விடுதலை பெறும்......மகாத்மாவின் வழியே வழி" என்றார். அன்று எனக்கு அவர் மேல் உண்டான அன்பிற்கும் மதிப்பிற்கும் அளவில்லை. இன்று தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவரான காமராஜை அந்த விருதை வீரருள் கண்டேன். காமராஜுடன் வெகுநேரம் பேசினேன். அவர் திறந்த உள்ளம் படைத்தவர். நக்கீரர் போல் குற்றத்தை குற்றம் என்பவர். பிறர் தாட்சண்யத்திற்கோ, பட்டம் பதவிக்கோ தம்மை விற்கமாட்டார். காமராஜர் மிகவும் நேரிய கூரிய மதிப் பொலிவும், சுருங்கிய சொல்லும், செருங்கிய அன்பும் நிறைந்த செயலும் உடையவர். நான் மூன்று நாட்கள்

விருதுநகரில் இருந்தேன். என்மனதை அறிந்து அவர் எல்லா ஏற்பாடுகளும் செய்து, ஒவ்வொன்றிலும் சபாஷ் பட்டம் பெற்றார். அவர் எடுத்த காரியம் சோடை போவதில்லை. பிற்காலமும் அவர் வாழ்வை நான் கூர்ந்து கவனித்துவருகிறேன். எனக்கொரு பெருமகிழ்ச்சி என்னவென்றால் இப்போது தமிழகக் காங்கிரஸில் ஆங்கிலப் பித்தம் ஒழிந்ததே. தமிழே அறிந்த காமராஜரும், அண்ணாமலைப் பிள்ளையும், ஓ. பி. ஆர். ரெட்டியாரும் பொதுஜன மதிப்பிற்கு உரியரானார்கள். உயர்ந்த பதவிகளை வகிக்கிறார்கள். ரெட்டியார் பிரதம மந்திரியாக இருப்பதில் எனக்கு எவ்வளவு பெருமையோ, அவ்வளவு நாடார் தமிழகத் தலைவராக இருப்பதிலும் பெருமை உண்டு. இப்போது தமிழே தமிழகத்தை ஆளுகிறது. தமிழகத்திற்குத் தமிழே அறிந்த ஒருவர் கவர்னராக வரும் நாளை நான் எதிர்பார்க்கிறேன். ஆங்கிலம் தெரியாத ஷியாங்கே சீனத்தை ஆளவில்லையா? காமராஜ் நாடார் போல் தமிழர் தலை நிமிர்ந்து நிற்கட்டும்.

தலை நிமிர் தமிழா!

அடாணா] [ரூபகம்

தலை நிமிர் தமிழா — பெற்ற
தாயின் மணம் குளிர
மலை குலைந்தாலும் — தமிழா
மனம் குலையாதே

வீரக் கனல் வளர்ப்போம் — தோள்
விம்மிப் புடைத்திடவே
சூரத் துணிவோடு நில் — தமிழா
சொந்த உரிமையை வெல் (தலை)

குன்றினை யும் தகர்ப்போம் — எதிர்
கூற்றினையும் குமைப்போம்
வென்றிப் புவி புரப்போம் — நல்ல
வீறுகொள் மெய்த்தமிழா (தலை)

ஒற்றுமைச் சங்கொலிப்போம் — தமிழா
உண்மைக் குயிர் கொடுப்போம்
வெற்றிச் சிகரத்திலே — புகழ்
வீசக் கொடி நடுவோம் (தலை)

— சுத்தானந்த பாரதி

The Honourable B. GOPALA REDDI,

Minister for Finance, MADRAS.

I am very happy to see that you are publishing a biographical memoir of my good friend Mr. Kamaraja Nadar.

He has been the centre of some of the momentous events which occurred in South India in recent times. I know him ever since we were together in the central jail, Vellore in 1930. He is a man of action and he has rallied Tamilnad under his selfless leadership. He is not a man of words and on very few occasions he makes pronouncements which are to the point and which show a deep understanding of the situation. He has utilised the power of silence to great advantage. His understanding of men and matters is thorough and he can take decisions and stick to them under various conflicting advices. He has no pretentions about him. He does not put on airs, though he is playing such a vital part in South Indian politics today. He has some admirable qualities which make his friends stick to him steadfastly. All told, he typifies in himself real rural leadership which has not failed the country even in times of crisis.

கனம் B. கோபால் ரெட்டி

சென்னையரசாங்கப் பொருளியல் அமைச்சர்

எனது நல்ல நண்பர் திரு: காமராஜ் நாடார் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நினைவு மலர் வெளியிடுவதையறிய மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தென்னிந்தியாவில் அண்மையில் நிகழ்ந்த சிறப்புடை நிகழ்ச்சிகள் சிலவற்றிற்கு நடுநாயகமாய் இருந்திருக்கினுர். 1930 ல் வேலூர் நடுவிடச்சிறையில் (Central Jail Vellore) நானும் அவரும் ஒன்ருக இருந்த காலத்திலிருந்தே அவரைப்பற்றி எனக்குத் தெரியும். அவர் ஒரு கரும வீரர், அதன் மூலம் தமது தன்னலமற்ற தலைமையின்கீழ் தமிழ் நாட்டை ஒன்று திரட்டியிருக்கிருர். அவர் வாய்ச்சொல் வீரர் அல்லர். சிற்சில அமயங்களில்தான் தமது கருத்தை வெளியிடுவார். அப்பொழுதும் மிகைப்படக் கூருர். வேண்டிய அளவே

மொழிவார். அம்மொழிகள் அப்பொழுது உள்ள நிலையைத் தெள்ளிதின் விளக்கும். அதிகமாகப் பேசாதிருக்கும் ஆற்றலை தனக்கு நன்கு பயன்படுத்தியுள்ளார். யாவரையும், எல்லா விஷயங்களையும் உள்ளபடி பூரணமாக புரிந்து கொள்ளும் சக்திமிக்கவர். ஒன்றுக்கொன்று முரண் பாடான அறிவுரைகளைக் கேட்ட காலத்தும் தாமே ஒரு முடிவு செய்து அம் முடிவினின்றும் வழுவாது நடக்கும் ஆற்றலுடையவர். பாவனைகள் அவரிடம் கிடையாது.

இன்றைய தென்னிந்திய அரசியல் வாழ்வில் தலையாக பங்கெடுத்துக்கொண்டிருப்பினும் அதை வெளிப் படுத்தும் புறக்கோலம் பூண்பவரல்லர். அவர் பெற்றுள்ள புகழ்ச்சிக்குறிய குணங்கள் சில அவருடைய நண்பர்களை அவரைவிட்டுப் பிரியாமல் பிணிக்கின்றன.

சுருங்கக் கூறுமிடத்து அவர், உண்மையான நாட்டுப்புற மகனின் தலைமை நாட்டின் கொந்தளிப்பான சமயத்திலும் வழிகாட்டத் தவறியதில்லை என்பதை எடுத்துக் காட்டும் சின்னமாக விளங்குகிறார்.

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்

திருச்சி

காமராஜர்

35 ஆண்டுகளாக எனக்கும் விருது நகருக்கும் தொடர்புண்டு. வியாபாரம், அரசியல், சீர்திருத்தம், நட்பு ஆகிய பல துறைகளில் பல முறை அந்நகருக்குச் சென்று வந்திருக்கிறேன். இப்பெயர் உள்ள ஒருவர் அங்கு இருப்பதாக நான் அறிந்ததில்லை. இருபதாண்டுகளுக்கு முன்பு கூட இவர்களின் பெயரை நான் கேட்டதில்லை. இன்றைக்கும் கூட அவரைப் பார்க்கவோ, பழகவோ, பேசவோ, எனக்கு வாய்ப்பு ஏற்பட்டதில்லை.

விருதுநகர் என்றைக்கும் ஜஸ்டிஸ் கட்சியின் கோட்டையாக இருந்து வந்திருக்கிறது. அங்கு காங்கிரசுக்கோ, பிற கட்சிகளுக்கோ இடமில்லை. பஞ்சுத் தரகு வைத்திலிங்க நாடார் என்ற ஒருவர் தனலட்சுமி ஸ்டோர்

என்ற பெயரால் ஒரு சுருட்டுக்கிடங்கை அந்தக் காலத்தில் அங்கு நடத்தி வந்தார். அவர்தான் முதன் முதலில் திரு. சத்தியமூர்த்தி ஐயர் அவர்களை விருதுநகருக்கு வரவழைத்துப் பேசச்செய்தவர். அன்று அதற்கு அவ்வூரில் இருந்த எதிர்ப்பை இன்றைக்கு நினைத்தாலும் காங்கிரஸ் கட்சியினர் பீதியடையத்தான் செய்வார்கள். நான் நினைப்பது சரியாக இருந்தால் திரு. காமராஜ நாடார் அவர்கள் அதற்குப் பிறகுதான் பள்ளியிலிருந்து காங்கிரஸ் தொண்டராக வெளிவந்திருக்கவேண்டும்.

இவர் பெயரை தமிழ்நாடு நன்கு தெரிந்துகொண்ட காலம்: இவர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட காலமே யாகும். அதற்கு முன்பு அவருடைய பெயரை பலரும் அறிய வாய்ப்பு இல்லாதிருந்தது.

காமராஜன் என்ற பெயர் மன்மதனுக்கு உரியதாகும். இதே பெயரை தமிழ் நாட்டில் இன்னும் எவரும் வைத்திருப்பதாக நான் கேள்விப்பட்டதில்லை. நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? என்று எண்ணிப்பாருங்கள். இருந்தால் வியப்பு ஒன்றுமில்லை. இல்லாவிடில் தமிழ் நாட்டில் ஒரே காமராஜர்தான் என்ற முடிவுக்கு வரவேண்டியதுதான். மிகவும் அழகாக இருந்ததினால் இப்பெயர் இடப்பெற்றதோ என ஐயப்பட்டதுண்டு. ஆனால் நேரில் பார்த்தவர்கள் அப்படி ஒன்றும் இல்லை என்றே கூறிவிட்டார்கள்.

சாதாரண குடும்பத்தில் பிறந்து எளிய வாழ்க்கை நடத்தி, குறைந்த படிப்பைப்பெற்று, சிறந்த குணத்தை அடைந்தவர் காமராஜர் என்று துணிந்து கூறலாம்.

உயர்ந்த பேச்சாளி என்றோ, சிறந்த எழுத்தாளி என்றோ, பெயர் பெறாவிட்டாலும் மிகுந்த உழைப்பாளி என்ற பெயரை அவர் தமிழ் நாட்டில் பெற்றுவிட்டார்.

1940-ல் நான் ஜஸ்டிஸ் கட்சியின் பொதுக் காரிய தரிசி பதவியை ராஜிநாமா செய்து ஒரு அறிக்கை வெளியிட்டுவிட்டு என் தொழிலைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒருவர் என்னைப் பார்க்க வந்தார் அவர்:—

“நான் ஒரு காங்கிரஸ் கட்சியாளன்; சென்னையிலிருந்து வரும் வழியில் தங்களைப் பார்த்துப் போக வந்தேன். தலைவர் காமராஜரும் நானும் இப்பொழுதுகூட தங்களைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம். தங்கள் மீது அவருக்கு அன்பு உண்டு. தங்களைப் போன்றவர்கள் எல்லாம் காங்கிரசில் இருக்கவேண்டுமென்பது அவருடைய எண்ணம். அவ்வாறு சேர்ந்தால் அவர் தன்னுடைய பதவியைக்கூட காலி செய்து கொடுக்கத் தயங்க மாட்டார்” என்று கூறினார். நன்றி கலந்த வணக்கம் கூறினேன். அவர் கூறியது உண்மையாக இருக்குமானால், திரு. காமராஜர் அவர்களுக்கு தம் கட்சியின் மீது உள்ள பற்றுதலின் அளவையும், பிற கட்சியைச் சார்ந்தவர்களின் மீது வைத்துள்ள மதிப்பின் உயர்வையும் எடுத்துக்காட்ட இது போதுமானது என்றே கூறலாம்.

அடுத்து, அடுத்து அவரே தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவதிலிருந்தே அவர் தம் கட்சியிலும், நாட்டிலும் செல்வாக்கும், மதிப்பும் பெற்றவர் என்பதை நன்கு அறியலாம். நேர்மையும், ஒழுக்கமும், சட்டதிட்டங்களில் ஒழுங்கும், பண வரவு

செலவுகளில் கண்டிப்பும் உடையவர் என நான் கேள்விப் பட்ட பொழுது பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன்.

"ஜஸ்டிஸ் கட்சிக்கு நாடார் சமூகத்தில் அசைக்க முடியாத செல்வாக்கு இருக்கிறது என்றும், அதற்குக் காரணம் சௌந்திரபாண்டியனுக்குக் கட்சியில் செல்வாக்கு இருப்பதுதான் என்றும், அதை ஒழித்து, அச் சமூகத் தில் காங்கிரசுக்குச் செல்வாக்கு ஏற்பட வேண்டுமானால், நாடார் சமூகத்திலிருந்தே காங்கிரசுக்குத் தலைவர்களைக் கொண்டு வரவேண்டும் என்றும் எண்ணியே திரு. சத்திய மூர்த்தி ஐயர் அவர்கள் திரு. காமராஜர் அவர்களைக் கொண்டு வந்தார்"

என அப்போது கூறப்பட்டதுண்டு. ஆனால் அதே சத்தியமூர்த்தி ஐயர் அவர்கள் சமூகத்தில் பிறந்த என் நண்பர் ஒருவர் மூலம் இப்போது நான் கேள்விப் பட்டது இதுதான்,

"ஜஸ்டிஸ் கட்சியின் தலைமைப் பதவியும் செல்வாக் கும், காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியும், செல்வாக்கும் நாடார் சமூகத்திற்குள் புகுந்து கொண்டன. என்ன செய்வது? அரசியல் ஒன்றைத் தவிர எல்லாத் துறையிலும் நாடார் சமூகம் முன்னேறியிருந்தது. இப்போது அரசியல் துறையிலும் முன்னேறிவிட்டது. இதற்கென்ன செய்வது?" என்பதே! எப்படி இந்த பெருமூச்சு?

திரு. காமராஜ் அவர்களின் தன்னலமற்ற சேவையை, திறமையை, நேர்மையை அறிய எனக்கு ஒரு

வாய்ப்புக் கிடைத்தது. அக் காலம்தான் பெரியார் காந்தியடிகள் "கிளிக்" என்ற சொல்லம்பை தமிழ் நாட்டில் எய்த காலம். அன்று அவ்வம்பு தன் மீது படாமல் பதவியை உதறித் தள்ளித் தடுத்து நின்றார் காமராஜர். அன்று என் கண்களுக்கு அவர் வீரராக விளங்கினார். வாழ்த்தினேன்.

அவர் மாறுபட்ட கட்சியைச் சார்ந்திருந்தாலும் அவர் தொண்டு மாசற்றது என்பது எனது எண்ணம். மிகுந்த இளைஞராயிருந்தும் சிறந்த மணத்தைச் செய்து இல்வாழ்வு வாழ எண்ணமே இல்லாது நாட்டையே தனது குடும்பமாக எண்ணி, பொதுத் தொண்டையே இன்ப வாழ்வாகக் கருதி, அரும்பணி ஆற்றும் அன்பர் காமராஜர் அவர்கள் இன்னும் பன்னெடுங்காலம் உடல் நலத்தோடு நல் வாழ்வு வாழ வேண்டும் என தமிழ் மக்கள் பலராலும் வாழ்த்தப் பெறவேண்டும். அவ் வாழ்த்துதலுக்கு அவர் மிகவும் உரியவர்.

அன்பர் காமராஜர் அவர்கள் தலைமையிலும், தமிழ் நாடு தனியே பிரிந்து, தமிழ் மொழி வளர்ந்து, தமிழ் மக்கள், தமிழாலே தன்னரசு புரிந்து, சிறந்த வாழ்வு வாழ வேண்டும் என்பது எனது ஆசையாகும்.

Dr. P. SUBBARAYAN,

Chepauk House,
Triplicane P. O. — MADRAS. 5.

I have known Sri. K. Kamaraj as a congress worker for over 14 years now. I came to know him intimately through the late Sri. Satyamurthi to whom Sri. K. Kamaraj was attached, I found in him an unostentatious worker prepared to scarifice himself in the cause of the country. He never sought the lime light. It was Sri. Satyamurthi, who suggested to me that Sri. K. Kamaraj could be put up for the Presidentship of the T.N.C.C. and I readily agreed as I felt that unselfish work as that of Sri K. Kamaraj deserved the appreciation of the T. N. C. C. He was elected by a narrow majority but till the 1942 movement began Kamaraj by his unostentatious work had prepared the T. N. for following the mandate of Mahatmaji in this part of the country. He had infused great enthusiasm among the workers for this movement. When again the congress decided to contest the elections I differed from Kamaraj with regard to Rajaji's leadership as

I felt there was no one tall enough in this part of our country to replace him. But in spite of all these differences our friendship has continued unabated. I felt the step he was taking was wrong and would not be in the interests of the Province, but from my conversation with him I also found that he was following his conscience. He has tried to serve the congress and the people in his own line. He has always been champion of the down trodden and his work has been influenced by this idea of raising the standard of life of the common man. I trust he will be given many years of service to the country in the cause of the Common man which he has made his own.

திரு. டாக்டர் P. சுப்பராயன்

சென்னை

திரு. காமராஜ் அவர்களைக் காங்கிரஸ் தொண்டராகப் பதினான்கு ஆண்டுகளுக்கு மேலாக நான் அறிந்திருக்கிறேன் அவருடன் நெருங்கிப் பழகிய, காலஞ்சென்ற திரு. சத்தியமூர்த்தியின் மூலம் திரு. காமராஜ் அவர்களை நன்கு தெரிய வந்தேன். அவர் ஆடம்பரமற்ற தொண்டர் என்றும் நாட்டு நலத்திற்கென எதையும் தியாகம் செய்யக் கூடியவரென்றும் அறிந்தேன். பலராலும் அறியப்பட வேண்டுமென்று விரும்பியவரே அல்லர். திரு. சத்தியமூர்த்தி அவர்களே திரு. காமராஜ் அவர்களைத் தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று என்னிடம் கூறினபோது காமராஜ் அவர்களின் தன்னலமற்ற தொண்டைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பாராட்ட வேண்டுமென்று நான் உணர்ந்து அதற்கு

உடனே ஒப்புக்கொண்டேன். சிலவாக்குகளையே மிகுதியாகப் பெற்று அவரும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1942 இயக்கம் தொடங்கும்வரை காமராஜ் தமது ஆடம்பரமற்ற தொண்டால் காந்தி அடிகளின் ஆணையை ஏற்று நடக்கத் தமிழ்நாட்டைப் பக்குவப்படுத்தினர். இந்த இயக்கத்தில் ஈடுபட்ட தொண்டர்கள் உள்ளத்தில் மிகுந்த எழுச்சியை உண்டுபண்ணினர். மறுபடியும் காங்கிரஸ் தேர்தல்களில் ஈடுபட முடிவுசெய்தபோது "திரு: ராஜாஜிக்கு ஒப்பான பெரியார் இந்நாட்டில் இல்லை. அவருடைய தலைமையே வேண்டற்பாலது" என்று நான் உணர்ந்ததால் காமராஜுக்கும் எனக்கும் இதுவிஷயமாக கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஆயினும் எம்மிடையே நிலவிய நட்பு குறைபடாது வளர்ந்தது. காமராஜ் அவர்களின் முடிவு தவறானதென்றும் நம் மாகாண நலத்திற்கு ஏற்றது அல்லவென்றும் நான் உணர்ந்தேன். ஆயினும் காமராஜ் அவர்களுடன் உரையாடுங்கால் அவர், அவருடைய உள்ஒளி (Conscience) வழியே நடந்துள்ளார் என்றும் அறிந்தேன். அவர் விரும்பிய வழியிலே காங்கிரசுக்கும் மக்களுக்கும் தொண்டாற்ற முயன்றுள்ளார். அவர் எப்பொழுதும் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக உழைத்துள்ளார். பொதுமக்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவேண்டும் என்பதே அவரை இயக்கும் குறிக்கோள். பிறர் நலனே தன்னலமாகக் கொண்டுள்ள அவர், நாட்டுக்குப் பல்லாண்டு தொண்டாற்றும் வாய்ப்பு அளிக்கப்படுவாரென நம்புகின்றேன்.

கனம் சிவசண்முகம் பிள்ளை

சென்னை சட்டசபைத் தலைவர்

திரு: காமராஜ் நாடார் அவர்களை நான் 15 வருஷங்களாக அறிவேன். ஆனால் அவரிடத்தில் நெருங்கிய பழக்கம் கொஞ்ச காலமே. அவர் சிறந்த தேச பக்தர். காந்தியடிகளின் சிஷ்யர்களில் ஒருவராவார்.

அவர் விடா முயற்சியுடையவர். எந்தக் காரியத்தை எடுத்தாலும், தொடர்ந்து செய்வதில் எவ்வித இன்னல்கள் விளைந்தபோதிலும் பொருட்படுத்தாமல், எடுத்த காரியத்தை முடிக்கும்வரை ஊக்கமாக இருப்பார்.

அவர் ஒரு முறைக்குமேல் தமிழ்நாட்டு காங்கிரஸ்கமிட்டித் தலைவராக இருப்பதே அவரிடத்தில் தமிழ்நாட்டு மக்கள் பற்றுடையவர்களாக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கிறது.

காமராஜ் நாடார் வாழ்க!

நாவலர்
ச. சோமசுந்தர பாரதியார் M. A., B L.,
ஓய்வு பெற்ற பேராசியர்—உயர் மன்ற நீதிவாதி

பசுமலை

காங்கிரசுத் தமிழ்நாட்டுத் தலைவர் திருவாளர் காமராஜ நாடார் அவர்களைத் தமிழகத்தவரோடு பிற மாகாணப் பெருந் தலைவரும் நன்கறிவர். பொதுமக்கள் அப் பெருந்தகையாரின் அருந்திறலை அறியாத நிலையில் அவரின் சொல்லாற்றலையும் ஆள்வினைத் திறனையும் அளந்தறிந்த தேசபக்த சிகாமணியும், இருமொழிப் பெருநாவலருமான ஸ்ரீ சத்தியமூர்த்தி அய்யரவர்கள் உய்த்துணர்ந்து போற்றினார்கள் என்றால், அவர் பெருமைக்கு வேறு சான்றெதுவும் வேண்டாமே.

ஊரவர் தன்திறமை ஓராமுன் தலைமைக்குத் தன்னைத்தேர்ந்தெடுத்த தமிழர் பின் இன்றுவரை பிறர் தலைமை வேண்டாமல், தேர்தல்தொறும் தன்னையே தெரிந்தெடுக்கச் செய்வதர் சிறப்பாமன்றோ?

அவர், "கேட்டார்ப்பிணித்து, கேளாரும் வேட்க", நாட்டார் மதிக்க, நாடாரும் துதிக்கப் பேசும் பேச்சாளி; தன்னாட்டவருள் தமிழினத்தெவரையும் என்று மதியாத இயல்பையும் மறந்து தன்னையே பன்முறை தலைவராய்த் தேர்ந்தாண்டும் சால்பும் மாண்பும் உடையவர். ஆரியர்—திராவிடர், அந்தணர்—அல்லவர், தொழிலாளர்—முதலாளி, வடவர்—தென்னவர்; என்று வகுப்பும் வாதமும் வளர்ப்பதே குறிப்பாகக் கொள்பவர்க்கிடையே, யாவருமிணங்க. ஆழச்சூழும் அறிவும் ஆற்றலும் விரகுமிக்குடையவர். சிறப்பெல்லாம் தம்மவர்க்கே பிறப்புரிமை எனும் கொள்கையும் துணிவும் உடையவர் எதிர்ப்பும் தடையும் தகர்த்து படை தொடாதடர்க்கும் மதிவலி மிக்கவர். கூர்த்த மதியும் சீர்த்த சூட்சியும் யோர்த்த புகழினர். மாட்சிமிக்க "ராஜாஜி" அவர்களின் ஆட்சி அரணையும் பேர்த்த வீறுடையவர். பொறுமை புழுங்கி மழுங்க, வெறுமல் விரகினைவெல்லும் உரனும் ஊக்கமுமிக்குடையவர். ஐக்கிய இந்திய ஆட்சிஒற்றுமையில் தமிழர் ஆக்கம் தளராது வளர்க்கும் திறனும் தாளாண்மையும் படைத்தவர்.

வாழ்க காமராஜர், வளர்க அவர் புகழ்.

The Honourable A. B. SHETTY, *M. L. A.*

Minister for Public Health & Medicine,

MADRAS.

Sri K. Kamaraj has impressed me as a man of few words but firm in action and resolute in carrying out his plans. His unanimous re-election for another term as the President of the Tamilnad Provincial Congress Committee, after holding that office for an uninterrupted period of nine years, is a tribute to the qualities of democratic leadership which he seems to possess in abundance. He has played a large part in the politics of this Province during these years of storm and stress and he seems destined to continue to play a dominant role in future also.

கனம் ஏ. பீ. ஷெட்டி எம். எல். ஏ.

சென்னையரசாங்க சுகாதார & மருத்துவ இலாகா அமைச்சர்



திரு: காமராஜ் பல சொல்லக் காமுறாதவர் என்பதும் செயலில் உறுதியும் தம் திட்டங்களை நிறைவேற்றுவதில் விடாப்பிடியும் உடையவர் என்று என் மனதில் படுகிறார். இடையீடின்றி ஒன்பது ஆண்டுகள் தமிழ் மாகாண காங்கிரஸ் தலைவராக இருந்த பின்னரும் மீண்டும் அவரையே தலைவராக ஒருமுகமாகத் தேர்ந்தெடுத்ததிலிருந்தே மக்கள் கருத்தைத் தழுவிச்செல்லும் தலைவர்க்குரிய குணச்சிறப்புகளை மிகுதியாகப் பெற்றுள்ளார் என்பதை அறியலாம். குழப்பமும் கொந்தளிப்பும் மிகுந்துள்ள இவ்வாண்டுகளிலே இம்மாகாண அரசியலிலே பெரும் பங்குகொண்டு உழைத்துள்ளார். இனி வருங் காலத்திலும் ஓங்கிய வகையில் தொடர்ந்து தொண்டாற்றுவதற்கு விதிக்கப்பட்டவராகவே காணப்படுகின்றார்.

திரு. க. நாராயணன்

ஆசிரியர் "தாய் நாடு" புதுக்கோட்டை

இராமநாதபுரம் ஜில்லாவில்ஜஸ்டிஸ் கட்சித் தூண்களாக விளங்கியவர்கள் ராஜா. சர். அண்ணாமலை செட்டியார், செளந்தர பாண்டிய நாடார், வி. வி. இராமசாமி நாடார் இவர்கள் மூவர்தான். தாலூகா போர்டு, ஜில்லா போர்டு, சட்டசபைபோன்ற ஸ்தானங்களைக் காங்கிரஸ் கைப்பற்ற ஆரம்பிக்கும்பொழுது, இந்த மூவரை மட்டும் எதிர்த்து நிற்க தமிழ் நாட்டில் யாருமே துணிந்து முன்வரவில்லை. செல்வாக்கும், புகழும், பணமும் பெற்ற இம் மூவரையும் எவருமே எதிர்க்க முடியாது என்பது அன்றைய அரசியல் அறிஞர்களின் அபிப்பிராயம்.

இவ்வாறு கீர்த்தியுடன் விளங்கியவர்களில் ஒருவராகிய திரு. வி. வி. இராமசாமி நாடாரை ஒரு சாதாரண

காங்கிரஸ் ஊழியர் ஜில்லா போர்டு தேர்தலில் எதிர்த்து நிற்கிறார் என்றதுமே அனைவருக்கும் அது ஒரு அதிசயமாகவே இருந்தது. இராமசாமி நாடாரை எதிர்ப்பவரும் ஒருவர் உண்டா என்பதே அன்றைய கேள்வி. உண்மையாகவே ஒருவர் எதிர்த்து நிற்கிறார் என்றதும், அனைவருடைய கருத்தும், பார்வையும் எதிர்ப்பவரை அறியவே நாடியது. இவ்வாறு தீரத்துடன், புகழும், செல்வாக்கும், பணமும், ஆள் பலமும் நிறைந்த ஒருவரை எதிர்த்து நிற்கும் ஆற்றல் பெற்றவர் திரு. காமராஜர்தான்.

இந்தத் தேர்தலுக்கு முன்பு தலைவர் காமராஜ், ஊழியர் காமராஜராகவே விளங்கினார். சாதாரண அந்தக் காங்கிரஸ் ஊழியரை அந்தத் தாலூகா தவிர மற்ற தமிழகம் அறிய சந்தர்ப்பமில்லாதிருந்தது. திரு. வி. வி. இராமசாமி நாடாரைத் தேர்தலில் எதிர்த்து நிற்கும் பொழுதுதான், "காமராஜ் ஒரு சிறந்த ஊழியர், திறமையான காங்கிரஸ்காரர், காங்கிரஸ் வெற்றி பெற எதையும் துணிந்து செய்யும் ஆற்றல் படைத்தவர்" என்பதை அகில தமிழகமும் அறிய முடிந்தது. அதன்பிறகுதான் காமராஜ் நாடார் தமிழ் நாட்டின் பிரசித்தி பெற்ற காங்கிரஸ்காரர் ஆனார்.

தலைவர் காமராஜ் தன்மானம் நிறைந்த காங்கிரஸ்வாதி. காங்கிரஸ் சட்டதிட்டங்களை ஒழுங்காகவும், நேர்மையாகவும் கடைப்பிடிப்பவர். தேச விடுதலையில் தீவிர மனப்பான்மை பெற்றவர். தன்னை விட தன் ஸ்தாபனத்திற்கு அவமானம் ஏற்படக் கூடாதென்பதில் கண்ணும் கருத்துமாயுள்ளவர். தன் குடும்பத்தைவிட—தமிழ் மக்களின் குடும்பங்களுக்காக—தேச மக்களுக்காக

தியாகம் செய்ய முன்வந்த தேசியத் தலைவர். பிடிவாதக் காரர். தான் நல்லது என்று நினைத்ததை—சொன்னதை நிறைவேற்றி வைக்கும் தீரர். சிறந்த நிர்வாகி. மக்களுடன் இணைந்து நின்று, அவர்களுடைய போக்கில் சென்று, அவர்களை நல்வழிப்படுத்தும் குணமுடையவர். பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற்கெதிராக நடக்கும் செயலைத் துணிந்து கண்டிப்பவர். இம்மாதிரி அருமையான குணங்கள் நிறைந்திருப்பதால்தான் ஆண்டுக்கொருமுறை ஆள் மாறும் தமிழ் நாட்டின் காங்கிரஸ் தலைமைப் பீடம் சென்ற ஒன்பது ஆண்டுகளாக தலைவர் காமராஜைவிட்டு அகலாதிருக்கிறது.

காங்கிரஸ் தலைவராக காமராஜ் விளங்கினாலும், அன்றுபோல் இன்றும் ஓடி ஓடி உழைக்கிறார். ஓய்வு என்பதே அவரிடம் இல்லை. தேர்தல் காலங்களிலும், மக்களின் வாழ்க்கையிலே மாற்றத்தை யுண்டுபண்ணும் சட்டங்களை மந்திரி சபை நிறைவேற்றும் பொழுதும் (உதாரணமாக ஆலயப்பிரவேசம், மதுவிலக்கு, ஜமீன்தாரி ஒழிப்பு போன்றவை) மக்களிடம் சென்று, காங்கிரஸ் திட்டங்களை விளக்கிக் கூறி, அவர்களின் பலத்தைத் திரட்டி, ஆசியையும் ஆதரவையும் பெற்றுவிடுகிறார். மக்களின் தலைவராக விளங்குகிறாரே தவிர, மக்கள் விரும்பாத எதையும் செய்யத் துணிவதில்லை.

காங்கிரஸ் கட்சியிலேயே அபிப்பிராய பேதம் ஏற்பட்டால் 'மெஜாரிட்டி'க் கட்சியில்தான் காமராஜ் காணப்படுவார். அப்படி அவர் நடந்துகொண்டிருக்காவிட்டால் தலைமைப் பதவியை வேறு யாரேனும் தட்டிக் கொண்டு போயிருப்பார்.

தலைவர் காமராஜின் சொந்த அரசியல் வாழ்க்கையில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் சம்பவங்கள் இரண்டு தான். முதல் சம்பவம்தான் முன்பே கூறியபடி வி. வி. இராமசாமி நாடாரைத் தேர்தலில் எதிர்த்து நின்றது. இதன் மூலம் சாதாரண ஊழியராக விளங்கிய காமராஜ் தமிழ் நாட்டின் அரசியல் வாதிகள் — பொதுமக்கள் அறியும் அளவுக்குப் பிரசித்தி பெற்றுவிட்டார். இரண்டாவது சம்பவம்தான் அவரை இந்தியா முழுவதும் அறிந்துகொள்ளும்படி செய்தது. அதுதான் பிரசித்தி பெற்ற 'கிளிக்'.

உத்தமர் காந்தியடிகள் தென்னாட்டில் பிரயாணம் செய்த பொழுது, அவரைப் பார்ப்பதற்காகக் கூடிய மக்களை, ராஜாஜியை வரவேற்கக் கூடியிருப்பதாக அவர்தான் நினைத்தாரோ—அல்லது அவர் நம்பும்படி வேறு யார்தான் உபதேசித்தார்களோ தெரியவில்லை; வடநாடு சென்றதும் 'ஹரிஜனு'க்கு ஒரு கட்டுரை எழுதினார். அதில் காமராஜ் கோஷ்டியினரை 'கிளிக்' என்ற பதத்தை உபயோகித்துக் கண்டித்திருந்தார்.

உடனே அந்தக் 'கிளிக்' என்ற பதத்தை வாபஸ் வாங்கவேண்டுமென்று காமராஜ் அறிக்கை வெளியிட்டார். உத்தமர் காந்தியடிகள் உண்மையான—சாத்வீக அஹிம்சா மூர்த்தியாக விளங்கினால்தான் என்ன? 'நெற்றிக் கண் காட்டினும் குற்றம் குற்றமே' என்ற வீரத் தமிழன் பரம்பரையில் உதித்த காமராஜ், காந்தியிடம் 'கிளிக்' என்ற வார்த்தையை வாபஸ் பெறும்படி கேட்டது இந்தியாவையே அதிர்ச்சியடையச் செய்தது. அனைவருடைய கருத்தும் காமராஜையே நாடின.

தென்னாட்டிலே இம்மாதிரி ஒரு தீரன் இருக்கிறான் என்பதை அப்பொழுதுதான் இந்தியர் அனைவரும் கண்டனர். அந்தச் சமயத்தில் நியாயத்திற்காக தமிழகமே காமராஜ் நாடாரை ஆதரித்து நின்றது. அன்றையத் தமிழரின் எழுச்சிதான்—தலைமை வகித்த காமராஜரின் உறுதிதான்—இன்றைய கவர்னர் ஜெனரல் ராஜாஜியை அரசியலிலிருந்து ஒதுக்கி வைத்தது.

பின்னால் காங்கிரஸ் மேலிடத்திலிருந்து வந்த அழைப்பினால்தான் ராஜாஜி மத்திய அரசாங்க மந்திரி யானார். ஆனால் இதன் மூலம் ராஜாஜியின் அறிவையோ, திறமையையோ காமராஜ் அவமதிக்கவில்லை. மக்களின் தலைவனாக, அவர்களுடைய ஆதரவைப் பெற்றே தலைமைப் பீடம் ஏறவேண்டும் என்பதுதான் காமராஜரின் துணிபு.

தலைவர் காமராஜ் இந்தியாவின் முக்கியமான சரித்திர நிகழ்ச்சிகளில் இடம் பெற்றிருக்கிறார். இரண் டாவது உலக மகா யுத்தத்தின் பொழுது தலைமைப்பீடம் ஏற்றவர், ஆகஸ்ட் புரட்சியில் சிறை சென்று, மிக நெருக்கடியான காலங்களில் காங்கிரசைச் சரியான முறையில் நடத்தி, கடைசியில் சுதந்திரமும் வாங்கித் தந்து, இன்றும் காங்கிரசின் இணையற்ற தலைவராகவே விளங்குகிறார்.

பெயரும், புகழும், அஞ்சா நெஞ்சமும், தீவிர தேச பக்தியும் பெற்ற காமராஜ் நாடார், காலஞ் சென்ற சத்தியமூர்த்தியவர்களின் சிஷ்யர் என்பது காங்கிரஸ் காரர்களின் கருத்து.

கடைசியாக, தலைவர் காமராஜ் அவர்களுக்கு எனது வேண்டுகோள் ஒன்று: இந்திய சுதந்திரத்திற்காக் தமிழ் மக்களுக்கு இணையில்லாத் தலைவராக விளங்கிய அவர், மற்ற தேசிய இனங்களுடன் கைகோர்த்துப் போராடி, சுதந்திரம் வாங்கித் தந்தார். இன்று சுதந்திரம் கிடைத்துவிட்டது. அச் சுதந்திரத்தை என்றென்றும் போற்றிக் காப்பாற்றவும், அச் சுதந்திரத்தினால் தமிழ் மக்கள் பயனடையவும், குமரியும் வேங்கடமும் எல்லைகளாகப் பெற்ற புதிய தமிழகத்திற்கு சுய நிர்ணய உரிமை கிடைக்கச் செய்து, இந்தியக் கூட்டரசில் எப்பொழுதும் போல் இணைந்து வாழ தமிழ் மக்களுக்குத் தலைமை வகித்தால், அவர் மக்களின் இதயத்தில் மங்காத இடம் பெறுவார் என்பது என் எண்ணம். அது ஈடேறுமா?

திரு. P. V. A. அப்துல்சலாம் அஸாத்
மேட்டுப்பாளையம்

நாங்கள் யாரை இத்தனை வருஷங்களாக நன்கு அறிவோமோ, யாரை அதிகமாக நேசிக்கிறோமோ, யாருடன் அடிக்கடி சச்சரவிட்டோமோ, யாரைப் போற்றி வருகிறோமோ அவரைப்பற்றி நாங்களே சில சமயங்களில்புரிந்து கொள்வது கஷ்டமாக இருக்கிறது. அவர்தான் தமிழ் நாட்டு மக்களின் மனதைக் கொள்ளை கொண்டிருக்கும் தமிழ் நாட்டுத் தலைவர் ஸ்ரீ காமராஜ் நாடார். அவரைப் பற்றித் தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்திய அரசியல் உலகத்திலேயே தெரியாதவர்கள் இல்லை. சென்ற 25 வருடங்களாக தேசப் பணியே திருப்பணி என சளையாது உழைத்து வருகிறார். ஒவ்வொரு தேசிய இபக்கத்திலும் சிறை செல்வதும், வெளியில் வந்து மக்களுக்குச் சேவை செய்வதும் தவிர வேறு குடும்பத்தைப்பற்றி நினைப்பதற்கே

அவகாசமில்லாதவர். பிரமச்சாரி; சிறந்த அரசியல்வாதி மாத்திரமல்ல, பெரிய ராஜ தந்திரியுமாவார். அவருடைய அறிவு, ஆற்றல்; சக்தி, திறமை; தியாகம், சேவை; இவைகளைக் கண்டு தமிழ் நாட்டு மக்கள் பெருமிதமடைகிறார்கள். அவர் அக்கறை காட்டி வரும்—திகைக்க வைக்கும்—அநேக காரியங்கள், அவர் ஈடுபட்டிருக்கும் அநேக வேலைகள் ஆகியவற்றை இந்தச் சிறிய கட்டுரையில் எழுதி முடிப்பதென்பது சாத்தியமில்லை. அவர், தான் மேற்கொண்ட ஒவ்வொரு காரியத்தையும் வெற்றியில் கொண்டு வந்து விடுகிறார். சில சமயங்களில் காங்கிரஸ் மேலிடத்தார்கள்கூட திகைக்கும்படியாக பல அற்புதமான காரியங்களைச் சாதித்திருக்கிறார்.

ஆனால், அவரைப்பற்றியும், கோடிக்கணக்கான தமிழ் மக்களைக் கிரஹித்து வரும் அவருடைய விசித்திரமான—அதியற்புதமான—தன்மையைப்பற்றியும் அச்சடித்த சில காகிதத்தில் வரைய முடியாது. அவருடைய உள்ளத்தின் அடிச்சுவடு இனி வரும் தமிழ் நாட்டுச் சந்ததியாருக்கும் தெரியும்படி செய்திருக்கும் அவருடைய ஒப்பற்ற பெருமையையும் குணத்தையும் என்னென்று கூறுவது? பகைமையும், கொடூரமான பலாத்காரமும் அணுகுண்டுமுள்ள இந்த உலகில், சமாதானம், பாட்டாளி மக்களின் அம்சமாயிருக்கும் இவர், நேர் மாறுபட்டவராகவும், இந்த உலகிலுள்ள பிற்போக்கு எதிர்ப்புச் சக்திகளுக்கெல்லாம் ஒரு சவாலாகவும் நிற்கிறார்.

புதிய சுகங்களிலும், புதிய ஆடம்பரங்களிலும் வெறி கொண்டு ஆசை பிடித்தலையும் இச் சமூகத்தில் இவரோ எளிய வாழ்க்கையைத் தமக்கு இனிமையானவை

களாகக் கொள்கிறார். பணத்தையும், சக்தியையும், அதிகாரத்தையும் பெறுவதற்காக மனிதன் போட்டா போட்டியில் ஈடுபடுகிறான். ஆனால், அந்தப் போட்டியில் இவரோ ஒதுங்கி நிற்கிறார். பதவி, மக்களால் அவர்மீது திணிக்கப்படுகிறது. அவருடைய பலத்தின் ரகசியந்தான் என்ன? இந்தச் சிரேஷ்டமும் அதிகாரமும் அவருக்கு எங்கிருந்து வருகிறது? இந்தியாவிற்கு இத்தனை நூற்றாண்டுகளிலும் பலத்தை அளித்து வந்திருக்கும் அந்த ஜீவ அருவியைக் கண்டு பிடித்து அதிலிருந்து பருகி விட்டாரா?

இந்த இடைக் காலத்தில் பலமும் உற்சாகமும் நிறைந்த அநேகர் செய்யக்கூடிய வேலையை இவர் ஒருவரே தமிழ் நாட்டில் செய்திருக்கிறார். மற்றவர்கள் யாரும் செய்ய முடியாத சேவையை இவர் ஒருவரே செய்து தமிழ் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பியிருக்கிறார்.

எங்களைப் போன்ற இளைஞர்கள், வாலிபர்கள் எத்தனையோ வருடங்களாக அவரை அறிவோம். ஊழியர்களைக் கைதூக்கிவிடவும், அரசியலில் அவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதிலும் காமராஜ் நாடாரைப் போல் இந்தத் தமிழ் நாட்டில் யாரும் இருந்ததில்லை. அவருடைய எல்லா மனோ நிலைகளையும், காரியங்களையும் கண்டிருக்கிறோம். அவற்றின் ஆழத்தில் இருப்பவைகளை ஊடுருவிக் காணவும் முயன்றிருக்கிறோம். அவர் கண்கள் எந்த அடிவானத்தைக் காண்கின்றனவோ அதைப்பற்றிய ஆராய்ச்சி இன்னும் முடியாதவர்களாகவே இருந்து வருகிறோம். அறிவிற்கே எட்டாதவராகத் தோன்றினாலும் அவரைவிட வெளிப்படையானவர்கள் யாரும்

இல்லை. பல சமயங்களில் நாங்கள் அவரை அறிய முடியாமல் போயிருக்கிறது. அவருடன் விவாதிக்கிறோம். சில சமயங்களில் கோபத்தையும் அடைகிறோம். ஆனால், அந்தக் கோபம் சீக்கிரத்தில் மறைந்துவிடுகிறது. நிதானத்தை இழந்துவிட்டதற்காக உடனே நாங்களே வெட்கப்படவும் நேரிடுகிறது.

ஏதோ ஒரு மகத்தான சக்தி அவரிடத்தில் இருக்க வேண்டும். அவருக்குக்கூட ஒருவேளை அந்தச் சக்தி தெரியாமலிருக்கலாம். தமிழர்களை அவர் சக்தி கொள்ளை கொண்டுவிட்டது. அந்தச் சக்தி தமிழ் நாட்டின் உணர்ச்சியா? நமது சமுதாயத்தின் பின்னணியிருக்கும் பல்லாயிர வருஷ அனுபவமும், சித்திரவதைக்கான ஆயிரக்கணக்கான உயிர்களின் நினைவுமே இந்த அபார சக்தியா?

காமராஜின் நாமமும் அவரைப்பற்றிய வரலாறுகளும் இனி வரும் சந்ததியாருக்கு புத்துணர்ச்சியளித்து வரும்.

ஜெய் ஹிந்த்!

The Honourable H. SITARAMA REDDY,

Minister for Industries and Labour,

MADRAS.

Mr. Kamaraj Nadar has been a leading figure in Tamilnad. His devotion to the cause of the Congress and his sacrifices in the freedom struggle of our country are too well known. His zeal for the improvement of the lot of the under-privileged is remarkable. May he live long to serve our country.

கனம் H. சீதாராம ரெட்டி

சென்னையரசாங்கத் தொழில் இலாகா அமைச்சர்

தமிழ் நாட்டில் திரு. காமராஜ் ஒரு முக்கிய தலைவராக இருந்திருக்கிறார். காங்கிரசில் அவருக்கு உள்ள பக்தியும், நம் நாட்டின் விடுதலைப் போரில் அவர் செய்த தியாகங்களும் எல்லோருக்கும் மிக நன்றாகத் தெரிந்ததே. உரிமையற்றோரின் நிலையை உயர்த்துவதில் அவருடைய ஆர்வம் மெச்சத் தக்கது. நம் நாட்டிற்குப் பணி செய்ய அவர் நீண்ட காலம் வாழட்டும்!

கனம் எம். பக்தவத்சலம்

சென்னையரசாங்க மராமத்து இலாகா அமைச்சர்

தலைவர், தொண்டரென்ற வித்தியாசம் ஜனநாயகத்திற்குப் பொருந்தாது. தொண்டரே தலைவராகிறார். எந்தத் தொண்டரும் அவ்வாறு ஆகலாம். தலைவரும் தொண்டராகலாம். தலைவரொருவரை அமைத்துக் கொள்ளுவது ஒரு சௌகரியத்திற்காகவே. ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்டவரால், அவ்வாறு செய்வதன் நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்குத் தக்கவரைப் பொறுக்கி எடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால், பதவியைப் பெறுகிறவருக்கு உயர்வு மனப்பான்மை கூடாது. "ஒருவர் வேண்டும்; அது எனக்குக் கிடைத்தது; அதற்குத் தக்கவாறு நடந்து கொள்ளுவேன்" என்றே கிடைத்த பதவியைக் கொள்ள வேண்டும். மறுமுறை வேறொருவர் பெறுகின்றார் என்றால், முன்பிருந்தவர் மற்றவர்களைப்போல் சேர்ந்து

புதிய தலைவருடன் ஒத்துழைப்பது. இதுவே ஜனநாயக முறை. அவ்வாறே இன்று அக்கிராசனம் வகிப்பவர், நாளை காரியதரிசி ஆகிறார். அவ்வாறானால், ஒருவர் கீழே தள்ளப்பட்டதாக யாரும் கருதுவதில்லை. இந்த ஜனநாயக முறையை முற்றிலும் ஒப்புக் கொள்ளுகிறவர், தலைவர் காமராஜ். இடைவிடா உழைப்பும், உயர்ந்த அரசியல் ஞானமும், விட்டுக்கொடுக்கும் தன்மையும், சகாக்களிடம் விசுவாசமும், நிர்த்தாட்சண்யமும், தேசபக்தியும், சமதர்ம உணர்ச்சியும், தன்னடக்கமும் அவரிடம் குடி கொண்டிருக்கின்றன. இதுவே அவர் பெருமை.

தமிழ் நாட்டின் மீதும், தமிழ் மொழி மீதும் சமீப காலத்தில் போதுஜனங்களுக்கு மிக ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆர்வத்தை, உணர்ச்சியை, நல்ல வழியில் பயன்படுத்த வேண்டும். நாம் சரியான வழியில் சென்றோமேயானால் தமிழ் நாடு நல்ல நிலைமைக்கு வந்து இதர மாகாணங்களைவிட சிறப்புற்றதாக விளங்கும் என்பதில் சந்தேகமே கிடையாது.

—காமராஜ்

The Honourable V. KURMAYYA

Minister for Rural Development

MADRAS

I give below my views of. Leader Kamaraj with pleasure. Srijut K. Kamaraj is one of the South Indian leaders of great eminence. He is a born leader of men and fully justifies the reverential homage you propose to pay him through your book "Leader Kamaraj"

கனம் வி. கூர்மையா

சென்னையரசாங்கக் கிராம அபிவிருத்தி இலாகா அமைச்சர்

தலைவர் காமராஜைப்பற்றிய என் கருத்துக்களை மகிழ்ச்சியுடன் கீழே தருகிறேன்.

"ஸ்ரீஜத் கே. காமராஜ் பெரும் புகழ் பெற்ற தென்னிந்தியத் தலைவர்களுள் ஒருவராவர். அவர் மக்களின் பிறவித் தலைவர். உங்கள் வெளியீடு 'தலைவர் காமராஜ்' மூலமாக தாங்கள் செலுத்த எடுத்துக் கொண்ட வணக்கமான மரியாதைக்கு அவர் முழுவதும் பொருத்தமானவரே"

திரு. கி. வா. ஜகந்நாதன்

ஆசிரியர் "கலைமகள்" சென்னை

இந்த ஜனநாயக யுகத்திலே அரச பதவியை எளிதில் பெற்றாலும் பெறலாம்; பொதுஜனத் தலைவன் என்னும் பதவியைப் பெறுவது எளிதன்று. மக்களுடைய உள்ளத்தில் வைத்து மதிக்கப்பெறும் சிறப்பு இன்னாருக்குக் கிடைக்கும் என்று, அவர்களுடைய பதவியையோ, கல்வியறிவையோ, பணத்தையோ கொண்டு சொல்ல முடியாது. நம்முடைய நன்மையை எந்தக் காலத்தும் சிந்தித்துப் பார்ப்பார் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருந்தால் அத்தகையவர் தலைவராகிவிடலாம்.

காமராஜ் அவர்கள் மக்களின் அன்புக்குப் பாத்திரமான தலைவர்; அவர்களுடைய அன்பைப் பெற்றார். அவர்களுக்குத் தொண்டு செய்து அந்த அன்பைப் பெற்றார். யார் நல்ல முறையில் தொண்டு செய்து சேவகராக இருக்க முடியுமோ, அவரே தொண்டர் தலைவராக, மக்களின் தலைவராக இருக்க முடியும். தொண்டிலே சிறந்து நின்ற காமராஜ் தலைவரானது வியப்பன்று.

தலைவரானது பெரிதன்று. அந்தப் பதவியை அவருக்கே மக்கள் அளித்து மீண்டும் தம் அன்பைப் புலப்படுத்தியிருக்கிறார்கள். அது பெரிது. பெருமைப் படுவதற்குரியது.

காமராஜ் என்றுமே தொண்டர். அந்தப் பெருமை அவரிடமிருந்து எப்போதும் போகாது.

வாழ்க காமராஜ்!

The Honourable K. MADHAVA MENON

Minister for Agriculture

MADRAS

"I heartily congratulate Mr. Sadhanandham in his venture to publish a biographical memoir of Sri K Kamaraj. I have known Sri Kamaraj very intimately. It is rather difficult and delicate to say anything about a very intimate friend Sri Kamaraj is a unique and remarkable man, unobtrusive and silent, but very strong and perhaps even stern in his convictions. He has always the courage to act up to his convictions. He does not seek popularity, but popularity comes to him. He is stead-fast not only in his friendship but in anything he under takes. He is sincere and selfless and Tamil Nad and India can be proud of him. Nothing excites Kamaraj. He is calm and cool under any conditions. He has a remarkably shrewd instinct to understand persons and things. He is a perfect judge of men. His devotion to the Congress is intense and unflagging. May he live long."

கனம் கே. மாதவமேனன்

சென்னையரசாங்க விவசாய இலாகா அமைச்சர்

"திரு. காமராஜின் வாழ்க்கைப் படலத்தைவெளியிடச் செய்யும் முயற்சியில் சதானந்தம் அவர்களை முழு மனதுடன் வாழ்த்துகிறேன். திரு. காமராஜை மிக நெருக்கமாக நான் அறிவேன். ஒரு மிக நெருங்கிய நண்பரைப்பற்றி ஏதாவது சொல்வதென்றால் அதிக மென்மையும், கஷ்டமுமானதுதான். திரு. காமராஜ் ஒரு ஈடில்லாத, போற்றத்தக்க மனிதர். அதிகம் பேசாமல் ஒதுக்கமாக இருப்பவர். தன் கொள்கைகளில் வலிமையும், கண்டிப்புமுள்ளவர். தன் கொள்கைகளின்படி நடந்து காட்டும் ஊக்கம் படைத்தவர். அவர் புகழ்ச்சியை விரும்புவதில்லை. ஆனால், புகழ்ச்சி

அவரைத் தேடி வருகிறது. தான் எடுத்துக்கொண்ட காரியங்களிலும், நட்பிலும் அசைக்க முடியாத பற்றுள்ளவர். தன்னலமற்று உண்மையோடு இருப்பவர். தமிழ் நாடும், இ ந் தி ய நாடும் அவரைப்பற்றிப் பெருமைப் படலாம். காமராஜை ஒன்றும் நிதானம் தவறச்செய்வதில்லை, எந்நிலைகளிலும் அடக்கமும், பதட்டமின்மையும் உள்ளவர். ஆட்களையும், விஷயங்களையும் அ றி வ தி ல் மிகக் கூரிய சக்தி உடையவர். மனிதர்களைச் சரியாகச் சீர்தூக்குவதில் கெட்டிக்காரர். காங்கிரஸில் அவருக்கு உள்ள சளைக்காத பற்று தீவிரமானது. அவர் நீண்ட காலம் வாழ்வாராக."

மாகாணங்களுக்குத் தனித்தனி மொழிகள் இருப்பது இந்தியாவுக்குக் கிடைத்த பாக்கியம். நம்முடைய நீதி மன்றங்களிலும், பள்ளிக்கூடங்களிலும், ச ர் க் கா ர் காரியாலயங்களிலும் நம்முடைய சொந்த பாஷைகள் உபயோகிக்கப்படாமலிருப்பது நம்முடைய உற்சாகமின்மையைத் தவிர வேறு எதுவுமில்லை.

—மகாத்மா காந்தி

திரு எஸ். எஸ். மாரிசாமி

ஆசிரியர் "காண்டிபம்" சென்னை

ஊழியர் காமராஜ்!



அயர்லாந்தின் இணையற்ற தலைவரான டிவெலராவை தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்க வேண்டியதில்லை. தங்கள் தாய் நாட்டின் சுதந்திரத்திற்காக பிரிட்டனுடன் போராடி வெற்றி பெற்ற ஒரு சில தலைவர்களில் அவரும் ஒருவர். சமீபத்தில் அவர் இந்தியா வந்திருந்தார். அப்போது நேருஜியின் விருந்தினராக இருந்துவிட்டுச் சென்றார். மகாத்மாவின் அஹிம்சைக் கொள்கையில் மிகுந்த பற்றுதல் உடையவர்.

இவரை ஒரு அமெரிக்க நிருபர் பேட்டி கண்டு ஒரு அதிசயமான கேள்வி கேட்டார். "நீங்கள் எப்படி தொடர்ந்து தலைவராக இருக்கிறீர்கள்? எங்கள்

அமெரிக்காவிலோ தினத்துக்கொருவர் தலைவராக இருக்கிறார். உலக நாடுகள் பலவற்றிலும் இப்படித்தான் இருக்கிறது. முதல் உலக யுத்தத்தின்போது பிரிட்டனின் தலைவராக லாயிட்ஜார்ஜ் இருந்தார். இரண்டாவது யுத்தத்தின்போது அந்த லாயிட்ஜார்ஜ் இருந்த இடம் தெரியவில்லை. அவருடைய ஸ்தானத்திற்குச் சர்ச்சில் வந்தார். அவரும் இப்பொழுது போய்விட்டார். ஆனால் நீங்கள் மட்டும் எப்படி விடாமல் தலைவராக இருக்கிறீர்கள்?''

டிவெலராவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அமெரிக்க நிருபரின் கேள்விக்குச் சிரித்துக்கொண்டே பதிலும் சொன்னார்.

''தலைமைப் பதவி எனக்கு நிரந்தரமாக இருக்க நான் காயகல்பம் சாப்பிடவில்லை; தேவாம்சமும் பெற வில்லை. மக்களை மயக்கும் மனோவசியமும் எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்றுமட்டும் அறிவேன், அதாவது ஜனங்கள் என்ன நினைக்கிறார்கள், என்ன செய்யவேண்டு மென்று விரும்புகிறார்கள் என்ற அந்த ஒரு விஷயம் மட்டும் எனக்குத் தெரியும். உடனே ஜனங்கள் விரும்புவதைச் செய்கிறேன். இதற்காக ஜனங்கள் என்னைப் பாராட்டுகிறார்கள்; தலைவராக என்னை ஏற்கிறார்கள். இதுதான் என் ரகசியம்''

அமெரிக்க நிருபருக்கு இப்பொழுதுதான் விஷயம் தெரிந்தது. டிவெலரா கூறியது அவ்வளவும் உண்மை யென்று திருப்தியடைந்தார். ஜனநாயக நாட்டில் ஒருவர் தலைவராக இருக்க வேண்டுமென்றால் டிவெலரா கண்ட உண்மையை மட்டும் அறிந்துகொண்டால் போதும்.

அவர்கள் தலைவர்களாக வருவதோடு நிரந்தரத் தலைவர்களாகவும் இருக்கலாம். டிவெலரா கண்ட உண்மை பெரிய ரகசியமல்ல. பிரம்ம சூத்திரமுமல்ல. மிகச் சிறிய விஷயம்தான். ஆனால் இந்தச் சின்ன விஷயம்தான் ரொம்பப் பேருக்குத் தெரிவதில்லை. தெரிந்திருந்தாலும் பதவியோ பட்டமோ அந்தஸ்தோ கிடைத்ததும் உடனடியாக அதை மறந்துவிடுகிறார்கள். இதற்கு உதாரணமாக தமிழ் நாட்டில் பலரைக் குறிப்பிட முடியும். ஆதார பூர்வமாக எடுத்துக் காட்டவும் முடியும். ஆனால் இது இந்த இடத்திற்கு அனாவசியம்.

தலைவர் காமராஜ் டிவெலரா கண்ட உண்மையை எப்படியோ கண்டுவிட்டார். நீண்ட காலமாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு அவர் தலைவராக இருந்து வருவது அனைவருக்கும் தெரியும். அவர் தலைமை வகிக்கும் இந்தக் காலத்தில் எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. எதிர்கால சரித்திரத்தில் பொறிக்கும்படியான நிகழ்ச்சிகள் பல நடந்திருக்கின்றன. தமிழ் நாட்டில் சமீபத்தில் முற்போக்குக்கும் பிற்போக்குக்கும் இடையே ஏற்பட்ட பெரிய மோதலை எவரும் மறந்திருக்க முடியாது. ஏனெனில், அது சாதாரணமான மோதலல்ல. 'சாதாரண' மென்று சொல்லத் துணிகிறவர்கள் சென்னைக்கு அப்போது வந்திருந்தால் அல்லது சென்னையிலிருந்தவர்களோடு பேசியிருந்தால் அப்படிச் சொல்லமாட்டார்கள். அந்தச் சமயத்தில் காமராஜ் எந்தப் பெரிய தலைகளின் ஆதரவும் இல்லாமல் தன்னந் தனியாக நின்றார். அவருக்கு நாற்புறமிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியது. பெரும்பாலான பத்திரிகைகள் அவருக்கு ஹிதோபதேசம் செய்யக் கிளம்பின. செல்வாக்கு மிகுந்த பலர், சாம,

பேத, தான, தண்டம் என்ற சாணக்கிய முறையைக் கையாண்டார்கள். ஒரு சமயம் எதிர்ப்பை மீளவே முடியாதோ என்ற நிலைமை இருந்தது. இந்த நிலைமையைக் கண்ட பல "நண்பர்கள்", காமராஜ் தோற்று விடுவார் என்றுகூட சாகுருவிபோலக் கூறினார்கள். இந்தக் குசுகுசுப் பேச்சு எல்லோர் காதிலும் விழுந்தது. இதனால் காமராஜ் கட்சியில் நெருங்கியிருந்தவர்கள்கூட சிறிது கலவரம் அடைந்தார்கள். காமராஜைத் தேடிப் பிடித்து தங்கள் கவலையையும் அச்சத்தையும் கூற அவர்கள் ஓடினார்கள். அப்போது காமராஜ் எப்படியிருந்தார், இந்த நெருக்கடியை எப்படிப் பாவித்தார் என்பதைப் பார்த்தால் மிகவும் ஆச்சரியமாக இருக்கும்.

கல்யாண வீட்டில் முதற் பந்தியில் ராஜோபசாரத்துடன் சாப்பிட்டுவிட்டு தாம்பூலம் தரித்துக்கொண்டு இருப்பவர்களை நீங்கள் பார்த்திருப்பீர்களென்று நினைக்கிறேன். நிம்மதியாக, எவ்வித பரபரப்போ, படபடப்போ இல்லாமல் அவர்கள் வீற்றிருப்பதைப் பார்க்கும் போது கண்ணுக்கு ரொம்பக் குளிர்ச்சியாக இருக்கும். அவர்களிடம் கவலையென்பது கொஞ்சங்கூட இருக்காது. இரண்டாம் பந்தி சீக்கிரம் முடியவேண்டுமேயென்று காத்துக்கொண்டிருக்கும் மூன்றாம் பந்திக்காரர்கள் முன் சொன்ன தாம்பூலதாரிகளைக் கண்டு பொறாமைகூடப் படுவார்கள். காமராஜ் நாம் சொன்ன தாம்பூலதாரிகளைப் போலத்தானிருந்தார்; அதாவது பரபரப்போ படபடப்போ அவரிடம் காணப்படவில்லை. "இங்கே கையெழுத்து வாங்கிவிட்டார், அங்கே ரயிலிலிருந்து இறங்கிய ஆளையே அபேஸ் செய்து கொண்டு போய்விட்டார்கள்" என்றெல்லாம் வந்து நண்பர்கள் சொல்வார்கள். காமராஜ்

இவற்றை யெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டு இருப்பாரேயொழிய, வந்து சொல்பவர்கள் பதட்டம் அடைகிற மாதிரி பதட்டம் அடையமாட்டார். ரொம்பச் சாவதானமாக இருப்பார். ஊரே பற்றி எரியும்பொழுது இப்படி இருக்கலாமா என்றுகூடக் கேட்பார்கள். "அது சரி, நடந்தால் நடக்கட்டுமே" என்று கூறிவிட்டு கம்மென்று இருப்பார். இந்த மாதிரி இருக்கலாமா—கட்சிக்கோட்டை விட்டுவிடுமே என்று வேண்டியவர்கள் சொல்லுவார்கள். 'போனால் போகிறது' என்பதுதான் காமராஜின் பதிலாக இருக்கும்.

அவ்வளவு நிதானமும் திட நம்பிக்கையும் கொண்டவர் காமராஜ். மக்கள் என்ன நினைக்கிறார்கள். எதைச் செய்தால் விரும்புவார்கள் என்பது அவருக்கு வெகு நன்றாகத் தெரியும். நாடி பிடித்துப் பார்க்கும் டாக்டர்மாதிரி காமராஜுக்கு பொதுஜன அபிப்பிராயத்தை அறியத் தெரியும். அதன்படி நடக்கவும் தெரியும். இதுதான் காமராஜ் கண்டுபிடித்து வைத்திருக்கும் ரகசிய ஆயுதம். இந்த ஆயுதத்தின் முன்னே சூழ்ச்சிகளோ தந்திரங்களோ அசகாய சூரத்தனங்களோ என்ன செய்ய முடியும்? ஒன்றுமே செய்ய முடியாது. இந்த விஷயத்தில் டி.வெலராவும் காமராஜும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்று சொன்னால் யாரும் ஆட்சேபிக்க முடியாது என்று நம்புகிறேன்.

எழும் தமிழகத்திற்கு பெரிய படிப்பினை

காமராஜ் சாதாரண ஊழியராக இருந்தார். அவர் காலஞ் சென்ற சத்தியமூர்த்தியின் பிரதம சிஷ்யர். இந்த சிஷ்யர்தான் மெள்ள மெள்ள வளர்ந்து தமிழ் நாட்டுக்கே

தலைமை தாங்கும் பெரும் பணியை மேற்கொண்டிருக்கிறார். இவ்வளவும் இந்தத் தலைமுறையில் ரொம்பக் குறுகிய காலமான கடந்த 10 ஆண்டுகளுக்குள் நடந்தது. பெரிய பெரிய பட்டங்கள் பெற்றவரல்ல காமராஜ். ஆக்ஸ்போர்ட் பட்டமோ ஹாரோ சர்ட்டிபிக்கேட்டோ அவரைத் தமிழ் நாட்டுக்கு அறிமுகப்படுத்தி வைக்கவில்லை. பரம்பரை பரம்பரையாக சர்க்கார் காரியாலயத்தில் வாசம் செய்து வந்த சந்ததியிலும் அவர் தோன்றவில்லை. ரொம்பச் சாதாரணமானவர். காந்திஜியின் புரட்சி யுகத்தில் தோன்றிய எத்தனையோ சாதாரணமானவர்களில் அவரும் ஒருவர். பிறகு எப்படி இவ்வளவு பெரிய பதவிக்கு வந்தார்? இதுதான் தமிழ் நாடும், குறிப்பாக மாணவர் களும் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கிய விஷயம்.

தூய உள்ளம், சுயநலமின்மை, எடுத்த காரியத்தில் கண்ணையும் கருத்தையும் ஊன்றும் பெருந்திறன், எவர் தயவுக்கும் எதிர்பாராமை, முடிவும் கோணுவதற்கு அஞ்சாமை ஆகிய சீரிய குணங்கள்தான் காமராஜை இன்று இவ்வளவு பெரிய பதவிக்குக் கொண்டு வந்திருக் கின்றன. இந்தப் பதவி இன்னும் அவரையே சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருப்பதற்கும் அவருடைய இந்தக் குணங்கள்தான் காரணம். 'தூய உள்ளம்' என்றால் 'எக்ஸ்ரே' எடுத்துப் பார்த்தாயா என்று யாரும் கேட்கக் கூடாது. விருப்பு வெறுப்பு அற்ற உள்ளத்தைத்தான் தூய உள்ளம் என்று கூறுகிறேன். தனக்கு வேண்டிய வர்கள், வேண்டாதவர்கள் என்ற பாகுபாடே காமராஜுக்கு கிடையாது. இந்த, அவருடன் நெருங்கிப் பழகியவர் களும்சரி, தூர நின்று பார்த்தவர்களும்சரி, காமராஜ் என்றால் பல்லை நறநறவென்று கடிப்பவர்களும்சரி ஒப்புக்

கொள்வார்கள். இந்தக் குணத்தினால் அவர் சில சமயம் பலரின் கோபத்துக்குக்கூட உள்ளாவது உண்டு. நேற்று வரை, அவருக்கு என்னென்ன வகைகளில் விரோதங்களை உண்டுபண்ண முடியுமோ அவ்வளவையும் ஒருவர் செய்கிறார் என்று வைத்துக்கொள்ளுவோம். அவரே இதைக் காமராஜிடம் அறிவிக்கவும் செய்வார். ஆனால், அதே நபர் மறுநாள் வந்து காமராஜிடம் ஏதாவது ஒரு உதவி வேண்டினால் காமராஜ் என்ன செய்வார் என்று நினைக்கிறீர்கள்? நினைப்பது இருக்கட்டும்; என்னபடி நடப்பீர்கள்? இதயத்துக்கு இதயம் பேசுவதாக வைத்துக் கொண்டு இக்கேள்விக்குப் பதில் காண முயன்றால், பதில் சுலபத்தில் கிடைத்துவிடும். அதாவது, வந்தவருக்கு ஒரு அசட்டுச் சிரிப்பைச் சிரித்துவிட்டு நமது இயலாமைக்கு ஒரு முகாரி பாடி அனுப்புவோம். ஆனால் காமராஜ் என்ன செய்வாரென்றால் நம்மை முகாரி பாட வைப்பார். அதாவது, அந்த ஆளை ராஜ மரியாதையோடு வரவேற்று உட்காரச் செய்து தானே முன்னால் நின்று செய்து வைப்பார். சில சமயம் கையிலிருக்கும் பணம் காசைக் கூடக் கொடுத்துவிடுவார். வந்த ஆள் இதைக் கண்டு திக்குமுக்காட வேண்டும். காமராஜ் இதை மிகவும் சந்தோஷத்துடன் செய்வார். வெளியே இதைச் சொல்வாரா என்றால் சொல்லவும் மாட்டார். எங்கேயோ இது பிரஸ்தாபிக்கப்பட்டு மெள்ள வெளிவரும். உடனே அவருடைய நண்பர்கள் காமராஜைப் பார்த்து இப்படிச் செய்யலாமா என்பார்கள். 'போகிறான், ஏதோ கஷ்டம் என்றான்' என்றுதான் பதில் சொல்லுவார். இதில் இன்னொரு வேடிக்கையும் உண்டு. அதே ஆட்கள் பழைய படியும் என்னென்னவோ செய்வார்கள். அப்போதாவது காமராஜ் கோபப்படுவார் என்கிறீர்களா? கிடையவே

இடையாது. ஒரு சிறு விஷயத்தைக் கூறுகிறேன். சம்பந்தப்பட்டவர்களுக்குக்கூட தெரியாத வகையில் மொட்டையாகக் கூறுகிறேன். ஏனென்றால், இது சர்ச்சைக்கு உள்ளாகிவிடக் கூடாது.

கோவை அரசியல் மகாநாடு நடந்ததல்லவா? அதுவரை ஒரு நண்பர் காமராஜ்மீது வசை புராணம் பாடிவந்தார். காமராஜுக்கு முகம் நன்றாக இல்லை, காமராஜுக்கு உயரம் அதிகம் — அது கூடாது — காமராஜுக்கு எங்கும் மரியாதை கிடைக்கிறது; இது என்ன அநியாயம் — என்றெல்லாம் எழுதித் தள்ளிக் கொண்டே இருந்தார். கோவை மகாநாடு நடந்து முடிந்ததும் அவருக்குத் தன் நிலை தெரிந்துவிட்டது. அதாவது, தான் இதுவரை செய்து வந்த திருத்தொண்டு தனக்கே சவக்குழி தோண்டுகிறது என்பதை அவர் உணர்ந்தார். அதாவது, தனது கட்சியைத் தேசத்தில் மதிப்பாரே இல்லை என்று தெரிந்துவிட்டது. மேலும் தன்னையும் தனது அழுகிப்போன எழுத்தையும் கண்டு ஊரே சிரிக்கிறது என்பதை அவர் தெரிந்துகொண்டார். இதற்காக அவர் என்ன செய்தார் தெரியுமா? பத்தாயிரம் அடி உயரமுள்ள ஒரு பெரிய கோபுரத்தின்மீது ஏறினார். ஊராரே, என்னைப் பாருங்கள், என் செயலைப் பாருங்கள் என்று கூறிவிட்டு, உச்சியிலிருந்து தலைகீழாகப் பாய்ந்து தரைக்கு வந்ததும் ஒரு பெரிய பல்டியடித்து எழுந்து நின்று தன் நெஞ்சைத் தட்டிக் காண்பித்தார். 'காமராஜ், காமராஜ்தான்' என்று எழுதினார். அவருடைய தலைமைப் பதவிக்கு ஒரு புகழ்ப் பரணி பாடினார். அவர் திருவுருவத்துக்கு ஒரு அஞ்சலி செய்து அவர் சேவைக்கு தீபாலங்காரம் காட்டினார். மறுநாள் இவர் காமராஜின்

உபசரிப்புக்கும் உதவிக்கும் ஆளானார். இது என்ன கூத்து? காமராஜ் எப்படி மன்னித்தார் என்று ஆச்சரிய மாக இருக்கும். இதுதான் காமராஜின் அருங்குணம். தமிழனுக்குத் தலைதலைமுறையாக இருந்துவரும் மாற்றானை மன்னிக்கும் குணம். இந்தக் காலத்தில் இத்தகைய குணமுடையோர்களைக் காண்பது ரொம்ப அரிது. இந்த மாதிரி பல அரிய உதாரணங்களைக் காட்ட முடியுமென் றாலும் நான் இங்கு காட்ட விரும்பவில்லை. ஏனெனில் இதில் எவர் மனமும் புண்பட்டுவிடக்கூடாது என்பது எனது நோக்கம்.

வெறுப்பு எப்படி காமராஜுக்குக் கிடையாதோ அதேபோல விருப்பமும் அவருக்குக் கிடையாது. இன்றையதினம் அவருக்குத் தமிழ் நாட்டில் இருக்கும் செல்வாக்கையும் மதிப்பையும் அறிந்தவர்களுக்கு இது நன்றாக விளங்கும். அவர் நினைத்தால் எதை வேண்டு மானாலும் செய்யலாம். மிக நன்றாக வாழ்க்கை நடத்தலாம். ஆனால் காமராஜ் அப்படி நடக்கவில்லை. சேவைதான் அவர் லட்சியம். சேவை உணர்ச்சிக்கு சுகம் எதிரி. சௌகரிய வாழ்க்கை விரோதி. இந்த விரோதிகள் தன்னை நெருங்காதபடி பார்த்துக்கொள்வதில் காமராஜுக்கு கர்ம சிரத்தையுண்டு.

டிவெலராவின் காயகல்பம் காமராஜுக்கு உண்டு என்றேனல்லவா? இந்தக் காயகல்பத்தை அரைக்க ஒரு யந்திரம் வேண்டுமே. அந்த யந்திரத்தையும் காமராஜ் கண்டு பிடித்து வைத்திருக்கிறார். திருடர்களோ கொள்ளைக்காரர்களோ ஐந்தாம்படைக்காரர்களோ இந்த யந்திரத்தை அணுக முடியாது. அவ்வளவு பாதுகாப்பு;

உஷார். அப்பேற்பட்ட அந்த யந்திரம் இரும்பால் செய்ததா என்று கேட்காதீர்கள். அதையும் சொல்லி விடுகிறேன். அந்த யந்திரம்தான் **ஊழியர்களின் அன்பு.** இந்த அன்பை கண்ணினைக் காக்கும் இமைகள்போல காமராஜ் பாதுகாத்து வருகிறார். ஊழியர்களுக்கும் அவருக்குமிடையே இருக்கும் தொடர்பு, பிணைப்பு, பற்று, நேசம் எவராலும் அசைக்கவோ திருப்பவோ முடியாதவை. தமிழ் நாட்டின் சரித்திரத்தில் காணப் படும் எத்தனையோ தலைவர்களில் ஒருவருக்குக்கூட ஊழியர்களிடம் இவ்வளவு நெருக்கம் இருந்ததில்லை. இதற்கு என்ன காரணம்? காமராஜே ஒரு ஊழியர். அன்றும் அவர் ஊழியர்; இன்றும் அவர் ஊழியர். பெயர்தான் தலைவர் என்று மாறியதேயொழிய அவர் தன்மை, ஊழியராக இருந்தபொழுது எப்படி இருந்ததோ அப்படியேதான் இன்றும் இருக்கிறது. அத்தகைய அருங் குணத்தவர் நீடூழி வாழவேண்டும்.

"நாம் பலசாலிகளாகவும், ஒற்றுமையுள்ள வர்களாகவும் இருந்தால் யாரும் நம் விஷயத்தில் தலையிடவே முடியாது. யாரேனும் தலையிட்டால் நாம் சும்மா பார்த்துக்கொண்டுதான் இருப்போமா? பயப்படுவது தமிழர்கள் சுபாவமல்ல. பொது விஷயங்களில் எல்லோருடனும் ஒத்துழைத்து, ஒற்றுமையாக இருந்து நம்மையும், தேசத்தையும் முன்னேற்றமடையச் செய்யும் வகையில் நடக்க வேண்டும்.

—காமராஜ்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

ஆசிரியர் "பாரதிதாசன் குயில்"

புதுச்சேரி

காமராசர் வெற்றி

வேறெவர் வெல்ல முடியும்?

ஈண்டுகாங் கிரஸ்குழுவின் தலைமைக் காக
இற்றைநாள் தேர்தலினை நடத்தி னாராம்.
தூண்டினராம் திரவிடரைப் பார்ப்ப னர்கள்
தோற்கடிப்பீர் காமராஜ் தம்மை என்று!

மாண்டதுவாம் அப்போட்டி! பார்ப்ப னர்கள்
மண்கௌவிச் சாய்ந்தாராம். என்றோ மூர்கள்
மீண்டும்உயர் காமராஜ் வென்றார் என்றார்
வேறெவர்தாம் வெற்றிபெற முடியும் என்றேன்.

அறிவுடையார் மானமுள்ளார் காம ராசர்
அன்புடையார் திரவிடநன் மக்கள் மீதில்!
நெறியறிந்து செலத்தக்க ஆற்றல் உள்ளார்
நெஞ்சத்தில் தெளிவுடையார் தந்ந லத்தைச்
சிறிதேனும் எண்ணாத பெரும்பண் புள்ளார்
திரவிடத்தைக் காத்திடுமோர் உறுதி யுள்ளார்
பிறரிடத்தில் நமைவிற்றுப் பெருமை கேட்கும்
மாபோசீ டீகேசீ போன்றார் அல்லர்.

தீதுசெய வடக்குவந்து செப்பி னாலும்
சிறிதேனும் ஒப்பாமை அவர்பால் கண்டோம்.
வேதக்கை காட்டிஇது தணல்என் றாலும்
வேகாது விருதுநகர் பருப்பாம் என்றே
ஓதிடுமோர் ஆழ்ந்தபெருங் கொள்கை யுள்ளார்
உயர்நோக்கும் இனப்பற்றும் உயிராய்க் கொண்டார்
சேதிஇனி ஒன்றுண்டு காம ராசர்
திராவிடத்துத் திருமேனி! இன்னும் என்ன?

உயர்நிலைக் காமராசர்க்கு

பெருநிலையில் இருக்கின்றீர் காம ராசப்
பெருந்தகையீர்! உம்பெருமை, அவர்கள் கண்ணில்
கருவேலின் முள்போலே உறுத்தும். நீவிர்
கடுகளவும் அஞ்சாதீர். கோட்சே கூட்டம்,

திரைமறைவில் நோக்கத்தை வைத்திருக்கும்:
வெளிப்புறத்தில் செல்வாக்கை வளர்க்கும் இந்த
விரிவுதனை நீர்அறிவீர். அஞ்ச வேண்டாம்
கோட்சேக்கள் செல்வாக்கை வீழ்த்த வேண்டும்.

ஏழைக்கும் செல்வனுக்கும் பன்மதத்தார்
எல்லார்க்கும் எதிலும்நலம் புரிய எண்ணி
வாழ்ந்ததுவும் குற்றமெனக் காந்தி அண்ணல்
மார்புபிளந் தார்! காம ராசரே, எம்
தோழரே, திராவிடரே, உமது மேன்மை
தொலைப்பதற்கும் வழிபார்க்கும் கோட்சே கூட்டம்!
ஆழ்ந்திதனை எண்ணிடுக. கோட்சே கூட்டத்
ததிகாரம் ஒழியுமட்டும் மீட்சி இல்லை.

(அனுமதியுடன் வெளியிடப்படுகிறது)

மதம் என்பது ஒருவர் போதிக்கக்கூடியதன்று; கற்றுக்கொள்ளக் கூடியதும் அன்று. மனித வர்க்கத்துக்கு உண்மையான சேவை செய்வதுதான் உண்மையான மதம்.

—சத்தியமூர்த்தி

The Honourable, Sri. K. CHANDRAMOULI,

Minister for Local Administration, MADRAS.

I take it a personal privilege to write these few lines on Sri KAMARAJ, one of our topmost leaders in our province. Kamaraj with his perseverence and integrity of character has endeared himself to the people of Madras and particularly of Tamil Nad with whom he had intimate contact and connection. His capacity for organising the people in a well disciplined manner and enabling them to rise to higher status and position on well laid foundations of service and simplicity has made him the chosen and acknowledged leader of the people. He is serene and calm and of balanced mind. He may differ with several leaders in certain fundamental principles but it is his greatness that he does not exhibit any passion or anger but takes things calmly and judges them on their merit. He accepts if he errs but persists to the last if he feels that he is in the right. He is sincere in his attempts and did immense service to the people of the Province in rendering the Congress organisation effective and efficient in the service of the people.

He does not stand on formalities nor does he work for his personal ambitions. He organised labour in such a way that he has avoided several strikes in crisis and brought about amicable settlement and thus did immense service to the labour and the Provincial Government.

He is simple, hard working and always aims at the welfare of the people at large. May this leader of Tamil Nad live many more years and work for the prosperity and welfare of the people particularly the common man in the street.

I wish him all success and God-speed in his selfless work with sympathetic heart.

கனம் கே. சந்திரமௌலி

சென்னையரசாங்க ஸ்தல ஸ்தாபன இலாகா அமைச்சர்

நம் மாகாணத்தின் மிக உயரிய தலைவர்களில் ஒருவராகிய திரு காமராஜைப் பற்றி சில வரிகள் எழுதப் பெருமையடைகிறேன். தன் விடாமுயற்சி, ஒழுக்க உயர்வு இவற்றால் சென்னை மக்களையும், குறிப்பாகத் தமிழ் நாட்டு மக்களையும் தன் நெருங்கிய பழக்கத்தால் கவர்ந்திருக்கிறார். நல்ல கட்டுப்பாடான முறையில் மக்களை ஒன்று திரட்டி அவர்களை பணிவு, எளிமை என்ற நல்ல அடிப்படைமீது உயர்ந்த அந்தஸ்திற்கும் நிலைக்கும் உயரச்செய்த அவருடைய திறமையானது மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட, ஒப்புக்கொள்ளப்பட்ட தலைவராக்கியிருக்கின்றது. அவர் கலங்காத, அமைதியான, ஒருமனப்பட்டவர். சில அடிப்படையான கொள்கைகளில் பல தலைவர்களுடன் அவர் வேறுபடலாம்,

ஆனால் அவருடைய பெருமை, கோபமோ அல்லது குரோதமோ காட்டாமல், நிதானமாக விஷயங்களை ஆராய்ந்து அவற்றின் உயர்வுக்குத்தக்கபடி தீர்மானிக்கிறார். தான் தவறாகயிருந்தால் அதை ஒப்புக்கொள்கிறார், ஆனால் தான் செய்வது சரியானதுயென்றால் கடைசிவரை விடாப்பிடியாயிருப்பார். தன் முயற்சிகளில் உண்மையானவர். மக்களுக்குப் பணிசெய்வதில் காங்கிரஸ் ஸ்தாபனத்தை வலுவானதாகவும், தேர்ச்சிபெற்றதாகவும் செய்ததில் மாகாண மக்களுக்கு பெரிய சேவைசெய்தார். வெறுஞ் சடங்குகளை விரும்புவதுமில்லை, சொந்த நலனுக்காகவும் அவர் வேலை செய்வதுமில்லை. தொழிலாளரைச் சரியான முறையில் ஒன்றுதிரட்டி நெருக்கடியான சமயத்தில் வேலை நிறுத்தமேற்படாமல் தடுத்து சுமுகமான முடிவை உண்டாக்கி தொழிலாளருக்கும், மாகாண கவர்ண்மெண்டுக்கும் அதிக சேவைசெய்திருக்கிறார்.

அவர் எளிய வாழ்வும், அதிக உழைப்புமுடையவர். மக்களின் நலமே எப்பொழுதும் அவரது குறிக்கோள். இத்தமிழ்நாட்டுத்தலைவர் அநேக ஆண்டுகள் வாழ்ந்து சாதாரண மக்களின் நலத்திற்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடட்டும். அவர் தன்னலமற்ற சேவையில் வெற்றியும் யோகமும் கிடைக்க இதய பூர்வமாக விரும்புகிறேன்.

சென்னை ஷரீப்

திரு எஸ். எ. ஷாபி முஹம்மத்

ஜனநாயக நாட்டில் ஒருவர் மக்களின் தலைவராகத் திகழ வேண்டுமானால் அவரிடம் சிறந்த பல இயல்புகளும், மக்களின் மனதை கவரத் தக்க கருத்தமைந்த பேச்சும், பிறர் திட்டங்களில்காணும் குறைகளை எடுத்துக் காட்டி பழுதற்ற திட்டங்களைப் பகுத்துக் கொடுக்கும் திட்பமும், அறிவுத் திண்மையும் இருக்க வேண்டும். இவற்றுக்கு அடிப்படையாக வேண்டியது ஓரளவுக்கு மேற்பட்ட கல்வியறிவு என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர்.

ஆனால், தமிழ்நாடு இந்த விதிக்கு விலக்காக நின்று உலகமே வியக்கத்தக்க வெற்றி பெற்றிருக்கிறது. உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வார்த்தைகளை அள்ளிச்

சொரிந்த அழகிய பேச்சோ, பலரும் போற்றிப் புகழ்ந்து பெருமைப்படுத்தும் பல்கலைக் கழகப் பட்டமோ இல்லாதவர்களும் சிறந்த காரியவாதிகளுமான இருவர் இங்கு தலைமைப் பதவியிலிருந்து கொண்டு பல காரியங்களைப் போற்றற்கரிய விதத்தில் சாதித்திருக்கிறார்கள்.

அவர்களில் ஒருவர் உண்மையும் உள்ளத் திண்மையும் உயரிய பக்தியும் கொண்டு திகழும் பிரதம மந்திரி ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள், மற்றொருவர் பிறர் பெருமையைக் கண்டஞ்சித் தலைவணங்காதவரும் சிறந்த தொண்டிலே சோர்வற்ற செயல் படைத்தவருமான தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் காமராஜ் நாடார் அவர்கள்.

"முசுக்கட்டை இலை காலத்தாலும் பொறுமையாலும் பட்டாக மாறிவிடுகிறது" என்பது பாரசீகநாட்டுப் பழமொழி. இதுபோலவே மனிதன் உலையா உழைப்பாலும் உண்மை உள்ளத்தாலும் உயர் பதவிகளை அடைந்து விடுகிறான். மனதைக் கவரும் பேச்சோ, பலரும் போற்றும் கல்விப்பட்டமோ அவனுக்குத் தேவையில்லை.

இதைத் தொன்று தொட்டே உணர்ந்து மதித்து வரும் தமிழ் நாடு இன்று உண்மை உழைப்பாளிகளைத் தலைவர்களாகக் கொண்டதில் வியப்பொன்றுமில்லை.

தலைவர் காமராஜ் அவர்கள் அரிய காரியவாதி. அவரிடம் அடுக்கு மொழிகளையும் அலங்காரப் பேச்சையும் எதிர்பார்க்க முடியாது. நாட்டு நலனை சிந்தையிலே நாட்டி சொந்த விருப்பு வெறுப்புக்களை வெட்டித் தள்ளி உண்மைக்கு உழைக்கும் உயர்ந்த மனிதர் அவர் என்பதைப்

பலகாலமாக நான் அறிந்திருக்கிறேன். தியாகம், தேசத் தொண்டு, தன்னலமின்மை ஆகியவற்றைத் தனதுவாழ்வின் அடிப்படையாகக் கொண்டவர் என்பதை அவருடன் பழகிய பன்னாட்களாகக் கண்டும் கேட்டும் வருகிறேன். இந்த உயரிய நோக்கங்கள்தான் அவரைப் பல ஆண்டுகளாகப் பொறுப்புள்ள பெரும் பதவியில் வைத்துள்ளன.

உறுதியற்ற உதியங் கிளையைப் பிடித்து ஊஞ்சலாட முயல்பவன் கிளையுடன் விழுந்து மடிகிறான். வலிமை வாய்ந்த புளியங் கிளையைப் பற்றி ஊஞ்சலாட முயல்பவன் தன் எண்ணம் ஈடேறி இன்பம் எய்துகிறான். ஆகையால் இடம் பொருள் ஏவல் ஆகியவைகளை ஆராய்ந்து தமக்குத் துணையாக அழைத்துச் செல்லும் பெரியாரின் ஆற்றலை அறிந்து சிறந்த செயல்களைச் செய்யத் துணிவு கொள்ள வேண்டும் என்பது தெளிவாகிறது. இதனை,

"அரியவற்றுள் எல்லாம் அரிதே; பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"

எனப் புலவர் பெருந்தகை திருவள்ளுவர் அழகுறக் கூறிச் சென்றுள்ளார்கள்.

இந்திய நாட்டின் தந்தையும் பெரியார்களுக்கெல்லாம் பெரியாருமாகிய மஹாத்மா காந்திஜீ அவர்களால் தான் இந்த நாடு விடுதலை பெற முடியும் என மக்கள் நம்பினர்; அவரது வாக்கை வேத வாக்கியத்தினும் மேம்பட்டதாகக் கருதினர்; உலகம் கண்டிராதபடி அவர் காட்டிய அஹிம்சையை ஏற்றுக்கொண்டனர்; அவர் ஆணையிட்டபோது சத்தியாக்ரஹப் போரிலே குதித்தனர்.

உண்மைக்கு உறைவிடமான காந்திஜீயின் கட்டளைப்படி சத்தியாக்ரஹப் போரிலே குதித்த சாதாரணத் தொண்டர்களில் ஒருவர்தான் நமது தலைவர் காமராஜ் அவர்கள். மஹாத்மாவின் திட்டங்கள் புளியங்கிளைபோல உறுதி படைத்ததாக இருந்ததால் வெற்றி பெற்றன. நாடு சுதந்திரம் பெற்று நாட்டு மக்கள் பிறநாட்டாருடன் சரிநிகர்ச் சமானமாகத் தலை நிமிர்ந்து நடக்கின்றனர். இன்ப வாழ்வு காணத் தொடங்கி உண்மைத் தியாகிகளைத் தலைவர்களாக ஏற்றுக்கொண்டனர்.

இதன் பயன்தான் காந்திஜீயின் அடிச்சுவட்டைப் பற்றியொழுகும் தொண்டராகிய காமராஜ் நமக்குத் தலைவராக வீற்றிருப்பது. இதற்காக நாம் பெருமை கொள்கிறோம். உழைப்புக்கு உயர்வளிக்க வேண்டியது மக்கள் கடமை என இதன்மூலம் தமிழ்நாடு உலகுக்கு வழி காட்டுகிறது.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதைக் கொள்கையாகக் கொண்ட காமராஜ் அவர்கள்,

"துன்பம் உறவரினும் செய்க; துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை"

என்ற வள்ளுவரின் வாக்கைத் தன் வாழ்க்கையிற் கொண்டு பொதுமக்கள் நலனைப் பெரிதெனப் போற்றி உழைத்து வருகிறார். அவருக்குத் தொண்டிலே மேலும் திளைப்பும் உடலிலே வலிமையும் உதவ இறைவனை இறைஞ்சுகிறேன். அவரது தலைமையில் தமிழ்நாடு கல்வி, செல்வம், செழிப்பு இவற்றைப் பெற்று இன்பம் பயக்குமென நம்புவோமாக.

ஜெய் ஹிந்த்!

திரு V. M. உபயதுல்லா

(உபதலைவர், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி)

வேலூர்



காமராஜ் தலைவரா?

மேடைப் பேச்சாளர்களெல்லாம் எழுதத் தெரிந்தவர்களல்ல. எழுதத் தெரிந்தவர்கள் எல்லாம் மேடையில் பேசத் தெரிந்தவர்கள் அல்ல. எழுதவும் பேசவும்

தெரிந்தவர்கள் மிகச் சிலரே. நான் பல வருஷங்களாக மேடையில் கத்திக்கொண்டு வருகிறேன். என்னைப் பலர் மேடையில் பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்வதனால் நான் என்னை ஒரு பேச்சாளனாகவே நினைக்கிறேன். நான் எழுத்தாளன் அல்ல. இதுவரை கட்டுரை எதுவும் எழுதினவனுமல்ல. எனக்குக் கட்டுரை எழுதவும் தெரியாது.

தலைவர் காமராஜ் அவர்களைப்பற்றி, கட்டுரை எழுதியனுப்பும்படி இரண்டு கடிதங்கள் வந்துவிட்டன. வேலையோ கட்டுரை எழுதுவது; விஷயமோ காமராஜைப் பற்றியது. தருமசங்கடமென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அதை இப்பொழுதுதான் அநுபவித்தேன். தள்ளவும் முடியவில்லை. எழுதவும் முடியவில்லை.

இந்நிலைமையில் எனது நண்பர் விமுதன் ஒரு யோசனை சொன்னார். அதாவது தலைவர் காமராஜ் அவர்களைப்பற்றி விமுதன் கேள்விகள் கேட்க வேண்டியது; நான் பதில் சொல்ல வேண்டியது. பதிலை எல்லாம் சேர்த்து எழுதினால் கட்டுரையாகிவிடும் என்றார். இது நல்ல யோசனையல்லவா? இந்த யோசனை சொன்ன விமுதனை விட்டுவிட எனக்குப் பிரியமில்லை. ஆகையால் விமுதன் கேள்விகளையும் எனது பதில்களையும் படியுங்கள்.

கேள்வியும் பதிலும்

கேள்வி: உங்களுக்கு எத்தனை வருஷகாலமாக தலைவர் காமராஜ் அவர்களைத் தெரியும்?

பதில்: சுமார் 25 வருஷகாலமாகத் தெரியும். ஆனால் 1930லிருந்து மிக்க நெருங்கிய பழக்கமுண்டு.

கேள்வி: உங்களுக்குக் காமராஜ் இளையவரா? அல்லது முதியவரா?

பதில்: இரண்டு வருஷங்கள் முதியவர். தலைவர் 1903ல் பிறந்தவர்; நான் 1905ல் பிறந்தவன். அதனால் தான் அவர் தலைவர்; நான் உப தலைவர்.

கேள்வி: அவர் இன்னும் கல்யாணம் செய்துகொள்ளவில்லையே, இதைப்பற்றி நீங்கள் அவரிடம் பேசியது உண்டா?

பதில்: கல்யாண விஷயம்பற்றிப் பேசினால் மற்றப் பேச்சுக்கும் முற்றுப் புள்ளி விழுந்துவிடும். அவர் கல்யாண விஷயமாக யாருடனும் விவாதம் செய்ததில்லை. காமராஜ் மற்ற எல்லா விஷயங்களிலும் தமிழ் நாட்டிற்கு வழிகாட்டியாகத்தானிருக்கிறார். ஆனால், மற்றவர்கள் கல்யாணம் செய்துகொள்ளாமலிருக்க தான் வழிகாட்டியாக இருக்கிறார் என்றால் அதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். காரணம் தலைவர் பல கல்யாணத் தம்பதிகளை வாழ்த்தித் தந்திகளும், கடிதங்களும் அனுப்பியிருப்பது எனக்குத் தெரியும். அவருக்குக் கல்யாணத்தைப்பற்றிச் சிந்தனையே இல்லை. ஆனால், தலைவருடைய தாயாருக்குத் தன் மகன் கல்யாணம் செய்துகொள்ளவில்லையே என்ற கவலையைத் தவிர வேறு இல்லை.

கேள்வி: அவர் பேச்சின் தன்மையென்ன? ஏதாவது ஹாஸ்யம் உண்டா?

பதில்: அவர் பேச்சு சாதாரண தன்மையுடையது தான். ஹாஸ்யமில்லை. ஆனால் ஹாஸ்யமாக யாராவது பேசினால் நன்கு ரசிப்பார்.

கேள்வி: தலைவருக்குச் சொந்த ஊர் எது? அங்கு செல்வாக்கு உண்டா?

பதில்: இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள **விருதுநகர்** தான் சொந்த ஊர். பெரிய வியாபாரிகள் நிறைந்த ஊர் விருதுநகர். அங்கு வியாபாரிகள் பணத்தை பல பக்கங்களிலும் இறைத்துவிட்டு கணக்குப் புத்தகத்தை இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டிக்கொள்வார்கள். அது போலவே விருதுநகரின் பொக்கிஷமான காமராஜையும் பல ஊர்களிலும் அலைய விட்டுவிட்டு, அவர் அங்கும் இங்கும் பேசிய பேச்சுக்கள் பத்திரிகைகளில் வருபவைகளை அவ்வூர் வாசிகள் ஒரு முறைக்கு இரு முறை படித்துப் பந்தோபஸ்தும் செய்துகொள்வார்கள். அங்குள்ள காங்கிரஸ் விரோதிகளும்கூட காமராஜைக் குறைத்துப் பேச இடங் கொடுக்கமாட்டார்கள். அவர் பாதுகாப்புக் கைதியாக வேலூர் சிறையிலிருக்கும்பொழுது விருதுநகர் முனிசிபல் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாரென்றால், சொந்த ஊரில் செல்வாக்கைப்பற்றிக் கேட்பானேன்?

கேள்வி: மற்ற மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர்களைவிட விசேஷ அம்சங்கள் ஏதாவது நம் தலைவரிடம் உண்டா?

பதில்: உண்டு. மற்ற மாகாணத் தலைவர்கள் பட்டதாரிகளாயிருப்பார்கள். அல்லது பணக்காரர்களாயிருப்பார்கள். அல்லது படித்த பணக்காரர்களாயிருப்பார்கள். சந்தர்ப்பம் கிடைத்தவுடன் மந்திரிகளாகவும் ஆகிவிடுவார்கள். நமது தலைவர் பணக்காரரல்ல; பட்டதாரியுமல்ல. கவர்ன்மென்ட் காரியாலயத்தில் வாசம் செய்துவந்த சந்ததியிலும் தோன்றியவரல்ல. சாதாரண

தொண்டராகயிருந்து ஓயாத ஊழியத்தால் தமிழ்நாட்டின் தலைவரானார். நினைத்தால் மந்திரியுமாகியிருக்கலாம். ஆனால், சேவைதான் அவரது முக்கிய இலட்சியம்.

கேள்வி: காமராஜுக்கு நிர்வாகத் திறமையுண்டா?

பதில்; காமராஜ் நிர்வாகத்தில் குறை சொல்ல இடமேது. அவர் மூன்றாவது முறையாகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பத்து வருட காலமாகத் தொடர்ந்து தமிழ் நாட்டுத் தலைவராக இருக்கிறாரே, இது போதாதா? இன்னும் அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தும், கூட்டத்தில் பேசுவார் இல்லாமல் அதே கூட்டத்தில் நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேறியதே இது அவருடைய திறமையைக் குறிப்பிடவில்லையா? மாகாணக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், எத்தனையோ நெருக்கடியான விவாதத்தில் மிக சாமர்த்தியமாக விஷயத்தை முடிவுக்குக் கொண்டு வருவதை நேரில் பார்க்க வேண்டும்! திருச்செங்கோடு தேர்தலில் ஆரம்பித்து 'கிளிக்' என்ற வார்த்தையோடு முடிவுற்ற விவாத காலத்தில் நவீன மௌனத்தாலே நியாயத்தை நிலைநிறுத்தினாரே இது உங்களாலேயும் என்னாலேயும் முடியக்கூடிய காரியமா? இவர் தலைமை காலத்தில் நடைபெற்ற சட்ட மறுப்புகள், சட்டசபைத் தேர்தல்கள், உபதேர்தல்கள், இவைகளில் வெற்றியெல்லாம் இவரின் நிர்வாகத் திறமையின் அம்சமேயாகும்.

கேள்வி: காமராஜின் பொதுஜனத் தொடர்பு எத்தன்மையுள்ளது?

பதில்: இந்தக் கேள்வி விளக்கமாக இல்லை. காமராஜ் பொதுஜனங்களைப்பற்றிச் சரியாகத் தெரிந்து

கொண்டிருக்கிறாரா? பொதுஜனங்கள் தலைவர் ஸ்தானத்துக்கு உரிய மரியாதையை காமராஜ் அவர்களுக்குக் கொடுக்கிறார்களா? என்பது உங்கள் கேள்வியின் தன்மையாக இருந்தால், தமிழ் நாட்டின் மக்களையே நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். தமிழ் நாட்டு மக்களில் என்னைவிட அவர்மேல் பக்தியுள்ளவர்கள் எத்தனையோ பேர்கள் உண்டு. அப்படிப் பக்தியுள்ளவர்கள் காமராஜிடம் நேரில் பேசிக் கூட இருக்கமாட்டார்கள். சரியானவைத்தியர் நாடியைப் பார்த்து எப்படி வியாதியின் தன்மையைப் பூரணமாகப் புரிந்துகொள்ளுகிறாரோ, அதுபோலவே நம் நாட்டிலுள்ள மந்திரிகள் முதல் கவர்ண்மெண்ட் அதிகாரிகள் உள்பட, பணக்கார வர்க்கம், வக்கீல், வைத்தியக் கூட்டங்கள் வியாபாரிகளையும் இவர் எடை போட்டு வைத்திருக்கிறார். கஷ்டப்படும் விவசாயிகள், ஏழைத் தொழிலாளிகள் இவர்களின் குறைகளைக் கண்டு தெரிந்திருக்கிறார். இதுமட்டுமின்றி அரசியல் செப்படி வித்தைக்காரர்களையும் சரியாகப் புரிந்துகொண்டுதானிருக்கிறார் நமது தலைவர்.

கேள்வி: அவர் முன்னேற்றம் உங்கள் போன்ற தோழர்களின் உதவியால்தானே?

பதில்: இல்லை. இல்லவேயில்லை. அவர் அடைந்த முன்னேற்றம் அவர் சக்தியைக் கொண்டுதான். அவர் முன்னேற்றத்திற்கு எந்தத் தனி மனிதனும் காரணமில்லை. அவர் சக்தியையும் உழைப்பையும் பார்த்து என் போன்றவர்கள் அவருடன் சேராமல் வேறு யாருடன் சேருவது?

கேள்வி: காமராஜ் அரசியல் அறிவு எப்படி?

பதில்: அப்படிக் கேளுங்கள். அவர் அரசியல் அறிவு அபாரமானது. தீர்க்கதரிசனமுடையது. பின்னால் வரும் அரசியல் சம்பவங்களை முன்னாலேயே சொல்லிவிடுவார். இதற்கு எத்தனையோ சம்பவங்களைச் சொல்லலாம். 18 வருஷத்திற்குமுன் அவரோடு அலிபுரம் ஜெயிலிலிருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. முதல் வட்டமேசை மகாநாடு கூடியது. அப்பொழுதுதான் அதற்கு இந்தியாவிலிருந்து போகும் அங்கத்தினர்கள் ஜாபிதா பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தது. பலர் கூடி பத்திரிகையைப் பார்த்து பேசிக்கொண்டிருந்தோம். நம் தேசத்தைப்பற்றி சாப்ரூ நன்கு பேசுவார் என்றார்கள் சிலர். ஐயகர் நன்றாகப் பேசுவார் என்றார்கள் மற்றும் சிலர். ஜின்னாதான் மிகவும் நன்றாகப் பேசுவார் என்றார்கள் வேறு சிலர். இப்படியே ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனால் தலைவர் காமராஜ் மட்டும் மௌலானா முகமத்அலி ஒருவர் தான் நம் தேசத்தின் தேவையை, நம் தேசத்தின் தன்மையை சரியாக எடுத்துச் சொல்லுவார் என்று சொன்னார். அப்பொழுது அங்கிருந்த அரசியல் கைதிகளில் யாருக்கும் நம் தலைவர் பேச்சில் நம்பிக்கை இல்லை. காரணம் அக்காலத்தில் மௌலானா முகமத்அலி அவர்கள் காங்கிரஸிலிருந்து மாறுபட்டு காங்கிரசையே குறை சொல்லிக்கொண்டிருந்தார். ஆகையால் தான் யாரும் தலைவர் பேச்சில் நம்பிக்கை வைக்கவில்லை. ஆனால் தலைவர் சொல்லியபடியே லண்டனில் மௌலானா நம் தேசத்திற்காக வீரகர்ஜனைசெய்தார். இதுபோலவே இரண்டாவது வட்டமேசை மகாநாட்டிற்கு மகாத்மாஜீ லண்டன் போனபோதிலும் நமது ஒப்பற்ற தலைவர் காந்திஜீ வெறுங்கையுடனே திரும்பி வருவார் என்று சொன்னார். நமது தலைவர்காமராஜ்சொன்னது சொன்னபடியே நடைபெற்றது.

தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஊழியர்களிடமும் நான்கு வார்த்தைகள் பேசுவதிலிருந்தே, ஊழியர்களை எடை போட்டு விடுவார். இதுமட்டுமா வடநாட்டு தலைவர்களுடன் பேசி இவர் அசல் தங்கம், இவர் இத்தனை மாத்துக்குறை என்று நிதானித்து விடுவார். வேறு கேள்வியுண்டா?

இன்னும் ஒரு கேள்விதான்: காந்திஜீயைப் பற்றி காமராஜ் அபிப்ராயம் என்ன?

காந்திஜீயின் மேல் தலைவருக்கு அதிக பக்தியுண்டு. என் மேல் அதிக அன்பு உண்டு.

அவ்வளவுதான், கட்டுரை பூர்த்தியாகிவிட்டது.

சரி, ஜெய்ஹிந்த்!

உங்கள் கையெழுத்துப் போட்டுவிடுங்கள்.

ரொம்ப சரி!

"ஒழுக்கத்தினால் மட்டும்தான் நாம் பொதுஜனங்களிடம் பலனை எதிர்பார்க்க முடியும், பொதுஜனங்கள் விவாதம் செய்ய மாட்டார்கள். எப்படிப்பட்ட மனிதர்கள் தங்களிடம் வருகிறார்கள் என்பதையே அவர்கள் தெரிந்து கொள்ள விரும்புவார்கள். நம்பிக்கைக்குப் பாத்திரமுடையவர்களா யிருந்தால், அவர்களை நம்புவார்கள். நம்பிக்கைக்குப் பாத்திரமல்லாதவர்களாயிருப்பின் அவர்கள் சொல்லுவதைப் பொதுஜனங்கள் கேட்க மாட்டார்கள்" —காந்திஜீ

The Honourable KALA VENKATA RAO,

Minister for Revenue,

MADRAS.

Sri Kamaraj is an ideal patriot who has renounced all his worldly cares and anxieties for the cause of the freedom of India. As president of the Tamilnad Congress Committee he has shown admirable capacity and tact in guiding the destinies of the illustrious province of Tamilnad in storm stress and strain. I know him intimately both in jail and outside and my admiration for him grows day by day. I always seek his advice over a number of public matters and will always get right guidance from him. I wish him long life and prosperity in the service of free India, in securing whose freedom he played a noble part.

★

கனம் காளா வெங்கட்ட ராவ்

சென்னையரசாங்க வருமான இலாகா அமைச்சர்



திரு: காமராஜ் இந்திய விடுதலைக்காக நலன்களையும் ஆசைகளையும் —லௌகிகக் கவலைகளையும் எண்ணங்களையும் — துறந்த ஒரு லட்சிய தேசாபிமானி. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக மாண்புமிக்க தமிழ்மாகாணத்தின் விதிப் போக்குகளை துன்பத்திலும் கஷ்டத்திலும் நெருக்கடியிலும் சரியாக வழிகாட்டி நடத்துவதில் போற்றத்தக்க ஆற்றலும், அறிவும் அவர் காட்டியிருக்கிறார் சிறையிலும், வெளியிலும் அவரை நான் நெருங்கி அறிவேன். எனக்கு அவர்மேலிருக்கும் பெருமையான அபிப்ராயம் நாளுக்கு நாள் வளர்கிறது.

அநேக பொதுக் காரியங்களைப்பற்றி அவருடைய புத்தி மதியை நான் எப்பொழுதும் தேடுவதுண்டு. அவரிட மிருந்து எப்பொழுதும் சரியான வழிகாட்டலைப் பெறுவதுமுண்டு. இந்தியா விடுதலை அடைய அவர் உன்னதச் சேவை செய்திருக்கிறார். சுதந்திர இந்தியாவின் பணியில் அவருக்கு நீண்ட ஆயுளும் நிறைந்த வெற்றியும் கிடைக்க விரும்புகிறேன்.

தேசம் சுதந்திரம் அடைந்துவிட்டது. ஆனால், கிராம மக்களுக்கு இதுவரை கொஞ்ச நன்மையும் ஏற்படவில்லை. பெரும்பான்மை மக்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் இல்லை. இந் நிலைமையை மாற்றியாக வேண்டும். அப்பொழுதுதான் நம் சுதந்திரத்திற்குக் கௌரவமேற்படும். பணத்திற் குள்ள மதிப்பு அடியோடு போய், உழைப்பிற்கு மதிப்பேற்பட வேண்டும்.

—காமராஜ்

புலவர்—உயர்திரு

இ. பச்சையப்பா இளையபெருமாள்

ஆசிரியர் ''சன்மார்க்க சபதம்'' மதுரை



தமிழ் நாட்டின் தவப்புதல்வன்
தலைவர் காமராஜ்!

ஒழுக்கத்தா லுயர்குணத்தால் உண்மைபிற ழாதநிலை
உள்ள, மேலாம்
பழக்கத்தா லுயர்வெண்ணிப் பணந்தேடும் நினைப்பில்லாப்
பான்மை தாங்கும்

விழுப்பத்தா லுழைப்போன்றே விரும்பிநடு நிலையேழர்ந்து
விளம்புஞ் சோல்லின்
அழுத்தத்தா லுயர்தலைவன் ஆனதுவு மதிசயமோ?
அணியா மன்றோ?

கருமமதே நினைப்புடையோன்! காமராஜ் எனும்பெயரோன்!
காந்தி கூறும்
தருமமேல் லாமுணர்வோன்! தவறும லோழுக்கமோடு
தானும் வாழ்வோன்!
விருதுநக ரளித்தாலேன்? மிகப்பலர்க்கும் உரியோனாய்
விளங்குஞ் சான்றோன்!
பரம்போருளி னருள்பெற்றோன்! பாரேங்கும் புகழோங்கிப்
பரவிற் றம்மா!

விடுதலைப்போர் நிகழுங்கால் விலகாம லுறுதியோடு
வீரங் காட்டி
திடமனமுந் தேளிமதியுஞ் சிறந்துளதைப் பலமுறையுந்
திறந்து காட்டி
அடங்காதோர்க் கறிவுறுத்தி அனைவோர்க்கும் பேதமிலா
அன்பு காட்டி
படைகோண்டான்! முடிகோண்டான்! பணியாற்றும்
[திறங்கோண்டான்!
பணிவோம் யாமே!

—※—

தென்னாட்டிற் காந்திசொலை சிரமேற்றுப்
பணியாற்றும் தீரன் வாழ்க!

தொண்டாற்றி பலருக்குந் துணைபுரியுங்
காமராஜ் தோழன் வாழ்க!!

திரு எஸ். நதானியல்

(தலைவர், திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி)

நாகர்கோவில்

இந்தியாவில் தென் கோடியில் பாரத அன்னையின் பாத கமலங்களாக அமைந்து தமிழ் வளர்த்தபொதிகையையும், கன்னிக் குமரியையும், தன்னகத்தே கொண்டு தழைத்தோங்குந் தமிழ் நாடு. உலகிற்கு அறம், பொருள், இன்பம் ஈதெனவகுத்தளித்த **வள்ளுவனைப்** பெற்று வான்புகழ் கொண்ட தமிழ் நாடு. ஆங்கிலேயரின் ஆட்சியின் போது இன்னலுற்ற மக்களுக்கு தேசியக்கனலையூட்டி திக்கெட்டுந் தமிழ் முழக்கஞ் செய்த **பாரதீ** பிறந்த பைந்தமிழ் நாடு. செங்கோலோச்சுங் கையால் செக்கிழுத்த தியாகி **வ. உ. சி.** வாழ்ந்த வரலாறு கொண்ட வள நாடு. 'கொலைப்பட்டாலும் கொடியை விடேன்' என்று உயிரை விட்ட **குமரன்** பிறந்த தியாக நாடு நந் தமிழ் நாடு. இத்தகைய

சிறப்புப் பெற்ற பாரத நாட்டின் திலகமெனத் திகழும் தமிழ் நாட்டின் தலை ஊழியனாய் மக்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் இடையறாது கொண்டு சேவை செய்யும் பாக்கியம் பெற்றவர் தலைவர் காமராஜ் ஆகும்.

நான் தலைவரை முதன்முதல் சந்தித்தது ஜனவரி 1946ல் சென்னை நாடார் மான்ஷன் 6வது அறையில். திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைமை ஊழியன் என்ற முறையில் எனது உடன் ஊழியர்களான ஆர்.கெ. ராம், பி. எஸ். மணி, சி. குழந்தைசாமி, ஸ்ரீ. வி. தாஸ் முதலியவர்களுடன் திருவிதாங்கூர் தமிழ் நாடு சம்பந்தமாக தலைவரிடத்தில் விளக்கிச் சொல்லவே சென்றிருந்தேன். கையில் பிரஷுடன் பல்துலக்கிக்கொண்டிருக்கும் சமயம் கதவைத் திறந்தார்கள். இருகைகூப்பி இன்முகங் காட்டி இருக்கையளித்தார்கள். "உங்களுக்குத் திருவிதாங்கூரா?" ஆம் எனத் தலையசைத்தோம். "சந்தோஷம்! உங்கள் ஊரிலிருந்து 'வரவேண்டும், வரவேண்டும்' என்று நிறைய கடிதங்களும் தந்திகளும் குவிந்து கொண்டே இருக்கின்றன. மன்னிக்க வேண்டும், ஜோலி நெருக்கடி. கூடியமட்டிலும் விரைவில் வரப்பார்க்கிறேன். ஆமாம், உங்களுக்குத் தமிழ் எழுத வாசிக்கத் தெரியுமா?" என்று ஒரு கேள்வியைப் போட்டார். எனக்குச் சிரிப்பு வந்தது. குதூகலமாகவிருந்த என் நண்பர்கள் கல்லாய்ச் சமைந்தார்கள். 'தினசரி' உதவி ஆசிரியர் நாகர்கோவில் குழந்தைசாமி, விழித்துப் பார்த்தார் ஆச்சரியத்துடன். திருவிதாங்கூர் முழுவதுமே மலையாள நாடென்றும், அங்கு வாழ்கிறவர்களெல்லோரும் மலையாளிகளென்றும், சமஸ்தானக் காங்கிரஸ் வாதிகள் எங்களுடன் தொடர்பின்றி யிருக்கும் தமிழ் நாட்டுத் தலைவர்களிடத்தில் சொல்லி

யிருக்கின்றனர். திருவிதாங்கூரில் தமிழர்களுமிருக்கின்றனர் என்று பிரஸ்தாபித்தால் அங்குள்ள தமிழர்கள் எப்படி இருக்கிறார்கள் என்ற கேள்வி வரும். அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லித்தீரவேண்டிய நிர்ப்பந்தமு மேற்பட்டிருக்குமல்லவா? ஆகையால்தான் என்னை அறியாமலே எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

தொல்காப்பியத்திற்குப் பொருள் கண்ட அதங்கோட்டு (திருவிதாங்கோடு) பேராசான், சிலம்பிசைத்த செல்வன் இளங்கோவடிகள், தமிழ் மலர் மாலை தமிழ்த் தாய்க்களித்த 'கவிமணி' தேசிகன், சதாவதானி சேகுத் தம்பிப் பாவலர், கலைவாணன் N. S. கிருஷ்ணன், நாடகக் கலைமணிகள் T. K. S. சகோதரர்கள் பிறந்ததும் வளர்ந்து வருவதும் திருவிதாங்கூர்த் தமிழகம். "கொடுமலையாளக் குடியிருப்புடையேன் என்று அங்கலாய்த்த போதும், 'தாயின் சிறுவிரலணியாக' மகிழ்ந்தளித்து இங்குமோர் தமிழகமிருக்கின்றது" என்று உலகறியச் செய்த சுந்தரனார் வாழ்ந்தது திருவிதாங்கூர்த் தமிழகம். இங்கு,

"பரவு பாடையும் விரவு ஆசாரமும்
(தமிழ் நாடென்று கூற)
வேறொரு சாக்கியம் வேண்டா" என்று

தாயகத் தமிழர்களைக் கூவியழைத்தார் அதே சுந்தரனார். விதியின் பயனால், வெள்ளையரின் சூழ்ச்சியால், தாயகத்தின் "யாதும் ஊரே" என்ற பரந்த கொள்கையால் தாயகத்தினின்று துண்டிக்கப்பட்டு, தாயைப்பிரிந்த சேய்போல் மலையாள மாற்றாந்தாயிடம் ஒப்புவிக்கப்பட்டு, சிறைப்பட்ட சிறகரைப்போன்று சிக்கிக் கிடக்கின்றோம் திருவிதாங்கூர்த் தமிழர் நாங்கள். தாயகத்துடன் இணைந்து வாழ்வதைத் தடுக்க ஆரல்வாய் மொழியில் ஒரு கோட்டை வாசல்.

கடந்து போக வேண்டுமென்றால் கட்டுக் காவலும். கள்வர்களைப் போல், கொள்ளைக் கூட்டத்தாரைப் போல், கொலை பாதகர்களைப் போல் நடத்தப்படுகின்றோம். இருபது சதமானமாக வாழ்ந்த நாங்கள் இன்று பதினான்கு சதமானமாக தேய்ந்து மெலிகின்றோம். பாடசாலைகள் மலையாள மயம்; கோர்ட் கச்சேரிகள் மலையாள மயம். அரசாங்கம் அத்தனையும் மலையாள ஆதிக்கம். தமிழ்ப் பேசும் இடமில்லை. இந் நிலையில் இன்னும் சில வருடம் தாயகம் தலையிடாதிருந்தால் தமிழேயிராது. தமிழனே அழிந்துவிடுவான். உங்களுடன் இணைந்து வாழ விழைகின்றோம் வருங்கால வாழ்விற்காக. பிரிக்கப்பட்ட சேய் தாயைக் கண்டு உரிமை கேட்கின்றது. தடையின்றி உறுதியளியுங்கள் என்றோம்.

தலைவர் தலையசைத்து, "நீங்கள் சமஸ்தான மக்கள் மட்டுமல்ல, இன்றுள்ள காங்கிரஸ் கமிட்டிகள் அமைப்பில் நீங்கள் கேரள மாகாணக் காங்கிரஸ் கமிட்டியில்தான் சேரவேண்டி வரும். சட்டத்தை மாற்றினாலன்றி வேறு வழியில்லை" என்றார்கள்.

சட்டத்திற்காக மனிதனா? மனிதனுக்காக சட்டமா? மொழியடிப்படையில் மாகாணங்கள் பிரிக்கப்படும் பொழுது தமிழ் நிலங்களை வாரிவாரி வழங்கப்போகின்றீர்களா? அன்றி அவ்விடங்களை ஒன்றுபடுத்தப் போகின்றீர்களா? கேரளமாகாண அமைப்பில் எங்கள்நிலத்தையும் சேர்த்தெடுக்க கேரளர்கள் கங்கணம் கட்டியிருக்கிறார்கள். என்ன சொல்கின்றீர்கள் என்று இரைந்து கேட்டேன்.

தலைவர் அசையவில்லை. நிதானமாக சாந்தத்துடன் தாழ்ந்த குரலில், "மொழியடிப்படையில் மாகாணங்கள்

அமைக்கப்படும் பொழுது நிச்சயமாக நீங்களெல்லோரும் எங்களுடன் தான் இணைக்கப்படுவீர்கள். நாங்களும் முட்டாள்களல்ல, ஒருவருக்கொருநியதி இன்னொருவருக்கு மற்றொருநியதி என்று காங்கிரஸ் ஒருநாளும் சொல்லாது. ஆனால், இப்பொழுதே அதற்குக் கிளர்ச்சி தேவையா? உடனடிப் பிரச்சனைகள் உங்கள் சமஸ்தானத்தில் பல இருக்கின்றனவே'' என்று ஒரு கேள்வியைக் கேட்டார்கள்.

நீங்கள் கூறுவது முற்றிலும் உண்மையே. ஆனால் பொதுவிரோதியை எதிர்க்கும்போது நம்முடன் உள்ளவன் நமது சொத்தைக் கரந்து கொள்ளத் திட்டமிட்டுச் செயலாற்றினால் நமது சொத்தைப் பாதுகாக்க நாம் கடமைப்பட்டவர்களல்லவா? தண்ணீரைக் குடித்துக்கொண்டு சோற்றைக் கொடுத்த கொள்கையால் வெள்ளையன் நம்மை அடிமை கொண்டான். மலையாளிகள் ''கேரள மாகாணம் காசர்கோடு முதல் கன்னியாகுமரி வரை—இது மலையாளிகளுடைய தனிச் சொத்து. பரசுராமன் மழுவழி தோன்றினது—தமிழர்கள் தோட்டக் கூலிகள்—கிருஷிக்காக குடியேறிவந்த வந்தொட்டிகள்—இவர்களுக்கு நாட்டின் உரிமை கிடையாது—கன்னியாகுமரி வரை கேரள மாகாணத்தை அமைத்தே தீருவோம்'' என்று அகில மலையாளி மகாநாடுகளில் திட்டமிட்டுத் தீர்மானித்திருக்கின்றார்கள். வரும்போது வருமென்று வாளாவிருந்தால் எங்கள் கதி அதோ கதிதான் என்று சொன்னோம்.

''நீங்கள் கூறுவது நியாயந்தான். ஆனால் நான் அங்கு வந்து விஷயங்களை நேரில் தெரிந்து வேண்டுவன செய்ய முயற்சிக்கிறேன்'' என்று தலைவர் காமராஜ் பேச்சை முடித்தார்கள். நாங்களும் விடைபெற்று வீடு வந்தோம்.

தொடர்ந்து சென்னையில் நடந்த தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில், தமிழ்நாட்டை ஒட்டிக் கிடக்கும் திருவிதாங்கூர்த் தமிழ்ப் பிரதேசங்களை காங்கிரஸ் காரியத்திற்குத் தமிழ் நாட்டுடன் அங்கமாய்ச் சேர்க்க அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அனுமதி அளிக்கவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

தலைவரின் திருவிதாங்கூர்த் தமிழ் நாடு விஜயம்

திருவிதாங்கூரில் பொறுப்பாட்சிப் பிரகடனம் 1947 செப்டம்பர் 4ல் வெளிவந்தது. அதைத்தொடர்ந்து வயதுவந்தோர் வோட்டுரிமையுடன் திருவிதாங்கூர் அரசியல் அமைப்பை மாற்றி அமைக்க தேர்தலும் நெருங்கியது. எங்கள் இறுதி லட்சியம் ஒன்றுபட்ட யூனியன் தமிழகம் எனத் தேர்தல் பிரகடனம் விடுத்தோம் சீறி எழுந்தது மலையாள ஆதிக்கம். அரசாங்கம் கைலாகுகொடுத்தது. தமிழ்நாடெங்கணும் ஆயுதந்தாங்கிய ரெஸர்வ்போலீஸார் அனுப்பப்பட்டனர் எங்கும் லாத்தி அடிகள். கள்ளக்கேசுகள். தமிழ்நாடு காங்கிரஸ் ஊழியர்கள் அனந்தம் சிறையறைகளினுள் தள்ளப்பட்டனர். செருப்பால் உதைக்கப்பட்டனர். மூலைதோறும் தெருக்கள்தோறும் பட்டாளப் பவனி. மட்டுமீறின அடக்குமுறை, குடி அழிக்கும் கோரத்தாண்டவம் எல்லைமீறிச் சென்றது. தமிழ்மக்கள் ஒன்றியே மாளவேண்டும், இல்லையென்றால் மீளவேண்டும் என்ற நிலையை அடைந்தோம். விடுத்தோம் வேண்டுகோள் தலைவருக்கு; "உடனே வரவும், தமிழரின் உயிர்களுக்கும் சொத்து சுதந்திரங்களுக்கும் பேராபத்து" என்று. விரைந்தோடி

வந்தார்கள் திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் அம்மையாருடன். கண்கொண்டு கண்டார்கள் காரியங்களை. கிராமம் கிராமமாகச் சென்று விசாரணை செய்தார்கள். எங்கும் ஏகோபித்த வரவேற்பு. திருவிதாங்கூர் தமிழ் மக்கள் அத்தனைபேரும் தலைவரை தெரிசித்து சென்றார்கள். சங்கடங்களை சாங்கோபாங்கமாக எடுத்துச்சொன்னார்கள். தமிழ் நாட்டு மக்களின் ஒன்றுபட்ட கோரிக்கையை அவர்களின் ஏக அரசியல் ஸ்தாபனமான திருவிதாங்கூர்த் தமிழ் நாடு காங்கிரஸின் சக்தியைக் கண்டு சென்னைக்கு விடைபெற்றுச் செல்லும்போது:—

"பிரிட்டிஸ் இந்தியாவில் தற்சமயம் இருப்பதுபோல் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸை திருவிதாங்கூரில் தமிழ்ப் பிரதேசத்தின் தேசீய ஸ்தாபனம் என்ற நிலையிலும், தமிழ் மாகாணக் காங்கிரஸ் என்ற நிலையிலும், சமஸ்தானக் காங்கிரஸ் ஒப்புக்கொண்டு சமரசத்திற்கு வழிப்படவேண்டும். தமிழ்ப்பிரதேசத்தில் ஜனப்பிரதிநிதிகளின் எண்ணம் எவ்வளவு என்று திட்டப்படுத்தி அவர்களைத் தெரிந்தெடுக்கும் பூரண அதிகாரம் தமிழ்நாட்டுக்கு விட்டுக்கொடுக்கவேண்டும். தமிழ்ப்பிரதேசம் ஓர் ரெவின்யூடிவிஷன் அல்லது சாதாரண ஜில்லா போர்டுகளை விட அதிகாரமுள்ள ஓர் சுயாட்சிப் பிரதேசமாக அமைத்து, சுயநிர்ணய அவகாசத்திலும், அதிகாரத்திலும் வளர்ந்துவர ஒழுங்குசெய்யவேண்டும்.

தமிழர்களுடைய கல்வி, பாஷை, கலை இவைகளைப் பாதுகாப்பதற்கும் வசதிகள் செய்யவேண்டும். கூடியமட்டும் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழரான உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டும். என்று

இப்பேர்ப்பட்ட தமிழர்களின் பொதுவிஷயங்களைப்பற்றி நான் சமஸ்தான காங்கிரஸ் தலைவரிடம் பேச்சுவார்த்தை நடத்தினேன். பேச்சுவார்த்தைகள் பரிபூரணமாக முடிவடையவில்லை. இவைகளைப்பற்றி இன்னும் தொடர்ந்துபேச தி. ச. காங்கிரஸ் தலைவர், திரு பட்டம் தாணுபிள்ளையும், தி. த. நா. காங்கிரஸ் தலைவர் திரு: நதானியலும் இம்மாதம் 20-ம் தேதிக்குப்பின் ஒரு தேதியில் சென்னைக்கு அழைத்து ஒருசமரச முடிவுக்கு வர முயலுவேன்” என்று கூறினார்கள்.

திரு பட்டம் தாணுபிள்ளை அவர்கள் குறிப்பிட்ட தேதியில் சென்னைக்குச் செல்லாது ஒதுங்கினார்கள். தேர்தல் அதி தீவிரமாக நடந்தேறியது. இரத்தப் பாதையினூடே, லாத்திப் பிரயோகங்களையும், பட்டாளத்தின் அட்டகாசங்களையும் கடந்து தமிழ் நாட்டு மக்கள் வாழ்வோம் அல்லது வீழ்வோம் என ஏகோபித்து ஓட்டளித்தார்கள். தமிழகம் வெற்றிமுரசு முழக்கியது.

தமிழ் நாட்டில் பல அரும் பெரும் தலைவர்கள் தோன்றியிருக்கிறார்கள். பல புதிய புதிய நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார்கள். ஆனால் தலைவர் காமராஜ் நாடார் அவர்களின் தலைமைப் பதவியின்போது நடந்த விசேட நிகழ்ச்சிகளை வேறெந்தத் தலைவனும் காண முடியாது. பாரத நாடு விடுதலை பெற்றது. பாரதிக்கு மண்டபம் கண்டோம். தமிழன் புதுடில்லியில் தலைமைப் பீடங்கொண்டான். பூரண மதுவிலக்கு அமுலுக்கு வந்தது. புதுக்கோட்டை புதுவாழ்வு பெற்றது. இன்னோரன்ன பலப்பல. இத்தகைய நிகழ்ச்சிகளையும் தலைமைப்பீடத்திலிருந்து கண்டு மகிழ தலைவர் காமராஜ்

அவர்களுக்குக் கிடைத்த பாக்கியத்தைப்பற்றி யாரும் பொறுமை கொள்ளாமலிருக்க முடியாது. இளமையிலே குடும்பத்தைவிட்டு இல்லற வாழ்க்கை இன்பங்களைத் துறந்து தேசிய விடுதலைப் போராட்டத்திலிறங்கி அடிபட்டுச் சிறைப்பட்டுத் தன்னலமின்றி பிறநலம் பேணும் பெருந்தகையாகிய தலைவர் காமராஜ், அவருடன் உழைக்கும் தியாகிகளுக்கு மகுடமாக விளங்குகிறார். சாதாரண ஊழியனாகத் தன் வாழ்க்கையை ஆரம்பித்து இந்தியாவிலுள்ள சிறந்த தலைவர்களில் ஒரு தனிப்பெரும் ஊழியர் தலைவனாய் விளங்கும் தலைவர் காமராஜ் தமிழ் நாட்டின் பொக்கிஷம். நமது நாட்டின் மலைவிளக்கு.

நாட்டின் சேவைக்குப் பட்டமல்ல, பணமல்ல, உள்ளத்தில் உறுதியும், கொள்கையில் ஊக்கமும்தான் என்று ஒரு தடவையல்ல பல தடவைகளில் துணிச்சலுடன் நிரூபித்துக் காட்டிய பெருமை தலைவர் காமராஜ் அவர்களையும் அவர்களின் நெருங்கிய உடன் ஊழியர்களையும் சாரும். "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்று அஞ்சாது அசையாது ஆணித்தரமாக அறைந்து சொல்லும் நக்கீரன் திண்மை பெற்ற மனமும் செயல் திறனும் படைத்தவர் தலைவர் காமராஜ். அரசியல் கொள்கைகளிலோ முறைகளிலோ ஊழியர்களுக்குள் வேற்றுமை ஏற்படினும் தனிப்பட்ட முறையில் விரோதமோ குரோதமோ காண்பிக்காத விசால மனம் படைத்தவர்.

மகாத்மா காந்தி அடிகளுக்குப் பின் திரு. சத்தியமூர்த்தி அவர்களைத் தனது அரசியல் குருவாகக் கொண்டவர் திரு. காமராஜ். அத்தலைவனுக்கு ஒரு நினைவுச் சின்னம் சென்னையிலே எழுப்ப முயற்சி செய்துவருகின்

றார்கள். அது வெற்றி பெறுமாக. அதைத் தொடர்ந்து நமது ராஜாஜியின் கனவை நனவாக்கும் பொறுப்பும் தலைவரைச் சார்ந்தது; வ. உ. சி. கப்பல் கட்டி தமிழ்க் கடலில் தமிழ்க் கொடி தாங்கித் தலைநிமிர்ந்து செல்லும் ஆனந்தக் காட்சியைத் தமிழ் நாட்டு மக்களுக்கு அளிப்பார்களாக.

"சென்னை மனதே" என்று ஆர்பாட்டங்கள் செய்த ஆந்திரர்களுக்கும், திருவிதாங்கூர்த் தமிழ் நாடு எங்களுக்குச் சொந்தம் என்று கொட்டி முழக்கிக் கும்மாளமிடும் கேரள மாகாணக் கும்பல்களுக்கும் சரியான சவுக்கடி கொடுத்திருக்கின்றார். பாஷாவாரிக் கமிஷன் முன்பு 'கன்னிக் குமரியைக் கட்டி மீட்போம்' என்று கர்ஜித்திருக்கின்றார் தலைவர் காமராஜ்.

நமது பாரதி,

"நீலத்திரை கடலோரத்திலே நின்று
நித்தம் தவஞ்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு"

என்று கோடிட்டு எல்லை வகுத்துத் தந்த தமிழ்நாட்டைத் தலைவர் காமராஜ் அவர்கள் கட்டி அமைப்பதைத் தன் தலைக் கடமையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் அவர்களுக்கு என்றும் பாரத நாட்டில் சேவை செய்து மக்களின் சம சுக வாழ்விற்காக ஓயாது உழைக்க உடல் நலமும், உள வலியும், பல்லாண்டும் இறைவன் அளிப்பாராக.

அன்னிய ஆட்சியில் அடிமைகளாய், கூலிகளாய், குடியேறினவர்களாய் அவமதிக்கப்பட்டு, அல்லற்பட்டு, அவதியுற்று, அபலைகள்போல் தாயகத்தின் தாய் மனத்தை நாடி ஓயாதுழைக்கும் திருவிதாங்கூர்த் தமிழ் நாட்டின் மக்கள் சார்பாக தலைவர் காமராஜுக்கு எனது இதயமார்ந்த ஆசி.

வாழ்க தமிழகம்! வாழ்க இந்தியா!!

வாழ்க வாழ்கவே!!!

உணவு, உடை முதலியனதான் இன்றைய முக்கிய பிரச்சனைகள். வியாபாரிகள் கொள்ளை லாபமடிக்காமலிருக்க கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சாமான்களை விநியோகித்தால் அங்கும் ஊழல்கள் காணப்படுகிறது. பொதுஜனங்கள் சர்க்காருடன் ஒத்துழைத்தால் இம்மாதிரியான ஊழல்களையெல்லாம் ஒழித்துவிடலாம்.

— காமராஜ்

திருமதி. லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி
கோட்டயம்

ஸ்ரீ காமராஜ் அவர்களைப்பற்றி எழுத நான் ஏற்றவளல்ல. முதற் காரணம் அறியாமை; இரண்டாவது யாரும் தமக்கு நெருங்கினவர் ஒருவரைப்பற்றி எழுத சங்கோசப்படுவது சகஜமே. குடும்ப சிநேகிதர் என்ற முறையில் அவரை அறிவேனே தவிர—ஒரு அரசியல்வாதி என்ற நோக்குடனே நான் அவரைக் கவனித்ததில்லை. என் தந்தையாருக்கும் அவருக்கும் இடையே இருந்த உறவு முறையை விவரிக்க சிநேகம் என்ற பதம் போதாது. தந்தையார் தமிழ் நாட்டுக் காங்கிரசின் தலைவராக இருந்தபொழுது அவருக்குப் பக்கபலமாக விளங்கியிருக்கிறார். தானே தலைவரான பொழுதும், தகப்பனாரின் உதவியைக் கோரி பன்முறை வற்புறுத்தினதினால், தந்தை காமராஜிடம் இருக்கும் சிநேகம் காரணமாகவும், மக்களுக்கு எந்த முறையிலாவது பணி செய்ய வேண்டும் என்ற நற்கொள்கைக்காகவுமே சிறிது காலம் காரியதரிசி பதவியையும் வகித்தார்.

அன்று மௌனமாக தன் தலைவரின் வழிபற்ப பின் சென்றதால், இன்று காமராஜ் தென்னாட்டு அரசியலின் ஒரு மேதையாகத் திகழ்கிறார். சுருங்கக் கூறின் தமிழ் நாட்டு அரங்கின் சூத்ரதாரி என்றே அவரைச் சொல்லலாம். எளிய ஊழியனும் சேவையினாலும்,

தியாகத்தினாலும் தலைவனாகலாம் என்பதற்குத் தலைவர் காமராஜ் ஒரு சான்று. இப் பெருமை ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட காங்கிரஸ் மகாசபையைச் சாரும்.

இன்று சிலர் அவர் பிராமணத் துவேஷி என்று கருதுகிறார்கள். "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு" என்பதைக் காமராஜ் நன்கறிவார். பிராமணரான என் தந்தை சத்தியமூர்த்தியுடன் மனம் ஒன்றி உழைத்த அவர், ஒருநாளும் பிராமணத் துவேஷியாக இருக்க முடியாது. இத் தப்பெண்ணத்தைக் கூடிய சீக்கிரம் அவர் தம் கொள்கையால் மாற்றும் காலம் வருமென எதிர்பார்க்கிறேன்.

ஜாதி, பிறப்பு என்ற வேற்றுமைகள் பொது வாழ்விலிருந்து நீங்கினாலன்றி இந்த நாட்டுக்கு விமோசனம் கிடையாது.

—சத்தியமூர்த்தி

* * * *

நாட்டில் வகுப்புத் துவேஷம் மதத் துவேஷம் அறவே ஒழிய வேண்டும். அது தான் நம் மகாத்மாவின் உயிரைப் பலி வாங்கியது.

—காமராஜ்

திரு. சி. இலக்குவனார் எம். ஓ. எல்.

ஆசிரியர் "இலக்கியம்" விருதை

தலைவர் காமராசர்

நண்பர் நா. சதானந்தம் அவர்கள் "தலைவர் காமராஜ்" என்ற பெயரால் ஒரு புத்தகம் வெளியிடப் போவதாகவும், அப்புத்தகத்தில் திருவாளர் காமராசர் அவர்களைப் பற்றிய பலர் கருத்துரைகளும் இடம்பெறும் என்றும் அறிவித்து "நீங்களும் தலைவர் காமராசு அவர்களைப்பற்றி உங்கள் கருத்துரையை எழுதித்தரவேண்டும்" என்று வேண்டினர். இன்று அரசியல் அரங்கில் அமைச்சர் புடைசூழ உலவி வருகின்றவர்கள் காமராசு அவர்கள். நாட்டை ஆளும் கட்சியின் கோட்டைக்குரியராய் வீற்றிருக்கும் மேன்மையுற்றவர்கள். அவர்கள் கடைக்கணிப்பை நாடிக் காத்திருப்போர் பலர். சுட்டு விரல் அசையின் சூழ்ந்து நிற்போர் எண்ணிலர். முடி தாங்கும் அரச செல்வம்

உடையோரும் அவர்கள் கடைவாயிற்படியில் காத்திருக்கும் காலம். காமராசர் அவர்கள் நிலை எங்கே? எனது நிலை எங்கே? நான் அவர்களைப்பற்றி என்ன எழுத முடியும்? என்று கருதி என் முடியாமையை அறிவித்தேன். நண்பர் சதானந்தம் முயற்சி மிக்கவர். திரு. காமராசர் அவர்களைப்பற்றி எழுதும் தகுதி எனக்கு இலை எனப் பன்முறை இயம்பியும் என்னை விட்டாரிலர். தவறாது எழுதித்தான் ஆகவேண்டுமென ஆணையிட்டுவிட்டார். அன்பர் ஆணையை ஆண்டவனாலும் மறுக்க முடியாது என்றால் நான் எங்கே மறுப்பது?

நான் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவன்; ஆயினும் அரசியல் நிகழ்ச்சிகளை அறிவதில் ஆர்வம் உள்ளவன்; ஆகவே திரு. காமராசு அவர்கள் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து செய்தித் தாள்களில் வெளிவரும் செய்திகள் வாயிலாக அவர்களைப்பற்றி ஒருவாறு அறிவேன். ஒரே ஒருமுறை நேரில் கண்டு உரையாடியதும் உண்டு. இரண்டாண்டு கட்கு முன்பு பாளையங்கோட்டைக்கு வந்திருந்தனர். அவ்வமயம் திருநெல்வேலித் தமிழாசிரியர் சங்கத் தலைவர் என்ற முறையில் நானும் சங்க அமைச்சரும் தமிழாசிரியர் குறைகளை எடுத்துக் கூறி தமிழாசிரியர் நிலையை உயர்த்த வேண்டும் என்று வேண்டுவதற்குச் சென்று காத்திருந் தோம். கண்டோம்; கூறினோம். "எல்லாவற்றையும் எழுதி அனுப்புங்கள்; ஆவன செய்கின்றேன்" என்று அமைதியாக மொழிந்தார். திரும்பிவிட்டோம். விருதுநகர்க்கு வந்து ஓராண்டுக்கு மேலாகியும் அவர்க ளுடன் பழகும் வாய்ப்பிலை. நானோ அரசியலில் ஈடுபட உரிமையற்றவன். அவர்களோ இலக்கியத் துறையில்

இன்பம் நுகர நேரம் அற்றவர்கள். எம்மிடையே சந்திப்பு நிகழ்வதற்கு இடமில்லையன்றோ? ஆயினும் என்? அவர்கள் குன்றின் மேலிட்ட விளக்குப் போன்றவர்கள். குடிசையிலிருக்கும்நான் அறியாமலிருக்க முடியாதன்றோ?

தமிழ்நாடு, வரலாற்றுப் புகழ் பெற்றது; ஏனைய நாடுகள் அறியாமையிருளில் ஆழ்ந்திருந்த காலத்தில் அறிவொளி வீசும் அரும்பெரும் பெரியார்களை ஈன்றெடுத்தது; வள்ளுவர் போன்ற அறநெறித் தலைவர்களை, அரசியல் அறிஞர்களை உலகிற்கு அளித்தது. தெருவெல்லாம் தமிழ் முழக்கம் மிகுந்திருந்த காலத்தில் உழவுத் தொழில் புரியும் தமிழனும் உலகை ஆளும் தகுதி பெற்றிருந்தான். ஆனால், தமிழ்நாட்டில் வேற்று மொழிகளின் செல்வாக்கு ஏற்பட்டது. மூடநம்பிக்கைகளும் மக்களிடையே உயர்வு தாழ்வு கற்பிக்கும் கொள்கைகளும் செல்வாக்குப் பெற்றன. தமிழன் வாயிழந்தான்; மதிப்பிழந்தான். தமிழன் உழைப்பதற்கே உரியவன் என்ற கொள்கை நிலை நாட்டப்பட்டுவிட்டது. ஆதலின் தமிழ்நாட்டில் தலைவர்களாக வரவேண்டுமென்றால், உயர்ந்த சாதியில் பிறந்திருக்க வேண்டும்; அல்லது உயர்ந்த சாதிக் கொள்கைக்குட்பட்டவராய் வேற்று மொழிப் புலமைப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்; அல்லது பெருஞ் செல்வராய் இருத்தல் வேண்டும்.

உண்மைத் தமிழன் எவனுவது ஒருவனுக்கு இவ்வாய்ப்புக்கள் இருக்குமேல் தமிழனுக்கியல்பாயுள்ள அடக்கம் வந்து குறுக்கே நிற்கும்; அல்லது தன்னலம் வந்து தடைப்படுத்தும். அதனுல்தான் பொதுநலத் துறையில் தலைமை தாங்கித் தொண்டாற்றும் தமிழர் பல

ராகத் தோன்றிலர்; தமிழன் கூலிவேலைக்கேயுரியவன் என்ற பழிச்சொல்லும் ஏற்பட்டுவிட்டது. திரு. காமராசர் அவர்கள் இனி இப் பழிச் சொல்லுக்கு இடமில்லாது செய்துவிட்டனர். திரு காமராசு அவர்கள் உயர்ந்த சாதியில் தோன்றியவரல்லர்; வேற்று மொழிப் புலமைப் பட்டங்களை ஏற்றுக்கொண்டுள்ளவரல்லர். முதன் முத லாகத் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டபோது, இவற்றைச் சுட்டாமல் சுட்டி ஒரு விகட இதழ், கிண்டல்செய்யாமல் செய்தது. திரு. சத்தியமூர்த்தி வீற்றிருந்த இடத்திலா காமராசர் என்றெல்லாம் ஒரு கூட்டத்தார் பேசினர். ஆயினும் பத்து ஆண்டுகளாகத் தமிழ்நாட்டின் தலைவராகப் புகழ் பெறத் தொண்டாற்றி வருகின்றார்கள் அனைத்து இந்தியத் தலைவர்கள் அனைவ ருடனும் ஒப்பிடத் தகும் ஆற்றல் உள்ளவர். அனைத்து இந்தியத் தலைவர்கள் சிலர் திரு. காமராசரின் பகைமைக்கு ஆளாகி தமிழ் நாட்டார் மதிப்பை இழந்ததை யாவரும் அறிவர். ஆதலின் பிறவியிலேயே எவரும் பெரியரும் அல்லர்; எவரும் சிறியருமல்லர்.

பெரியோ ரேன வியத்தலும் இலமே
சிறியோ ரேன இகழ்தல் அதனினும் இலமே

என்று இரண்டாயிரமாண்டுகட்கு முன் கணியன் பூங் குன்றன் என்ற தமிழ்ப் புலவர் கூறினர்.

பெரியோர் யார்? சிறியோர் யார்? வாய்ப்புக்களும் சூழ்நிலையும் ஒத்துவருமேல் எவரும் பெரியராகலாம். ஆனால் பெரியரான பிறகு பெருமைக் குணங்களின் தொடர்பை விட்டுவிடுதல் கூடாது. திரு. காமராசு அவர்களிடத்தில் பல பெருமைக் குணங்கள் மிளிர்கின்றன.

அவற்றன் தன்னலமற்ற தொண்டு தலைமை பெற்று விளங்குகின்றது. தலைவர் காமராசர் அவர்கள் உதவியால் பலர் பணப்பெட்டி நிறைகின்றது; தலைவர் வீட்டில் பணப்பெட்டியே இல்லை. தலைவர் அருள் நோக்கால் பலர் மாடமாளிகைகள் கட்டுகின்றனர்; தலைவர் வீடு என்றும் உள்ள நிலையில்தான் உள்ளது. இருட்டு வாணிபமும் திருட்டு உரிமையும் ஆட்சி செய்யும் இந்நாளில் தலைவர் அவர்கள் நினைத்திருந்தால் இன்று பல நூறாயிரத்திற்கு உரியவராக இருக்கலாம்; ஆனால் தலைவராக இருக்க முடியாது. இன்று தலைவர் காமராசர் தனக்கென வாழா பிறர்க்குரியாளராகத் தொண்டாற்றும் தகைமையை மாற்றுக் கட்சியாளரும் மதிக்கின்றனர். விரும்பும் ஒருவரை அமைச்சர் நாற்காலியில் அமர்த்தவும், வேண்டாத அமைச்சரை அமைச்சர் பதவியினின்றும் நீக்கவும் ஆற்றல் பெற்று விளங்குவது இத் தன்னலமற்ற தொண்டால்தான் என்பதை அறிதல் வேண்டும்.

"ஒன்னாரைத் தெறுதலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணில் தவத்தால் ஆகும்"

என்றார் வள்ளுவர் பெருமான். தலைவர் காமராசர் தவக் கோலத்தில்தான் இருக்கின்றார். தவக்கோலம் என்றவுடன் சடைமுடியும், காவியுடையும், கையில் கமண்டலமும் பூண்டுள்ளனரோ என எண்ணிவிட வேண்டாம். அவை "நெஞ்சில் துறவார்; துறந்தார் போல் வஞ்சித்து" வாழ்வரின் புறக்கோலங்கள். 'தவம்' என்பது தன்னலத்தை மற்றவர்கட்காகக் கெடுத்தல் என்னும் பொருளது.

தலைவர் காமராசு அவர்கள் நாட்டு வேட்கையில் நாட்டம் கொண்டு இன்னல் பல அடைந்து சுடச்சுடரும்

பொன்போல் இன்று விளங்குகின்றார். அவ்விதம் விளங்கும் பொன் மற்றவர்கட்கே பயன்படுவதுபோல் தலைவர் காமராசர் அவர்களும் மற்றவர்கட்கே பயன்பட்டு விடுதல் கூடாது. இதுவரை நாட்டுரிமைப் போரில் ஈடு பட்டதால் மொழியுரிமை, கலையுரிமை, அறிவுரிமைகளைப் பற்றிச் சிந்தியாது இருந்திருக்கலாம்.

நாட்டைவிட்டு ஆங்கிலேயனை ஓட்டிவிட்டோம். ஆயினும் தமிழன் பலவகையிலும் அடிமைத்தளை பூண் டுள்ளான். தமிழ்த்தாய் இன்னும் அடிமைத் தளையால் இறுக்குண்டு அலறிக்கொண்டிருப்பதை உளங்கொள்ளுதல் வேண்டும். மொழி அடிமை நீங்கினால்தான் முழுஉரிமை பெற்றவர்களாவோம். ஆங்கிலமறியாத மொலட்டோவும், சியாங்கேசேக்கும் உலகமறிந்தவர்கள் ஆனார்கள். ஆங்கில மறியாத காமராசரை வட இந்தியாவில் இன்னும் நன் கறியவில்லையாம். காரணம் என்ன? மொழி அடிமையால் தான். தமிழ் மொழி உரிமை பெற்றுத் தன்னாட்சி செய்யும் காலத்தில்தான் தலைவர்காமராசரை ஸ்டாலினும், ட்ரூமனும், அட்லியும் அறியும் காலம் வரும். தமிழன் பெருமையை உலகோர் அறிந்து புகழ்வர். ஆகவே தலைவர் காமராசர் அவர்கள் தமிழ் மொழித் தொண்டில் ஈடுபட்டுத் தமிழ்த்தாயின் விலங்குகளை உடைத்தெறிவார்களாக.

வாழ்க காமராசர்! வளர்க தமிழ் மொழி!!

> சுகத்திலும் துக்கத்திலும் மனம் கலங்காமல் அசையா நிலை அடைவதற்குத் தியாகம் அவசியம். —ராஜாஜி

திரு S. A. தேவநாயகஅய்யா M.L.A.
திருப்பாப்புலியூர்

ஸ்ரீ காமராஜ் என் மிகப் பழைய நண்பர். இராமநாதபுரம் ஜில்லாவைப் பற்றிய பிரஸ்தாபம் வரும்பொழுதெல்லாம் இவரைப் பற்றியும், நண்பர் K. S. முத்துசாமி அவர்களைப் பற்றியுமே பிரஸ்தாபிக்க நேரும். அந்தக் காலத்தில் ஒரு சாதாரண புருஷராகவே தோன்றினர். ஆரம்பகாலத்தில் தன் சுற்றத்தார் ஒருவர் நடத்திவந்த கடையின் பாக்கியை வசூலிப்பதற்கு எங்கள் ஜில்லாவிற்கு வருவார். அப்படி வரும்போதெல்லாம் என்னைக்காணுது போகமாட்டார்.

விருதுநகர் அந்தக்காலத்தில் சுயமரியாதைக்கட்சி அல்லது ஜஸ்டிஸ் கட்சியின் கோட்டையாக இருந்தது. சாதாரண பொதுக்கூட்டங்களை நடத்துவதுகூட மிகவும்

சிரமமான காரியம். ஒருசமயம் நானும் வேலூர் A. குப்புசாமி முதலியாரும் பொதுக்கூட்டத்தில் பேசினோம். ஜஸ்டிஸ் கட்சியின் கையாட்கள் கூட்டத்தில் கலவரத்தை யுண்டாக்கி, எங்கள் உயிருக்கு தீங்கும் விளைவிக்கத் துணிந்தனர். அவ்வமயம் எங்களை மிகுந்த சிரமத்திற்கிடையில் காப்பாற்றி அனுப்பவேண்டியிருந்தது.

இவருடைய பொறுமையையும், கூர்ந்த புத்தியையும் தமிழ்நாடு கூர்ந்து கவனித்து உணர்ந்தது. அதன் காரணமாகத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி பதவியையும் இவர் ஏற்க நேர்ந்தது. இவர் காரியதரிசியாக இருக்கும்போது O. P. இராமசுவாமி ரெட்டியார் அவர்கள் தலைவர். (தற்காலம் பிரதமராக இருப்பவர்) இவர் நற்சாட்சிப் பத்திரம் பெறுவது மிகவும் கடினம். யாரிடத்திலும் நம்பிக்கை கிடையாது. தொட்டதிலெல்லாம் சந்தேகம். சந்தேகமேற்பட்டால் சர்வநாசம். தயை தாட்சண்யம் அன்றும் இன்றும் இவர் அகராதியில் கிடையாது. இத்தகைய ஒருவர் நம்பிக்கைக்குப் பாத்திரராக இருந்தார் நம் நண்பர் நாடார்! என்பதிலிருந்தே இவர் உயர்வை நாம் ஒருவாறு ஊகிக்கலாம்.

ஸ்ரீ முத்துசாமியும், நாடாரும் இரட்டைப் பிறவியர்கள். ஒருவரை ஒருவர் பிரிந்ததே கிடையாது. 1930ம் வருட போராட்டத்தில் இருவரும் சிறைப்பட்டனர். இருவருமாக அலிபுரம் சிறையில் இருந்தார்கள். இவர்களில் நாடாருக்கு B வகுப்புக் கிடைத்தது. அதன் பயனாக வேலூருக்கு மாற்றப்பட்டார். நண்பர்கள் பிரிந்த காட்சி இளந் தம்பதிகள் பிரிவை ஒத்திருந்தது. அருகிலிருந்த அனைவரையும் கலங்கச் செய்தது. இவ்வளவு

நட்புக் கொண்ட நண்பரையும், சமயம் வந்தபோது, குற்றம் கண்ட காலே தண்டிக்காது விடவில்லை. அவர் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் உடன்பட்டார். இதிலிருந்து தாட்சண்யமற்று நடக்கும் தன்மையைக் காணலாம்.

பிற்கு சிறிதுகாலம் உபதலைவராகவும், கடைசியாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சேவை செய்து வருகிறார். இவர் பொறுப்பேற்ற காலம் மிகவும் ஆபத்தானது. 1940, 41, 42 போராட்டங்கள் இவர் காலத்திலேயே ஏற்பட்டன. போராட்ட காலங்களில் மக்களை உற்சாகப்படுத்தி, கலவரங்கள் நேர்ந்துவிடாமல் சாந்தமாகப் பாதுகாப்பது சாமான்யமான விஷயமல்ல. கோபத்தைச் சிறிதும் காட்டிக்கொள்ளாமல் அமைதியோடு வேலை செய்ய ஊக்கித் தமிழ் நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றினார்.

முதன்முதலாக 1937ல் சட்ட சபைத் தேர்தல் நடந்தபோது, நண்பர் நாடார், சாத்தூர்த் தொகுதியின் பிரதிநிதியாக காங்கிரஸ் அபேட்சகராக நின்றார். போட்டியாக நின்றவர் தமிழ் நாட்டிலேயே ஜஸ்டிஸ் கட்சியின் தூண். அவரை எதிர்த்து வெற்றி பெறுவது சாமான்ய விஷயமல்ல. நண்பருக்குத் தோல்வி ஏற்பட்டுவிடுமோ வென்று அஞ்சியதுண்டு. ஆனால் காலஞ் சென்ற ஸ்ரீ S. சத்தியமூர்த்தி அவர்கள் மாத்திரம் "சந்தேகமின்றி ஜெயம் நம்முடையதே" என்று வற்புறுத்திக் கூறிவந்தார். மிகப் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தபோது, மக்கள் இவரிடம் கொண்ட அன்பையும், மதிப்பையும் வெளியிடுவதாக இருந்தது. தமிழ்நாட்டின்

தலைவராவதற்கு சிலர்தான் லாயக்குடையவர்கள் என்ற எண்ணம் பலருக்கிருந்தது. அவர்கள் நம்மவர் தலைவரானது கேட்டு மனம் புழுங்கி நகைத்தனர்.

பேசுவது வீண்; செயல்தான் வேண்டும் என்ற நோக்கத்தோடு வேலை செய்துவந்த கூட்டத்தில் நாடாரும் ஒருவர். ஆனால் சமயம் வந்தபோது பேசாமல் இருத்தல் பொருத்தமல்லவாதலால், படிப்படியாகப் பேச ஆரம்பித்தார். பேச்சில் உயிருமில்லை, விஷயமும் இல்லை என்று ஒரு காலத்தில் பலர் மதித்ததுண்டு. ஆனால் இன்றோ உலக அரசியல் அனைத்தையும் ஒன்றுபடுத்தி, பாமரரும் தெரிந்துகொள்ளும் தெள்ளிய மொழியில் நீண்ட நேரம் பேசத்தொடங்கிவிட்டார். நாடார் பேச்சு இன்று அனைவராலும் போற்றப்படுகிறது. இவர் தன் பேச்சால், பேச்சு, செயல் இரண்டிற்கும் பொருத்தமுடையவர் என்பதை தெள்ளத் தெளிவாக்கினார். இவர் போராட்ட அத்தியாயம் மிகச் சிறப்பு வாய்ந்தது. தமிழ் நாட்டின் சரித்திரத்தில் இடம் பெறத் தக்கது. அரசியல் போராட்டம் மாத்திரமல்ல, சகபாடிகளிடமும், தலைவர்களிடமும் செய்த போராட்டம்தான் குறிப்பிடத் தக்கது. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் போக்கு 1942 போராட்டத்திற்குப்பின் அடைந்த மாறுதலால் தமிழ்நாடும், தேசபக்தர்களும் மனம் புழுங்கச் செய்தது. 1944ம் வருட இறுதியில் அனைவரும் சிறையிலிருந்து வெளிப்பட்டதும், அரியலூரில் தமிழ்நாடு தேசபக்தர்கள் கூடி யோசித்தனர். பின்னர் ஸ்ரீ நாடாரும் வெளிவந்தார். அரியலூர் மகாநாடு ஒரு புதிய சகாப்தத்தை உண்டாக்கியது. இதன் முடிவு திருப்பரங்குன்றம் மகாநாடுவரை சென்றது.

ஸ்ரீ ராஜாஜி தமிழ்நாடு பெற்ற செல்வம் என்பதில் ஆட்சேபனை கிடையாது. ஆனால் அவர் இமயம் போன்ற குற்றம் ஒன்றைச் செய்தார் என்பதை மறுக்க முடியாது. தமிழ்நாட்டின் தலைமைப் பதவிக்கு யாரையும் தயாரிக்காது விட்டு, தன்னையும் தன்னைப்போன்றாரையுமே நம்பி வாழ வைத்தார். இதைத் தமிழ்நாட்டு இளைஞர்கள் சகிக்க வில்லை. இதன் விளைவே இந்தப்போர். விவாதம் உச்ச நிலையை அடைந்தபோது, தமிழ்நாட்டின் சில பத்திரிகை கள் அளவு கடந்து தூற்றஆரம்பித்தன. "பெரிய உடல் சிறிய தலை" "பெரிய பதவி-சிறிய புத்தி" என்றெல்லாம் தூற்றியது. சகாக்கள் கோபமடைந்தபோது பொறு மையை இழக்காமல் இருக்க வேண்டுமென வற்புறுத்தி வந்தார்.

1941ம் வருடம் நாடாரும் மற்றும் பலரும் தனிப் பட்ட சத்தியாக்கிரகத்திலீடுபட்டுச் சிறை சென்றனர். நான் உடல்நிலை குன்றி நோய்வாய்ப்பட்டு சென்னையி லிருந்தேன். இச்செய்தி பத்திரிகைகளில் வெளியாயிற்று. கண்டதும் பதைபதைத்து உள்ள நிலையை விளக்கக் கூறியதுடன், வைத்திய சிகிச்சைக்காக நண்பர் ஒருவரிடம் ரூபாய் 100 பெற்றுக்கொள்ளும்படியும், வெளியில் வந்த தும் தருவதாகவும் எழுதினார். விடுதலை அடைந்து சென்னை வந்த அன்றே என்னைக் காண வீடுதேடி வந்தார். நிலை கண்டு கண்ணீர் விட்டார். எனக்குத் தைரியம் சொன்னார். இதைப்போல் தன் சகாக்கள் படும் துயரைக் கண்டு சகியாது செய்த உதவிகள் பல. விரிவாக எழுதி காலத்தைக் கடத்த விரும்பவில்லை.

"இம் மாகாணத்தில் மந்திரி சபை ஏற்பட்டபின் ஒவ்வொரு நாளும் நெருக்கடியும்—குமுறலும் ஏற்பட்டு

வருகிறது. இதைக் காணும் பத்திரிகைகள் பொய் வதந்தியைப் பரப்பி, புதிய பிளவுகளையும், கட்சிகளையும் தோற்றுவிக்க முயலும்.'' என்னசெய்வதென்று காங்கிரஸ் சட்டசபைக் கட்சியினர் தனித்தனியே யோசிக்கும்போது சுலபமாக யாருக்கும் தெரியாமல் பிரச்சினையைத் தீர்த்து எதிரிகள் ஏமாற்றம் அடையும்படி செய்வார். இவர் ஒரு சிறந்த அரசியல்வாதி மாத்திரமல்ல! காந்தீய தர்மத்தைக் கடைப்பிடித்த ராஜதந்திரியும்கூட என்று சொல்வது மிகையாகாது. வயது சுமார் 45 இன்னும் கலியாணம் ஆகவில்லை. பிள்ளையின் புகழைக் கேட்டு மனம் களிக்கும் தாய், பேரப்பிள்ளைகளைக் காண அவாவுகிறார். ஆனால் நாடாரோ மணமே வேண்டாமென வெறுக்கின்றார். மணந்து நன்மக்களை ஈன்று நாட்டிற்கு வழங்கவேண்டுமென்பது என்போன்றோர் அவா. அவர் மனம் எப்போது தணியுமென்பது புலனாகவில்லை. பீஷ்மரைப் போன்ற பிரம்மச்சாரியாகவே இருக்க விரும்புகிறார் போலும்! பீஷ்மர் துறவால் அரசாள மக்களின்றி தொல்லைப்பட நேர்ந்ததல்லவா? அந்தநிலை நம்நாட்டில் இனி தோன்ற வேண்டாம்.

இவர் எல்லாத் துறைகளிலும் தமிழ் நாட்டின் இளைஞரினத்தில் சிறந்தவர். இவர் நீண்டநாள் வாழட்டும்! இவரை ஈன்ற தாயும் சுற்றமும் வாழட்டும்!

உழைப்புக்குத்தான் பலன் என்பதைக் குழந்தைகள் அறியவேண்டும். சுவாமியைக் கேட்டு இஷ்டப்பட்ட நலன்களை அடையலாம் என்று சிறு குழந்தைகளுக்குப் போதிப்பது பிசகு. —ராஜாஜி

நாடகக் கலை மணி
திரு டி. கே. சண்முகம்

"ஊழியத்தால் உயர்ந்தவர்!"

1930ம் ஆண்டு முதல் தலைவர் காமராஜ் அவர்களை நான் அறிவேன். ஊழியராக இருந்தபோதும், ஊராளும் மன்றத்தில் இடம் பெற்றபோதும், செயல்குழுவின் உறுப்பினராகவும், பின் செயலாளராகவும் பணி புரிந்தபோதும், சென்ற எட்டு ஆண்டுகளாக தலைவராக இருந்து தொண்டாற்றும் நிலையிலும் பன்முறை அவர்களோடு பழகி அளவளாவும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. 18 ஆண்டுகளுக்கு முன் நான் சந்தித்து அளவளாவிய அதே காமராஜ் அவர்களைத்தான் இன்றும் காண்கிறேன்.

தொண்டராகக் கண்டேன். இன்று இந்திய நாட்டின் தலைவிதியை வரையறுக்கும் செயல் குழுவில் அங்கம் வகிக்கக் காண்கிறேன். இடையே பல ஆண்டுகள் கழிந்தன. அன்றும் இன்றும் அன்புடன் அழைத்து அருகிருத்தி இன்னுரை பேசும் அவர்களுடைய இனிய பண்பாட்டில் பழுது கண்டேனில்லை. பேரொளியல்ல; புடமிட்ட தங்கம். ஆடம்பரமற்ற வாழ்க்கை; அன்பு ததும்பும் பேச்சு. அஞ்சாத நெஞ்சம். பணத்தினாலல்ல; கல்லூரிப் பட்டத்தினாலல்ல; ஊழியத்தால் உயர்ந்தவர்கள். அவர்கள் வாழ்க; பல்லாண்டு வாழ்ந்து பணி புரிக.

> சத்தியத்தில் நிற்பதென்பது, பஞ்சணையில் படுத்திருப்பதல்ல. உண்மையைக் கடைப் பிடிப்பதற்கு எவ்வளவோ தியாகம் செய்ய வேண்டி இருக்கிறது; அதிலே எவ்வளவோ கஷ்டம்; எவ்வளவோ கட்டுப்பாடுகள்; இப்படியெல்லாம் இராமல், ஆனந்தமான காரியமாக மட்டும் இருக்குமானால், அதிலே இவ்வளவு அழகுக்கு இடமில்லை. வானமே இடிந்து தலையில் விழுவதாயிருந்தாலும், நாம் உண்மையைக்கடைப்பிடித்து ஒழுகவேண்டும்.
>
> * * * * * *
>
> தீண்டாமை என்பது நுட்பமான பல ரூபங்களில் நம்மைப் பிரித்து வைத்திருக்கிறது. அதனால் வாழ்க்கை இன்பமற்றதாயும் கஷ்ட முடையதாயும் இருந்து வருகிறது.
>
> —காந்திஜீ

தலைவர் காமராஜ் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

காமராஜ் தாயார்

தமிழ் நாட்டின் சிறந்த வியாபார நகரங்களில் முதல் நகராய் விளங்கும் **விருதுநகரில்** உயர்திரு வெ. சி. **குமாரசாமி நாடார்**, திருமதி **சிவகாமியம்மாள்** ஆகிய இருவரின் செல்வப் புதல்வராய் **1903**ம் வருடம் **ஜூலை 15**ம் தேதி பிறந்தார். உடன் பிறந்த **நாகம்மாள்** என்ற சகோதரி ஒருவர் மட்டும் உண்டு. இவர் பிறந்த சுமார் $5\frac{1}{2}$ வருடத்தில் இவர் தந்தை காலமெய்தினர்.

வியாபாரமே பிரதானமாகக் கருதிய அந்த நாளில், கல்வியின் மேம்பாட்டைக் கருதாத அந்த நாளில்,

"தந்தையொடு கல்வி போம்" என்ற உலக வழக்கிற்கிணங்க, தட்டிக் கேட்டுக் கட்டுப்படுத்தி, கல்விச் சாலையில் சரியானபடி படிக்க வைக்க, குடும்பத்தில் தகுந்த ஆள் இல்லாமையால், விருதுநகரின் நாடார்கள் பொதுமகமைப் பணத்திலிருந்து, அந்நாள் முதல் இந்நாள் வரை சகல வகுப்பு மாணவர்களுக்கும் ஜாதி, மத பேதமின்றி பத்தாவது வகுப்பு (S. S. L. C.) முடிய, சம்பளமின்றி (School Fee) சகல துறைகளிலும் கல்வி போதித்து, தமிழ் நாட்டின் தலை சிறந்த பள்ளிகளுள் ஒன்றாக விளங்கித் திகழும் **க்ஷத்திரிய வித்தியாசாலா உயர்நிலைப் பள்ளியில்** ஆரம்பக் கல்வி மட்டும் பெற்றார்.

பின் சில ஆண்டுகள் வியாபாரத்தின் நிமித்தம், திருவனந்தபுரத்திலும், போடிநாயக்கனூரிலும் கடைகளில் இருந்தார். ஆனால், கருத்து கடையின் அலுவல்களில் நாடவில்லை; அன்றாட தினப் பத்திரிகைகளை ஆவலுடன் எதிர்பார்த்து, அந் நாள் இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டங்களை நடத்திவந்த தலைவர்களின் கருத்துக்களை ஆராய்வதில் தீவிரமாய் ஈடுபட்டது. அதன் பயனாய் கொஞ்ச நாளில் கடை வேலையைக் காலி செய்துவிட்டு, விருதுநகர் அடைந்து, காங்கிரஸ் ஊழியராக உழைக்க முற்பட்டார்.

நம் நாட்டின் விடுதலை குறித்து, காங்கிரஸ் மகா சபை வெகு வேகமாக முன்னேறி வந்துகொண்டிருந்த காலம்! அரசியல் சுதந்திரம் குறித்துச் சட்டத்திற்கு உட்பட்டே கிளர்ச்சி செய்ய வேண்டுமென்ற நோக்கங் கொண்ட காங்கிரஸ் மிதவாதிகளும், "சுயராஜ்யம் நமது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவோம்; இவ்வுரிமையை அடைய அன்னியர் தயவையோ, சட்டத்தையோ

எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை'' என்று வீர கர்ஜனை செய்த தீவிர காங்கிரஸ் வாதிகளும் நாளுக்கு நாள் பொங்கி எழுந்த காலம்!

செக்கிழுத்த சிதம்பரனார் போன்றோர், சொந்தக் கப்பல் விடும் அளவுக்குப் புத்துணர்ச்சி ஊட்டி, தியாகத் தீயில் குதிக்க வைத்த சுதேச இயக்கம் நடந்த காலம்! அன்னிபெஸண்ட் அம்மையார் தொடங்கிய சுய ஆட்சிக் கிளர்ச்சி (Home Rule Movement)யின் பயனாக ஜனப் பொறுப்பாட்சி எனக் கூறி, இரட்டையாட்சியைப் பிரிட்டிஷார் ஏமாற்றி வழங்க, அதன் வெறுப்பால் பஞ்சாப் படுகொலை நடத்தும் அளவுக்கு ஏற்பட்ட கொந்தளிப்பு மிகுந்த காலம்!

இந்நாட்களில் காமராஜ் தீவிர காங்கிரஸ் முழு நேர ஊழியராக வேலை செய்து வரலானார்.



க்ஷத்திரிய வித்தியாசாலா ஹைஸ்கூல்

ஊடக்குமுறைத் தர்பார் அதிகரித்து, அரசியலில் சற்று அசிரத்தை ஏற்பட்டது. இங்கிலேயில் தேங்கிக் கிடந்த இந்திய அரசியல் வாழ்வில் பெரும் விழிப்பை உண்டுபண்ணிய 1920ம் வருட ஒத்துழையாமை இயக்கம், மகாத்மா காந்தியடிகளின் தலைமையில் ஆரம்பமானதும், காமராஜ் சட்டமறுப்புத் தீக்குழி இறங்கலுற்றார்.

அந் நாளில், தேசத் தொண்டால் ஜெயிலுக்குப் போனாலும், அவர்களைப்பற்றி மிகவும் இழிவாகவும், கேவலமாகவும் ஏனையோர் எண்ணியதால், இவர் செயல், இவர் தாயாரை உறுத்தியது. ஆம், ஏக புத்திரனைப் பெற்ற மனம் எப்படி இருக்கும்? அவ் ஒரே புதல்வனால் தான் குடும்பம் பெற்றுப் பெருகி பேர் சொல்ல வேண்டும். ஆகவே, 'கல்யாணமாவது செய்து வைத்துவிட்டால், பின் கட்டுப்பட்டு, குடும்ப நிர்வாகத்தில் ஐக்கியமாகி விடுவான்' என்று கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடு செய்து, பெண்ணும் பார்த்துத் தேதி குறிப்பிடும் அளவு வந்துவிட்டது. வெளியூர் சென்றிருந்த தலைவர் வீடு திரும்பியபொழுது விஷயம் காதுக்கு எட்டியது. அவ் வளவுதான் தாய் நாட்டின் விடுதலை மீது கொண்டிருந்த தாகம், தாயாரென்றும் பாராது, அருகில் கிடந்த தடியால் தாக்கவும் வைத்துவிட்டது. கொஞ்ச நாள் கல்யாணப் பிரச்சனை அடியுடன் நிறுத்தப்பட்டது; ஆனால் நீடிக்க வில்லை. "பெற்ற மனம் பித்து" என்றபடி பின்பு ஒரு முறை உறவினரின்மூலம் முயற்சி செய்தார். "கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டால், இனி என்னை மறந்துவிட வேண்டியதுதான்" என்ற தனது முடிவான, உறுதியான, அசைக்க முடியாத

அபிப்பிராயத்தைத் தெரிவித்தபின், அவர் தாயார், அன்றுடன் இன்றுவரை அவரிடம் கல்யாணப் பேச்சுப் பேசுவதை அடியோடு விட்டுவிட்டார்.

கல்யாணப் படலம் ஒரு வழியாக முடிவுற்றதும், முன்னிலும் தீவிரமாக ஊழியம் செய்யக் கிளம்பிவிட்டார். கையில் ஒரு தகர டப்பா உண்டியல் ஏந்தி, கடை கடையாகப் போய் காசு வாங்கலானார், டவுன் காங்கிரஸ் நிதிக்காக. கடைகளில் வாங்கும் நேரம் முடிந்த வேளைகளில், ரயிலடிக்குச் சென்று, வண்டியிலிருந்து இறங்கி வருவோரிடம் உண்டியலைக் குலுக்குவது. அத்துடன் அன்றன்று வெளிவரும் தினப் பத்திரிகைகளையும் நாள் தவறாது படித்துவிடுவார்.

1922-ம் ஆண்டில், சாத்தூர்த் தாலூகாவின், காங்கிரஸ் மகாநாடு திரு. ஈ. வெ. இராமசாமிப்பெரியார் தலைமையில் நடைபெற்ற பொழுது, அதன் வரவேற்புக் கமிட்டிக் காரியதரிசியாக விளங்கிய நம் தலைவர், முதன் முறையாக, மாகாணக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினராக, சாத்தூர்த் தாலூகாவில், ஐவரில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஊழியத்தில் உற்சாகம் மென்மேலும் பெருகலாயிற்று.

1923ல் நடைபெற்ற கொடிப் போராட்டத்திற்காக நாகபுரிக்கு ஊழியத் தியாகிகளை ஒன்றுதிரட்டி அனுப்பிக் கொண்டிருந்த தலைவர், தானும் நாகபுரிக்குக் கிளம்பினார். ஆனால், இடையிலேயே திரும்பி வர வேண்டியதாயிற்று. காரணம், போராட்டமே நின்றுவிட்டதுதான். பின்பு 1927ல் சென்னை மவுண்ட் ரோட்டிலுள்ள நீலன் சிலையை

அகற்றுவதற்காகத் தமிழ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட இயக்கத்தில் தீவிர பங்கு கொண்டவர்களில் நம் தலைவர் முக்கியமானவராக இருந்து பணியாற்றினர்.

அந் நாளில், காங்கிரஸ்காரர்கள் பொதுக்கூட்டங் களுக்கு ஏற்பாடு செய்து நடத்துவதென்றால் அவ்வளவு இலேசான காரியமல்ல. அதிலும், விருதுநகரில் கூட்ட மென்றால், அந்நாள் சென்னை மாகாணத்தின் அரசியல் வாதிகள் அனைவரும் இன்று நினைத்தால்கூட மனதில் ஆட்டம் கொள்வர். ஏனெனில், கண்ணிய கவர்ண்மெண் டாரின் கண்மூடித்தனமான அடக்கு முறைத் தர்பார் மட்டும் அன்று, எதிர்க் கட்சிக்காரர்களாகிய ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் செல்வாக்குப் பெற்ற இடம் விருதுநகர்! ஏன், சென்னை மாகாணத்தின் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் அனைவருக்குமே தலைநகர் என்றுகூடச் சொல்லலாம். அதனால் அரசியல் கட்சிக்காரர்களின் பாஷையில் நகருக்கு இடப்பட்ட பெயர், "ஜஸ்டிஸ் கோட்டை" என்பது. பெரிய தலைவர்களை வெளியூரிலிருந்து வரவழைத்துக் கூட்டங்கள் நடத்தினாலும்சரி, இல்லை உள்ளூர் ஆட்களைக் கொண்டு கூட்டங்கள் கூட்டினாலும்சரி, கரச்சலும், கலாட் டாவும் இல்லாமல் இருந்த நாள் விரல் விட்டு எண்ணக் கூடியதாகத்தான் இருக்கும். கல் எறி வாங்காத கூட்டம் அதிலும் சொற்பமே.

இவ்வித நாலா பக்க எதிர்ப்பிற்கிடையே மிதந்து, காரியத்தைச் சாதித்து விடுவார், வாரம் ஒரு கூட்டமாகக் கூட்டி. அன்று விருதுநகரின் பணக்காரர்கள் என்று சொல்லத்தக்கநிலையிலிருந்தோரில் மிகுதியானவர்கள் எதிர்க் கட்சியில் இருந்தமையால், அவர்களை அண்டி வாழ்ந்த,

வியாபாரத் தொடர்பு கொண்ட குட்டி முதலாளிகளில் அநேகரும் தலைவரைவெறுக்கத் தலைப்பட்டனர். 'ஊரைக் குட்டியச் சுவராக்கிப் பாழ் படுத்த முற்பட்ட ஆடுகாலிப் பயல்' என்று கூறவும் தயங்கவில்லை. சிநேகிதர்களாக இருந்தவர்களும், தங்கள் கடைகளில் சாதாரண நேரங்களில் வந்துஉட்காருவதைக்கூட விரும்பவில்லை. ஏனெனில், அவரின் போக்கை ஏற்றுக்கொள்ளாத பணக்காரக் கனவான்கள், வியாபார விஷயங்களில் முட்டுக்கட்டை போட முற்பட்ட காரணத்திற்காக.

இம்மாதிரியான முட்டுக்கட்டைகளும், சதிகளும், அவருக்கு ஒருவித உற்சாகத்தையும், மனத்தெம்பையும் ஊட்டியதேஒழிய, தளர்வு மனப்பான்மையைத் தலைஎடுக்க விடவில்லை. கல்லடி பலமுறை பெற்றிருக்கிறார். ஆனால் கலங்கிய நாள் கிடையாது. அது அவருடைய அந்நாள் வாழ்வின் தினசரிக்காரியங்களுள் ஒன்றாகவே தோன்றியது. பலமுறை எதிரிகளால் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார். அவை அவருடைய தேசிய ஆர்வத்தைக் கொழுந்துவிட்டு எரிய வைத்ததே தவிர, அதைரியமடையச்செய்யவில்லை. அஞ்சினார் இல்லை. நாளுக்குநாள் பிரச்சாரத்தின் வேகம் அதிகமாகியதே தவிர, அவருடைய எதிரிகள் எதிர்பார்த்த படி குடை சாயவில்லை.

விருதுநகருக்கு அருகாமையில் உள்ள ஒரு கிராமத்திற்கு பிரச்சாரத்திற்காகச் சென்றிருந்தபொழுது, எதிரிகளால் ஏவப்பட்ட முரடர்களால் தாக்கப்பட்டார். அவர்களால் அவர் உடையைத்தான் பிடுங்கமுடிந்ததே ஒழிய உள்ளத்தை நெருங்கவே முடியவில்லை. இவ்விதம் எத்தனையோ எதிர்ப்புகள், இவரை அரசியலிலிருந்து

ஒழித்துக்கட்ட முற்பட்டன. எதுவும் இவரிடம் வெற்றி காண முடியவில்லை

இவருடைய காங்கிரஸ் கொள்கையின்மேல் உள்ள பற்று அளவு கடந்து பரிமளித்தது என்பதற்குத் தக்க சான்று கூறவேண்டுமானால் எத்தனையோ நிகழ்ச்சிச் சம்பவங்களைக் கூறலாம். அவற்றில் மற்றொன்று: தன் அத்தியந்த, உயிருக்குயிரான, இணைபிரியாத, உற்ற தோழனை வெறுத்துப் பிரிந்ததை எடுத்துக் காட்டலாம். காந்தியக் கொள்கையிலே தலைசிறந்ததும், பிற மாகாணங்களால் இன்றும், இன்னும் சாதிக்க முடியாததை நம் மாகாணம் சாதித்து நிற்கும் மதுவிலக்குத் திட்டம், முதல் முதலில் காங்கிரஸ் கொள்கைகளில் ஒன்றாக வந்தபொழுது இந்தச் சம்பவம் நடைபெற்றது. பலவகையிலும் உதவியாக இருந்த தன் நண்பன் மதுபானம் அருந்துகிறான் என்ற விஷயம் தெரிந்த பொழுது, அவனைத் திருத்தப் பலவகையில் முயன்றார். அது முடியாது என்று தெரிய வந்தபொழுது தன் சிநேகிதத்தையே முடித்துக் கொண்டார். நாட்டுப் பற்று நண்பனின் நட்பையும் ஒழித்துக்கட்டியது.

தேசத்தில் காங்கிரஸ் மகாசபையின் சங்கநாதம் முழங்கின சமயமெல்லாம் காமராஜை போர் முன்னணியில் காணலாம். 1930ம் ஆண்டு மகாத்மா காந்தியடிகளால் ஆரம்பிக்கப்பட்ட உப்புச் சத்தியாக்கிரகப் போரில் தீவிரமாக ஈடுபட்டு, முதன் முறையாகக் கைதுசெய்யப் பட்டு சிறை வாழ்க்கையை அலிபுரம் சிறையில் கழித்தார். இதற்கு முன்பே ஒருமுறை, அதாவது 1923ல் மதுரை கள்ளுக்கடை மறியலில் சிறை செல்ல வேண்டிய

சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஆனால், போலீஸ்காரர்கள் சதி செய்துவிட்டார்கள். அதாவது மேடையில் ஏறி மறியல் பிரசங்கம் செய்துவிட்டு, வேறு முக்கியவிஷயமாக மேடையை விட்டு இறங்கி கூட்டத்தைக்கூடக் கடக்கவில்லை, போலீஸ் ஜவான்கள் மறுபுறமாக மேடைக்கு வந்து, மேடை மீது இருந்தவர்கள் அனைவரையும் கைதி செய்து கொண்டு போய்விட்டார்கள். காமராஜ் கைவிடப்பட்டார்.

முதன்முதலில் சிறை சென்ற காமராஜ்

முதன் முறை, காமராஜ் கைதி செய்யப்பட்டுச் சிறையில் அடைபட்டதைக் கேள்விப்பட்டதும், அவருடைய தகப்பனைப் பெற்ற தாயார்—பாட்டி—ஒரே பேரனின்பால் கொண்ட ஏக்கத்தால் புத்திசுவாதீனமிழந்தார். அவர்களுக்காக வேண்டியாவது மன்னிப்புக் கேட்டு வந்துவிடும்படி வேண்டியவர்கள் தூண்டினர். ஆனால், தலைவர் மறுத்துவிட்டார். "ஐயோ! அங்கு கேப்பைக் களியைக் கிண்டிப் போடுவானே! அதை உண்டு வெறும் தரையில் கிடந்து தூங்கச் சொல்வானே! என் பேரன் எப்படியெல்லாம் கஷ்டப்படுகிறானோ?" என்று அவருடைய பாட்டியின் ஒரே புலம்பல்.

விடுதலை ஆகும் நாளும் நெருங்கியது; பாட்டியின் அந்திய காலமும் குறுகியது. விடுதலையாகி வீடுவந்து பாட்டியைக் கண்டார் தலைவர். பாட்டியின் புத்தித் தடுமாற்றம் சற்றுத் தெளிந்தது; ஆனால் பேரனைக் கண்ட

ஐந்தாவது நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். காமராஜும் கருமாதி நடத்தினார். இதே 1930ல்தான் முதன் முறையாக தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியில் ஸ்தானம் பெற்றார். மகாத்மா காந்தியடிகள் 1931ல் வட்டமேஜை மகாநாட்டிற்காக லண்டன் சென்று, வெறுங் கையுடன் திரும்பி வந்து சட்ட மறுப்பை ஆரம்பித்த காலத்தில் மறுமுறை 1932ல் சிறை சென்றார். இந்தத் தடவை சிறை வாழ்க்கையை வேலூர் சிறையில் கழித்து விட்டு வெளியில் வந்தார்.

வெளிவந்த கொஞ்ச நாளில், ஒரு பெரிய விபரீத சதியில் சிக்க வைக்கப்பட்டார். அதாவது 1933ல் —இந்தியாவில் – வெள்ளையரின் ஆட்சி, வெல்லிங்டன் ரூபத்தில் விபரீத விளையாட்டு விளையாடிவந்தபொழுது விருதுநகர் போஸ்டாபீஸ் வெடி குண்டு வழக்கில் சிக்க வைத்தனர் போலீஸார். சேதம் ஒன்றுமே இல்லாதிருக்க, அடக்கு முறை ஆட்சியாளர் அதைப் பிரமாதப்படுத்தி, அன்று நகரின் பிரதம காங்கிரஸ் ஊழியராக விளங்கிய நம் தலைவரைக் கைது செய்து படாதபாடு படுத்தினர்.

தலைவருக்காக அவர் நண்பர் வக்கீல் திரு: ஜார்ஜ் ஜோசப் அவர்கள் ஆஜரானார். விசாரணை சுமார் எட்டு மாதங்கள் வரை நடைபெற்று முடிந்தது. இறுதியில் சத்தியமே வென்றது! நியாய ஸ்தலத்தில் நியாயமே வழங்கினர்! போலீஸாரின் பொய்ச் சரடைப் புசுபுசுக்க வைத்தனர் கோர்ட்டார்! அன்றுமட்டும் தீர்ப்பு மாறுபட்டிருந்தால், இன்று நம் மத்தியில் தலைவராக வீற்றிருக்க மாட்டார்! பகவத்சிங்கையும், அவர் தோழர்களையும் பற்றி அணைந்த பாசக் கயிறு இவர் கழுத்தையும் முத்தமிட்

டிருக்கும்! அல்லது அந்தமான் இவரை வரவேற்றிருக்கும்! தமிழ்நாடும், தமிழ் மக்களும் பெற்ற தவப்பயன், அன்று சதியினின்று தலைவர் மீண்டு விடுதலை பெற்றார். ஆனல் இந்த வழக்கால் கையிலிருந்த காசு பூராவும் காலியாகி வீடுமட்டும் எஞ்சி நின்றது.

மகாத்மாவின் அகிம்சைக் கொள்கையில் பூர்ண பற்றுக்கொண்ட காமராஜ், வெடி குண்டு சதி போன்ற பலாத்கார வழிகளில் இறங்கவில்லை என்று நீதி ஸ்தலம் இயம்பியபோதிலும், போலீஸ் புலிகளுக்குக் கிலி விடவில்லை. கேஸ் முடிந்த சில மாதங்களில் வைஸ்ராய் வெல்லிங்டன் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்த இரண்டு வாரங்களில், நமது காமராஜைக் கைது செய்து வைத்திருந்தனர். வெளியில் இருந்தால் விபரீதமேதாவது நேர்ந்துவிடும் என்று ஐ. சி. எஸ். ஆட்சியாளர் வர்க்கம் நினைத்து கைதியாக்கி, காவலில் வைத்ததுபோதும்.



X காமராஜ் வீடு

காமராஜின் அரசியல் வாழ்க்கையில், அவருடன் முக்கிய பங்கு பெற்றவர் காலஞ் சென்ற உயர்திரு சத்தியமூர்த்தி என்றால் மிகையாகாது. சத்தியமூர்த்தி என்றால் சட்டசபையில் எதிர்க்கட்சியாளர்களுக்கு சிம்ம சொப்பனம்தான். அப்பேர்ப்பட்ட சத்தியமூர்த்தியவர்கள் 1936ல் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தபொழுது, காமராஜ் த. நா. கா. கமிட்டியின் காரியதரிசியாக விளங்கினார்.

1937ல் சட்டசபை நுழைவுக்கு அரசாங்கத்தார் பொதுத் தேர்தல் நடத்தினர். சாத்தூர்த் தொகுதிக்குக் காங்கிரஸ் சார்பாக யாரை நிறுத்துவது என்று ஒருவித தீர்மானமும் முடிவாகக் கூறுவதற்கில்லாதபடி ஒவ்வொரு வரும் திகைத்தனர். காரணம் போட்டியாக நிற்க முற் பட்டவர், தமிழ் நாட்டின் தலைசிறந்த ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்களில் ஒருவரும், சிறந்த நிர்வாகத்திறன் படைத்த வரும், நிறைந்த பணப் பெருக்கமுற்றவரும், தகுந்த ஆள் வலிவு கொண்டவருமாவர். இவ்வளவு செல்வமும், செல் வாக்கும் பெற்ற அவரை எதிர்த்து நிற்க, செல்வம் படைத்த காங்கிரஸ் பிரமுகர்கள் பின்வாங்கினர். பணத் தைக் கொடுத்தும் பைத்தியக்காரப் பட்டம் வாங்கிவிடக் கூடாதல்லவா!

இறுதியாக, ஊழியர்களிடையே ஒப்பற்ற செல் வாக்குப் பெற்றிருந்த, காசற்ற காமராஜ் அவர்களிடம் நாமிநேஷனில் கையெழுத்து வாங்கி, தள்ளினார்கள். "காக்கை ஏறப் பனம்பழம் விழுந்தது" என்ற கதையில், யாரும் எதிர்பாராதவிதமாக, நாமிநேஷன் வாபஸ்வாங்கும் இறுதி தினத்தன்று, எதிர்த்து நின்றவர் நாமிநேஷனை

திரு சத்தியமூர்த்தி

வாபஸ் வாங்கிக் கொண்டார். இச் செய்தி தமிழ் நாட்டு அரசியல் வாதிகளிடையே பெரியதோர் வியப்பையும், ஆச்சரியத்தையும் உண்டாக்கியது.

சிவகாசி சப் கலெக்டர் இதை அறிவித்த அன்று மாலையே பிரமாண்டமான ஊர்வலம், (காமராஜைப் பீட்டனில் வைத்து) சிவகாசியில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து விருதுநகரில் மறுநாள் மாலை நடைபெற்றது. சுற்றியுள்ள கிராமத்து மக்கள் எல்லோரும் ஒரேயடியாகத் திரண்டு ஜெயகோஷம் முழங்க, பீட்டனின் முன்னும் பின்னும் சென்றனர். ஊர்வலம் நகர் தெப்பக் குளத்தின் கீழ் பக்க வீதியில் வந்துகொண்டிருக்கும் பொழுது, எதிர்பாராத விதமாக அரசியல் எதிரிகளால் வீசப்பட்ட சரமாரியான சோடா புட்டி வீச்சுக்கு இலக்காகியது. நாலா பக்கமும் சிதறி ஓடினர் மக்கள். ஒரு சோடா புட்டி பீட்டன்மேல் வந்து விழுந்து சிதறியது. அதைத் தொடர்ந்து திராவகப் புட்டி ஒன்றும் வந்து

விழுந்தது. நல்லவேளையாக, அது பீட்டனில் விழாமல், பீட்டன் அடியில் விழுந்து சிதறியது. அவ்வளவுதான் குதிரைகள் வெருண்டு ஓட முற்பட்டன. குதிரை ஓட்டியும் லாயக்காக கடிவாளத்தைப் பிடித்தான். தலைவரும் தப்பினார். பட்டணத்துவாசிகள்தான் ஓட முற்பட்டனரே தவிர, பட்டிக்காட்டிலிருந்து வந்தவர்கள் தங்களுடன் தங்கள் வழித் துணைக்குக் கொண்டுவந்திருந்த கம்புகளை வீச ஆரம்பித்தவுடன் கேட்க வேண்டுமா எதிரிகளின் பாட்டை. அதற்குள் போலீஸ் லாரியும் வந்துவிடவே அமளி ஒருவழியாக ஓய்ந்தது.

இவ்விபத்தில் தலைவர் தப்பியதும் அதிசயமே. தப்பித்தவறி திராவகப் புட்டியின் வீச்சுக்கு இலக்காகி இருப்பின் என்ன நேர்ந்திருக்குமோ யார் அறிவர். இவை எல்லாம், தலைவருக்கு அன்றைய அரசியல் வாழ்வில் சர்வ சாதாரணமாகவே நிகழ்வன.

இவ்விதம் முதல் முதலிலேயே ஒருவித எதிர்ப்பும் இன்றி சட்டசபை புகுந்தார். அதன்பின்வந்த முனிசிபல் எலெக்ஷனில், 7வது வார்டு கவுன்சிலராக வாகை சூடி, 1940ல் நடைபெற்ற, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலில், திரு. சத்தியமூர்த்தி அவர்களின் ஒத்தாசையுடன் நின்றார். எதிர்த்து நின்றவர், கோயமுத்தூர் திரு. சி. பி. சுப்பையா ஆவர். அன்று காங்கிரஸில் செல்வாக்கும், அதிகாரமும் படைத்திருந்த அநேகர் எதிர்த்து வேலை செய்தும் 3 அதிகப்படியான ஓட்டுகளைப் பெற்று முதன் முறையாகத் தமிழ் நாட்டு ராஷ்டிரபதி ஆனார். தமிழ் நாட்டுக் காங்கிரஸ் சரித்திரத்திலேயே ஒரு ஊழியர் தலைவரானது இதுவே முதல் தடவையாகும்.

அதே 1940ம் ஆண்டில், காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவிகளை உதறியெறிய வேண்டுமென்று காங்கிரஸ் மேலிடம் கட்டளையிட்ட அந்தச்சணமே, சென்னை மந்திரி சபை வெளியேறி, மகாத்மா காந்தியடிகள் தொடங்கிய தனிப்பட்டவர்கள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட முற்பட்டனர். இது விஷயமாகத் தலைவர் காமராஜ் காந்திஜீயை வார்தாவில் நேரில் கண்டு பேசச் சென்றுகொண்டிருக்கையில் கூடூர் ஸ்டேஷனில் வைத்துக் கைது செய்து கொண்டுபோய்விட்டனர். பின் ஒரு வருடம் கழித்து விடுதலை செய்யப்பட்டார்.

1941ல் காமராஜ் அவர்கள் சிறையில் இருந்த காலத்தில், விருதுநகர் முனிசிபாலிட்டியில் காங்கிரஸ் கௌன்சிலர்கள் நிர்வாகம் செலுத்திவந்தனர். அப்பொழுது சேர்மனாக இருந்தவரும் ராஜிநாமா கொடுத்து, சிறைசென்றுவிட்டபடியால் சேர்மன் பதவிக்கு எலெக்ஷன் நடைபெற்றது. அதில் எவ்வித எதிர்ப்புமின்றி ஏகமனதாக சிறையிலிருந்த காமராஜ் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின் அவர் சிறையிலிருந்து வெளிவந்து ஒரே ஒருநாள் மட்டும் மரியாதைக்காக சேர்மன் ஆசனத்தில் வீற்றிருந்துவிட்டு, தேடிவந்த அப்பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.

1942ம் ஆண்டு, இரண்டாவது உலக யுத்தத்தின் மிகவும் நெருக்கடியான காலம். ஜப்பானியர் நேச நாடுகளுக்கு எதிராக, ஜெர்மானியருக்கு உடந்தையாக கீழ்க் கோடியில் யுத்தத்தை வெகுவேகமாக நடத்தி, சிங்கப்பூர், மலாய், பர்மா முதலிய நாடுகளைக் கைப்பற்றி இந்தியாவை எந்த நிமிஷத்திலும் தாக்கலாம் என்று மக்கள் பீதிகொண்



ராஜாஜி

டிருந்த காலம். அதே நேரத்தில், தேசியத் தலைவர்கள், காலனிகள் ஒவ்வொன்றையும் கோட்டை விட்ட பிரிட்டிஷார், இந்தியாவையும் எந்த நிமிஷத்திலும் கைவிட்டுச் சென்றாலும் சென்றுவிடலாம், எதிரி (ஜப்பான்) கைக்குமாறுவதற்குள் நாமே பெற்றுவிட வேண்டும் என்று தீவிரமாக வேண்டுவன செய்து கொண்டிருந்தனர். மக்களின் மனதை ஜப்பானியரின் யுத்த பீதியிலிருந்து மாற்றவும், மக்களின் கருத்துக்களை அறியவும், தலைவர் காமராஜும், திரு. ராஜாஜி அவர்களும் 1942ன் தொடக்கத்தில் தமிழ் நாடு பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்துவந்தார்கள்.

இதன்பின் சிலமாதங்களில், சென்னைமாகாணத்தின், ஏன் இந்தியாவின் சரித்திரத்திலேயே முக்கியமான ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதாவது "சில நிபந்தனைகளுடன் முஸ்லீம் லீக்கின் பாகிஸ்தான் கொள்கையை ஒப்புக்கொண்டால்தான், காங்கிரஸ், லீக்கர்களின் ஆதர

வுடன் தன் லட்சியத்தை அடைய முடியும்" என்று ராஜாஜி கூறினர்.

இத் தீர்மானம் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் நிராகரிக்கப்படவே, ராஜாஜீ காங்கிரஸிலிருந்து தனித்து நின்று, தன் கொள்கையைப் பிரச்சாரம் செய்யக் காந்திஜீயின் உத்திரவு பெற்ருர். ஆனல், தலைமைப் பீடத்தின் கொள்கைக்குக் கட்டுப்பட்ட தமிழ் நாடு காங்கிரஸ் வாதிகள் எதிர்ப் பிரச்சாரம் செய்யலுற்றனர். தலைவராக இருந்த காமராஜருக்கு, இதில் தலை சிறந்த பணி இருந்தது.

காமராஜ் பேசுகிருர்

1942 ஆகஸ்ட் 8உ, பம்பாயில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூட வேண்டிய நேரத்தில், எவ்வித முன் அறிவிப்புமின்றி இந்தியத் தலைவர்கள்—காந்திஜீ உள்பட— அனைவரும் கைது செய்யப்பட்டு, எங்கெங்கு கொண்டு போகப்பட்டார்கள் என்பதுகூட ரகசியமாக்கப்பட்டு, பாதுகாப்புக் கைதிகளாக்கப்பட்டனர். ஆனல், இதையறிந்த இந்திய நாட்டு மக்கள் அனை

வரும் கொதித்தெழுந்து தந்திக் கம்பிகளையும், தண்டவாளங்களையும் தவிடு பொடியாக்குதல், கவர்ண்மெண்ட் கட்டிடங்களுக்குத் தீயிடுதல் போன்ற பலாத்கார செய்கைகளில் ஈடுபட்டு ஆகஸ்ட் புரட்சியாக்கிவிட்டனர்.

இக் கூட்டத்திற்காகச் சென்றிருந்த காமராஜ் அங்கிருந்து சென்னையை நோக்கி வந்துகொண்டிருந்தார். அப்பொழுது, அவரையும் எந்த இடத்தில் கண்டாலும் அரஸ்ட் செய்யும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆகவே, காமராஜ், ரயிலிலும், காரிலும், நாட்டுவண்டியிலுமாக கிடைத்த கிடைத்த வாகனங்களிலெல்லாம் பிரயாணம் செய்தும், கால்நடையுமாக, போலீஸ்காரர்களுக்கும், சி. ஐ டி.களுக்கும் டிமிக்கி கொடுத்து, தான் வெளியில் செய்ய வேண்டிய வேலைகளை—தனக்கு மேலிடத்தார் இட்ட கட்டளைகளை, சென்னை மாகாணத்தின் முக்கிய நகரங்களில் உள்ள காங்கிரஸ் பிரமுகர்களைச் சந்தித்து விஷயங்களைத் தெரிவித்துவிட்டு, இறுதியாக விருதுநகர் வந்தடைந்து வீட்டில் போய் இருந்துகொண்டு, மறுநாள் காலையில் தன் நண்பர் ஒருவரைக் கூப்பிட்டு, "தான் வீட்டில் இருப்பதாகவும், தன்னை வந்து அரஸ்ட் செய்துகொள்ளலாம் என்றும்" போலீஸில் போய் தெரிவித்து வரும்படியும் அனுப்பினார். அவ்விதமே அவருக்காக அலைந்து திரிந்த போலீஸார், அவருடைய வீட்டிற்கு வந்து கைது செய்தனர். காமராஜ் அவர்களும், தன் தாயாரிடம் விடை பெற்றுக்கொண்டு, மாமியார் வீட்டிற்குச் செல்லுபவர்போல் திருப்தியுடன் சென்றார்.

1945ல் இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்து வெள்ளையரும் வெற்றிபெற்றனர். இதுவரை பாதுகாப்புக்

கைதிகளாக, யாதொரு விசாரணையுமின்றி அடைபட்டிருந்த தலைவர்கள் அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப் பட்டனர். காமராஜும் வெளிவந்தார்.

காமராஜ் வெளிவருவதற்கு முன்பே தமிழ் நாடு காங்கிரஸ்வாதிகளிடையே புகைந்து கொண்டிருந்த தகராறுகள், அவர் வெளிவந்த சில மாதங்களில் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. காரணம், அதுவரை காங்கிரஸிலிருந்து தனித்து நின்ற திரு. ராஜாஜி அவர்கள் தமிழ் நாடு காங்கிரஸில் இடம் பெற முயற்சித்தார்.

இதனால் ராஜாஜி கோஷ்டி, காமராஜ் கோஷ்டி என இரு பிரிவுகள் பொதுமக்களால் ஏற்படுத்தப்பட்டு, தமிழ் நாட்டு மக்களையே பல வழிகளிலும் தட்டி எழுப்பி, கண்விழிக்க வைத்ததை யாரும் மறந்திருக்க முடியாது.

இதற்கிடையில் தமிழ் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்ய வந்த காந்தியடிகள், தன் பிரயாணம் முடிந்ததும், வார்தா சென்று, ராஜாஜியை எதிர்ப்பவர்கள் ஒரு சிறு கூட்டத்தார்—**கிளிக்**—என்று ஹரிஜனில் எழுதவே, "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்ற நக்கீரர் பரம்பரையில் உதித்த தமிழ்மக்கள், அன்று ஒன்று திரண்டு, "உலகம் போற்றும் உத்தமராக இருந்தும் இவ் விஷயத்தில் தவறான அறிக்கையை வெளியிட்டுவிட்டார்; தமிழர் இதை ஒருநாளும் ஏற்க முடியாது. ஆகவே, அதை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும்" என்று கூறும் படியாகவும் முற்றிவிட்டது. காமராஜ் அவர்களும், தனது பார்லிமெண்டரி போர்டு தலைவர் பதவியை உடனே ராஜிநாமா செய்தார்.

பின்பு திரு. வல்லபாய் படேல் அவர்கள் காமராஜ் அவர்களை நேரில் அழைத்து, ஒரு வழியாகச் சமாதானம் செய்து, காரியங்களைச் செய்ய வசதிகள் செய்துகொடுத்தார். அதன்பயனாய், சட்டசபைத் தேர்தலில் மற்ற மாகாணங்களைவிட சென்னை மாகாணம், மிகவும் அதிகப்படியான ஸ்தானங்களையும், பூர்ண மெஜாரிட்டியையும் கொண்ட மந்திரி சபையை அமைத்தது. இதில் காமராஜ் நடந்துகொண்ட ராஜ தந்திரமும், சாமர்த்தியமும், வட இந்தியத் தலைவர்களை, இன்றும், என்றும் மறவாத நிலையில் உணரும்படி செய்தது.

அதன்பின் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தல் நடைபெற்றது. பெருவாரியான தன் நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, மறுமுறை தலைவர் தேர்தலில் நின்றார். காரைக்குடி திரு. சா. கணேசன் அவர்கள் போட்டியிட்டார். இத்தடவை மிகவும் அதிகப்படியான ஓட்டுகளால் தலைவராகக் காமராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பலவித இன்னல்களும், இடையூறுகளும் மறைந்து, 1947 ஆகஸ்ட் 15ல் நாட்டின் லக்ஷியத்தில் ஒரு பகுதியாகிய குடியேற்ற நாட்டு அந்தஸ்தைப் பிரிட்டிஷார், இந்தியாவிற்கு அளித்தனர். சுதந்திர இந்தியத் தேசியக் கொடி, டில்லி செங்கோட்டையிலும், இந்தியாவின் பிரதம நகரங்களிலும் பட்டொளி வீசிப் பறக்கவிடப்பட்டது. கஷ்டப்பட்டதின் பலனைத் தலைவர் காமராஜரும், காந்திஜீயும் அனுபவித்தனர்.

பிரிட்டிஷாரும் சும்மா வெளியேறிவிடவில்லை. இந்தியர் விழித்துவிட்டனர்; இனி நாம் ஆளமுடியாது

என்பதை உணர்ந்தபின்புதான் வெளியேறினர். அத்துடன் பொருளாதாரத்திலும் மிகச் சீர்கேடான நிலையில் இருந்ததால், அதைக் கொஞ்சமும் சமாளிக்க முடியாது என்பதையும் உணர்ந்தனர்.

சுதந்திரம் பெற்று ஆண்டு ஒன்று முடிவதற்குள், சுதந்திர பிதா காந்தியடிகளை 30—1—1948ல் பறி கொடுத்தோம். அன்று உண்மையாகவே தமிழ் நாட்டில் பெரும் அதிர்ச்சி கொண்டவர் நம் தலைவர் காமராஜ்தான்.

மூன்றுவது முறை 1948ல் நடைபெற்ற தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலிலும், எவ்வித எதிர்ப்புமின்றி ஏகமனதாக, நம் தலைவரே தேர்ந்தெடுக்கப் பட்டார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஏற்பட்ட காலந் தொட்டு இந்நாள் வரை, யாரும் இவ்வளவு நீண்ட காலம் —சுமார் ஒன்பது ஆண்டுகள்—தொடர்வாகத் தலைவர் பதவியை வகித்ததே கிடையாது. காரணம், காந்திஜீயின் மீதும், அவருடைய அகிம்சை, சத்தியம், நிர்மாணத் திட்டங்கள் ஆகியவைகளிலும் கொண்டுள்ள அசைக்க முடியாதபற்றும், ஊழியர்களிடம் கொண்டுள்ள அன்புமே காமராஜை நீண்ட நாள் தலைவராக்கியது எனலாம். அத்துடன் இடைவிடா உழைப்பு; யாரிடமும் குரோதம் கொள்ளா மனப்பான்மை; பணவிஷயத்தில் கண்டிப்பு.

பொதுவாகச் சிலர் கூறுவர், காமராஜ் காலேஜ் படிப்பு மட்டும் கற்றிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்; நேரு, படேல் போன்ற இடத்திலல்லவா அமர்ந்திருப்பார் என்று. இப்பொழுதுதான் என்ன, அவர் பெற்ற அனுபவம், அவரை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியிலும் உறுப்பினராக்கிவிட்டதே! நல்லவேளை

அவர் காலேஜ் படிப்பு படியா திருந்தது. அப்படிப் படித் திருந்தால், விருதுநகர் மக்கள் பெரும்பாலோர் மேற்கொள்ளும் வியாபாரத்துறையைத் தானும் மேற்கொண்டு, அவர் குடும்பத் திற்கு மட்டுமே பயன்பட்டிருக் கலாம்; அல்லது கல்யாணம் செய்து கொண்டிருந்தாலும், குடும்ப பாரத்திற்கு உட்பட்டு, முழுக்கவனத்தையும் நாட்டின் மீது செலுத்த முடியாதுபோயி ருக்கலாம்; யார் கண்டார்கள்!

அ. இ. கா. கமிட்டியில் காமராஜ்

தமிழ் நாட்டின் நற்காலவசத்தால்தான் அவர், மேற்கூறிய துறைகளில் இறங்கவில்லை என்று முடிவு செய்யவேண்டியதிருக்கிறது. ஏனெனில், இன்று தமிழ் நாட்டின் ஒப்பற்ற உத்மராய் விளங்குவதுடன், அரும் பெரும் தியாகிகளையும் வருங்காலத்திற்குத் திரட்டித் தந்துள்ளார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதில்லார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

"தெய்வத்தால் ஆகா தெனினும், முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்ற, தமிழ் மறை தந்த வள்ளுவர் வாக்கைக் காமராஜர் மெய்ப்பித்துவிட்டார்.

திரு காமராஜ் அவர்களின் தாயாரிடம் சென்று, "அண்ணனைப்பற்றி புத்தகம் எழுத வேண்டியிருக்கிறது; ஏதாவது குறிப்பு இருந்தால் கொஞ்சம் கூறுங்கள் அம்மா" என்று கேட்டபொழுது, அவர்கள், "நான் என்னப்பா அவனைப்பற்றிக் கூற இருக்கிறது! வீட்டிற்குத்தான் உதவாமல் போய்விட்டான்; நாட்டிற்காவது உழைப்பதற்கு, அந்த ஆண்டவன் நீண்ட ஆயுளைக் கொடுக்கட்டும்" என்று தன் ஏக மைந்தனுக்கு ஆசியளித்தார்கள்.

அதையே தமிழ் நாட்டு மக்களாகிய நாமும் விரும்புவோமாக!

வாழ்க காமராஜ்! வளர்க அவர் புகழ்!

வெல்க அவர் செயல்!

10454

வாழிய செந்தமிழ்! வாழ்க நற் றமிழர்!
வாழிய பாரத மணித் திருநாடு!
இன்றேமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மை வந் தெய்துக! தீதேலாம் நலிக!
அறம் வளர்ந்திடுக! மற மடி வுறுக!
நந் தேயத்தினர் நாடோறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

Printed at the Sadhananda Press, Virudhunagar.